WORD OF THE LORD

கன்மலை ராகங்கள்

SONG BOOK



Eva. S. வியாசர் லாரன்ஸ்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

சுவிசேஷ தென்றல்
வியாசர் S. லாரன்ஸ்
வழங்கும்

கன்மலை ராகங்கள்

எண். 12, ஸ்டீபன்சன் சாலை,
வியாசர்பாடி, சென்னை - 600 039.
தமிழ்நாடு, இந்தியா.

காணிக்கை ரூ. 35/-

வாங்கி விட்டீர்களா ?

கன்மலை ராகங்கள்

CD, MP3, VCD, வில்லு பாட்டு,
கதா காலட்சேபம், CD க்கள்,
பண், பாடல், பாடியது

சுவிசேஷ தென்றல்

வியாசர் S. லாரன்ஸ்

KANMALAI RAAGANGAL

Lyrics, Tune & Sung by
Vyasar S. LAWRENCE

சி.டி., வி.சி.டி., மற்றும் MP3
கிடைக்குமிடம்

THE LORD

வேர்ட் ஆஃப் தி லார்ட்
கிறிஸ்தவ புத்தக நிலையம்
எண். 119, சேமாத்தம்மன் நகர் 3வது செக்டார்,
கோயம்பேடு, சென்னை - 600 107.
போன் : 91-44-2479 9266, 91766 66974

THE LORD

WORD OF THE LORD
A CHRISTIAN MEDIA COMMUNICATIONS
No. 119, Seemathamman Nagar, IIIrd Sector,
Koyambedu, Chennai - 600 107.
Phone : 91- 44 -2479 9266, 91766 66974
E-mail : anburaj75gmail.com

"இசையோடு இறைவனை பாடி புகழ இன்று அநேகர் எழும்பி இருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று, ஆனால் இசையானது அதின் இலக்கனங்களுக்கும், அளவுகளுக்கும் உட்படாமற் போகுமானால் அது வெறும் ஓசையாகத்தான் இருக்கும்".

– வியாசர் S. லாரன்ஸ்

இசையை முறையோடு பயின்ற தமிழகத்தின் புகழ்பெற்ற இசையமைப்பாளர் மூலம்

உங்கள் ஒலி நாடாக்கள், VCD களுக்கு தரமான உயர்ந்த இசையமைக்கவும்,

நற்செய்தி கூட்டங்கள், ஆலய கன்வென்ஷன்கள் மற்றும் பொது நிகழ்வுகளில் (Christian Devotionals Only) ஆவிக்குரிய அனுபவம் பெற்ற இசைக்கலைஞர்களால் இசை மீட்டவும்.

உங்கள் ஆலய, குடும்ப அங்கத்தினர்களுக்கு, கீ போர்டு, டிரம்ஸ், ரிதம் பேட், ஆகிய கருவிகளை இசைக்க சிறந்த பயிற்சியை குறைந்த கட்டணத்தில் பெறவும் ஓர் அறிய வாய்ப்பு !

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

சீகன் இசை பள்ளி

Ziegen School of Music

#1, D - பிளாக், வெங்கடாபுரம், சின்னமலை, சென்னை - 600 015.

M. Immanvel (B.Musi)

Cell : 94441 50998 / 9884465188

THE LORD

WORD OF THE LORD

A CHRISTIAN MEDIA COMMUNICATIONS
No. 119, Seemathamman Nagar, IIIrd Sector,
Koyambedu, Chennai - 600 107.
எண். 119, சேமாத்தம்மன் நகர் 3வது செக்டார்,
கோயம்பேடு, சென்னை - 600 107.
Phone : 91- 44 -2479 9266, 91766 66974

சிநேகிதர்®

Registered Charitable Trust,
12, ஸ்டீபன்சன் சாலை, வியாசர்பாடி, சென்னை- 600 039. தமிழ்நாடு, இந்தியா.
E-mail : vyasarslawrence@yahoo.co.in

'எங்கள் பணிகளில் சில...'

- இறையியல் வகுப்புகள்
- இளைஞர்களுக்கு நற்செய்தி பணிகளில் பயிற்சி
- இசை பயிற்சியளித்து, தகுந்த வாய்ப்புகள் வழங்குதல்
- இசை வழி நற்செய்தியை வில்லுப்பாட்டு கதாகாலட்சேபங்கள்,
- இசை நிகழ்ச்சிகள் வழியே கிராமங்களில் அறிவித்தல்
- இசை பேழைகள், இசை குறுந்தகடுகள் வெளியிடுதல்
- இணையதளங்கள், ஊடகங்கள் வழியே நற்செய்தி அறிவித்தல்
- இலக்கிய வெளியீடுகள் மூலம் இறையியல் ஆய்வுகள்
- ஆதரவற்ற சிறுவர், முதியோர், பராமரிப்பு பணிகள்
- சுகாதார விழிப்புணர்வு முகாம்கள் / மையங்கள்

(உங்கள் நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு உண்டு...)

(இது கன்மலை ராகங்களின் சமூக சேவை அமைப்புகளில் ஒன்று)

எங்களோடு இறைப்பணிகளில்

- இணைந்து கொள்ள விருப்பமா ?
- 1/2/3 நாட்கள் கலந்து கொள்ள விருப்பமா ?
- ஒலி , ஒளி பேழைகளில் சேர்ந்து பாட விருப்பமா ?
- உதவி செய்ய விருப்பமா ?
- மாநில, மாவட்ட பிரதிநிதிகளாக செயல்பட விருப்பமா ?

உடனே அருகிலுள்ள எங்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும் :

சென்னை	: 98414 18931	குமரி	: 94434 32848
சேலம்	: 94440 59737	பெங்களூர்	: 098459 37447
கோவை	: 98429 37039	மும்பை	: 098929 39069
மதுரை	: 97519 42454	கேரளா	: 093497 65860
தஞ்சை	: 98438 07003	அந்தமான்	: 098402 20210
புதுக்கோட்டை	: 94861 76059	இங்கிலாந்து	: 00447717200795
திருவண்ணாமலை	: 98656 11437	மலேசியா	: 0060135202331
காஞ்சிபுரம்	: 94454 27202	ஸ்விஸ்	: 0041432995730

அட்டவணை

அ

அதோ அதோ இயேசு நாதர்	59
அருளும் திறந்தருளும்	91
அல்லேலூயா ஒசன்னா	22
அன்பு தம்பி தங்கச்சி	27
அன்பின் திருவுருவே எனை	55
அலை கடல் போலே அலையும்	38
அடிக்கடி மாறும் மனிதனின் நிறம்	136

ஆ

ஆறுதலின்றி அலைந்தேன்	8
ஆட்டு குட்டியானவரின் கலியாணம்	183
ஆயிரம் ஆண்டுகள் ஆளப்போகும்	93
ஆதியில் வார்த்தையானவரே	129
ஆடையணிந்த சிலை அசைந்திடுமோ	178

இ

இரண்டு பக்கம் கருக்குள்ள பட்டயம்	90
இயேசுவே	165
இல்லையென்றால்	147
இதயமே என் இதயமே - நீ	54
இயேசுவை துதித்திடுவோம்	15
இயேசுவை நேசிக்கிறேன்	35
இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்	81
இயேசுவே உம் திருமுகம் காணும்	86
இருண்ட வானிலே ஒளிதரும் தீபமே	109
இந்த பாவ மனிதரை மீட்டிடவே	124
இலேசான காரியம் - எதுவும்	33
இயேசு ராஜன் பெயரை சொன்னால்	172
இயேசு என்றாலே	180
இயேசு என்னும் நாமம்	181
இலேசான காரியம் நான் பாடினேன்	170

அட்டவணை

ஈ

ஈஸி ஈஸி டேக் இட் ஈஸி 147

உ

உலகம் என்னை வெறுத்தாலும் - முழு 92
உதிர்கின்ற சருகுகள் உதிர்ந்து போகட்டுமே 75
உலகெலாம் படைத்தவன் தாள் போற்றி 83
உபத்திரவம் இலேசானது - அதி 84
உம்மைப்போல் ஒரு தெய்வம் இல்லையே 85
உமையன்றி உலகில் யார் துணை தேவா 15
உலகின் ஒளியாக - தெய்வம் 48
உலகம் உன்னை உயர்த்திவிட்டால் 57
உந்தன் ஆட்சியின் எல்லைகட்குள்ளே 64
உம்மை பாடும் வரம் தாருமே - தேவா 105
உம்மை ஆராதிப்பேன் துதிப்பேன் - தினம் 174
உந்தன் பாதங்களில் வீழ்ந்து கதறும் 171
உப்பு தின்னவன் தண்ணீர் குடிப்பான் 171
உம்மோடு இருக்க வேணுமே - உங்க 125
உலகம் உலகம் உலகம் - இது 119
உலகம் - ஒரு 139
உம்மை அம்மா என்று கூப்பிடலாமா 115

எ

எல்லோரும் ஓர் இனம் 137
எனது கால்கள் சறுக்கும்போது 175
என்னடா உலகமிது - நில்லடா தலைநிமிர்ந்து 150
எங்கள் நடுவில் என்றும் இருக்கும் 110
எங்கள் நடுவில் 146
எந்தன் ஆண்டவர் இயேசுவே 154
எதற்கும் கலங்காத உள்ளம் தாருமே 140
என் தேசம் அழிகின்றதே 117
என் நினைவில் நிறைந்த நாட்கள் 108

அட்டவணை

எ

என் மேய்ப்பராய் இயேசு 163
என்னை தொட்டு வாழ வைக்க 106
எப்படியோ பாவம் வந்து 67
எப்படி எப்படி பார்த்தாலும் இயேசு நல்லவரே 71
எனக்காக யாவற்றையும் செய்பவரே 66
என்னை பெத்த ராசாவே - என் 62
எழுந்து வாரும் நேசரே 35
எருசலேமே எருசலேமே 1
என்ன கொடுப்பேன் இயேசுவுக்கு 9
எண்ணில்லா உம் கிருபையாலே 13
எந்தன் நேசர் அன்பை நாடும் 30
என்னை காண்கிற தேவன் இவர் 31
எண்ணிலடங்கா துன்பங்களுடே 32
எத்தனை இதயம் இருந்தாலும் 41
என்ன என்ன சந்தோஷமே 45
எங்கே தேடுவேன் 18
என்னை ஆண்டு நடத்திடும் தேவாவியே 19
என் அஸ்திபாரம் கிறிஸ்துவின் 48
என்னை சுமந்த தோள்கள் மீது 50
என் மனமே நீ கலங்கிடாதே 51
என் மனசுக்குள்ளே சில ஆசைகள் - என் 73
எனக்குள் எனக்குள் இருக்கும் 96

ஏ

ஏனிந்த மௌனம் என் செல்வமே 30

ஐ

ஐயோ ஐயோ நரகம் தெரியுதே 11

ஒ

ஒருமுறை வருவீரோ ஸ்வாமி - மீண்டும் 150
ஒரு விசை மாத்திரம் உதவி செய்யும் 57
ஒண்ணா ரெண்டா இயேசு செய்த நன்மைகள் 20
ஓடி வாங்க ஓடி வாங்க ஓடிவாங்கையா - நம்மை 124
ஓவியமாய் என்னை 161

க

கடலின் அலைகள் அடங்குமா 87
கண்ணீரில் என் ஆறுதலே 128
கடன் கொடுப்போம் - கர்த்தருக்கே 81
கண்ணீர் விட்டு கதறியழுது துடிக்கும் 94
கண்ணுக்குள் பளபளக்கும் 107
கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் 43
கடைசி காலம் இது 132
கல்வாரி அன்பை நினைத்து நினைத்து 61
கல்வாரியே கல்வாரியே - நான் 168
கள்ளு சாராயத்தினால் நீ கண்டது 52
கன்மலை மீதென் கால்கள் நிறுத்தி 1
கரங்கள் தட்டி கர்த்தரை பாடுங்கள் 2
கலைந்த மேகம்தான் உன் நினைவோ 39

கா

காலையிலே மாலையிட்டு 89
கானான்.. எந்தன் வாஞ்சை 21

கு

குட்டையில் ஊறிய மட்டைகள் தானுங்கோ 152
குண்டு மல்லி பூபூத்து பூமலரும் பாடுது 161

கே

கேட்டதையெல்லாம் தருவார் 37

கை

கையளவு மேகம் அனுப்பி வைப்பார் 59

கொ

கொஞ்சி கொஞ்சி பேசி மயக்கும் 44
கொல்கொதாவின் குருசினிலே 6

ச

சலனம் கொண்ட மனதில் 79

சா

சாதிகள் இல்லையடா 36
சாமி கும்பிட போனேன் - நான் 120

சி

சிந்திக்கும் நேரம் சிந்திக்க மறந்தால் 159
சின்ன சின்ன கண்ணே, கண்ணீர் 56
சிட்டுக் குருவியின் பாட்டை கேட்டு 133
சிந்தையை அடக்கியே சும்மா 7
சிந்திப்போம் சிந்திப்போம் செயல்படுவோம் 176
சந்தோஷம் இயேசுவே 153
சிநேகிதனே சிநேகிதனே 12
சிந்தையிலே கலந்து 16
சிட்டுக்குருவி உன்னைப்போல 61

சீ

சீயோன் பாதை சந்தோஷம் தானே 21
சீயோன் குமாரியின் சிரசினிலே 74
சீயோனின் எக்காளம் தொனித்திடுதே 116
சீயோனின் சிகரங்களில் 157

சு

சுவையான தமிழாலே 41
சுற்றி சுற்றி ஓடும் - இந்த 94

செ

செத்தவனை சுமந்து செல்லும் பொல்லாத 55

சே

சேனைகளின் தேவனே சாலேமின் 26

சொ

சொல்லி துதித்திடுவேன் 28

சொல்லாகி சுவையாகி ஸ்வரமாகி சுகமாகி 42

சொந்தம் என்று சொல்லிக்கொள்ள 99

த

தஞ்சம் உந்தன் சிலுவை நிழலில் 3

தத்தி தத்தி நடந்து வரும் சிங்கார மழலை 145

தா

தாயும் நீயே தந்தையும் நீயே 169

தாமதமேன் தயாபரனே 132

து

துங்கவனே எங்கள் யூதசிங்கம் 17

துதிகளின் நடுவில் உலவிடும் தேவன் 98

தூ

தூண்டி விட்டு வேடிக்கை பாக்குறான் 12

தெ

தென்றல் என்னை தாலாட்டும் நேரம் 114

தென்றலை சுவாசிக்கிறேன் 151

தே

தேவனே என் ஆண்டவா 72

தேவ சேனையே எழும்பிடு 182

தேனிலும் தெளி தேனிலும் 47

தொ

தொங்கிவிட்ட சதைகளிலே மேலாடை 38

ந

நல்லவர் கர்த்தர் நல்லவர் 104

நம்ப முடியா உலகம்தானடா- இது 88

நன்மையும் கிருபையும் தொடர்ந்திடுதே 32

நன்மை செய்தாலும், தீமை செய்யும் 53

நல்லவரே இயேசு வல்லவரே 25

நம்ம பிள்ளைங்க நல்ல பிள்ளைங்க 130

நம்பி வந்தால் இயேசு உன்னை 112

நா

நாம் உம்மை நேசிக்கிறேன்	131
நான்தேடும்போது அருகிலிருக்கும் ஆண்டவர்	100
நான் பாடும் பாட்டுக்கு	144
நான் பாடுவேன் என் தேவனே	103
நாசியிலே சுவாசமுள்ள நரனே - உன்னை	82
நான் செய்த பாவங்கள்	46
நான் நடந்து வந்த பாதையிலெல்லாம்	23

நி

நிலவும் வான சுடரும்	78
நிழல் தேடும் நெஞ்சமே	143
நித்திய தேவனே சத்திய மைந்தனே	80
நிரப்பிடுமே உம் ஆவியினால்	167

நீ

நீதியின் வலக்கரத்தால் நிதமும்	49
நீயே - தெய்வம் நீயே - எனக்குள்	149
நீதியுள்ள நியாயாதிபதியாக	14
நீதிமானின் கூடாரத்தில் கெம்பீர சத்தம்	126

ப

பட்ட துன்பம் போதுமடி	123
பவுலடியான் புறக்கணித்த	58
பஞ்சி நானொரு பாவியென்	44
பறந்து காக்கும் பட்சியைப்போல	139

பா

பாவம் பாவம் பாவம் 25

பார்க்கும் போது பளபளக்குது உலகம் 109

பாடுபட்டு பணத்தை சேர்த்து வைக்கின்ற 4

பாடுபட்டால் பலனிருக்கு 162

பாலும் தேனும் ஓடும் 141

பி

பிள்ளையை வளர்க்க தெரிஞ்சிக்கம்மா 10

பு

புத்தியுள்ள மனைவி 144

புவியாளும் புனித தேவன் 24

புழுதியில் அஸ்திபாரம் 113

புரட்சி பூக்கள் பூக்க வேண்டும் 68

பூ

பூரண அன்பு நெஞ்சம் நிறைந்து 9

பெ

பெத்தலையிலே எத்தனை முறை நீங்க 134

ம

மகிழ்ச்சியான குடும்பம் 158

மழை துளிகள் தாளமிட 65

மனிதரைக் கட்டி இழுக்கும் - அன்பின் 70

மனிதனின் பலவித முகங்களை 63

மலருக்கு மணம் தந்த மன்னவா 111

மலரிதழ்மேலே பனித்துளி போலே 51

மா

மாறலாம் நீ மாறலாம் 156

மார்கழி மாசத்திலே பெத்தலகேம் 95

மாயமான உலகை நாடி 121

மு

முன்னணை மீது மன்னவர் உறங்கும் 67

முன்னனையில் இயேசுவை பாலனாய் 177

முடியாததொன்றும் இல்லை 138

மெ

மெய்யான போஜனமே 40

மே

மேக வண்டியில் ஏறிச் சென்று 29

மேசியா இயேசுவே 118

ரெ

ரெண்டு மடங்கு கொடுக்க வேணும் கர்த்தாவே 179

வ

வறண்ட நிலங்களில் விதை விதைப்போம் 117

வந்தவரை தள்ளிடாமல் 113

வா

வாழ்ந்தது போதும் - நீ 166

வானமே வழிவிடு 155

வானில் ஒரு வெள்ளி 122

வி

விளக்கில்லாமலே வெளிச்சம் தேடிடும் 73

விசுவாச ஓடம் தடுமாறும் நேரம் 97

வெ

வெள்ளை மனம் கூட தொல்லையாகிவிடும் 77

வெள்ளை காகிதத்தில் கவிதை தேடுகின்ற 101

வே

வேடன் வைத்த இரையைத் தின்ன 102

வேத வாக்கியமே நமது பாக்கியமே 127

வேண்டாமையா இந்த கொண்டாட்டம் 164

வேஷம் போடுறான் 5

ஜெ

ஜெபிக்கும் நேரம் 142

ஜெனித்தார் ஜெனித்தார் 34

ஜெய் ஜெய் ஜெய் ஜெய் இராஜாதி ராஜா 66

ஸ்

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் இயேசு தேவா 60

1. கன்மலையான தேவன்

பல்லவி

கன்மலை மீதென் கால்கள் நிறுத்தி
அடிகள் உறுதிப் படுத்தும் எங்கள் இறைவா
கன்மலையானவர் கோட்டை துருகமானவர்
எனக்கொத்தாசை வரும் பர்வதமாகி பாதுகாப்பவர்

சரணங்கள்

1. வறட்சியான காலம் என்னை திருப்தியாக்கினீர்
நீர்ப் பாய்ச்சலான தோட்டம் போல செழிப்பாக்கினீர்
உருக்கமான இரக்கங்களால் முடி சூட்டினீர்
மனகலக்கம் மாற்றி உமக்குள் புது சிருஷ்டியாக்கினீர்
- கன்மலை

2. உத்தமமான வழியினில் என்னை நித்தமும் நடத்தினீர்
விடாய்த்துபோன ஆத்துமாவை ஆற்றி தேற்றினீர்
உலர்ந்துப் போன எலும்பை உயிர்கொடுத்து எழுப்பினீர்
வற்றாத நீரூற்றைப் போல வளமாக்கினீர் - கன்மலை

3. கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேனே
அவர் என்னிடமாக சாய்ந்து எந்தன் கூக்குரல் கேட்டார்
குழியில் விழுந்து மடிந்திடாமல் வலக்கரம் பிடித்தார்
அவர் துதியைப் பாடும் பாடல் எந்த வாயினில் கொடுத்தார்
- கன்மலை

2. எருசலேம் என் ஆலயம்

பல்லவி

எருசலேமே எருசலேமே
புகலிடம் எனக்கெருசலேமே
உறவுமில்லை பகையுமில்லை
உலகம் இல்லை ஒன்றுமில்லை
எருசலேம் என் ஆலயம்
இயேசு இராஜனின் இராச்சியம்

சரணங்கள்

1. மரண யோர்தான் கடந்திடுவேன்
மரண சடலம் எறிந்திடுவேன்
வறுமை வேதனை அழுகையில்லை
கவலை கண்ணீர் தொடர்வதில்லை - எருசலேம் என்

2. மரண இருளின் பள்ளத்தாக்கை
கடந்து செல்வேன் மகிழ்ச்சியோடு
பொன் பொருள் புகழ் வருவதில்லை
எண்ணில்லா துதி ஓய்வதில்லை - எருசலேம் என்

3. பளிங்கு நதியின் கரைகளோரம்
நேசர் கரங்கள் அனைத்து செல்லும்
ஜீவ கனிகள் நாளும் புசிப்பேன்
ஜீவ ஊற்றினில் தாகம் தீர்ப்பேன் - எருசலேம் என்

4. மரணத்தாவரம் குறித்த தேவா
மரண வாசல் நுழைந்திடுவேன்
மரண கூரை முறித்த இயேசுவின்
மார்பினில் நான் சாய்ந்துக் கொள்வேன் - எருசலேம் என்

3. கரங்கள் தட்டி பாடுவோம்

பல்லவி

கரங்கள் தட்டி கர்த்தரைப் பாடுங்கள் - அல்லேலூயா
ஆண்டவரைப் பாடுங்கள் ஆனந்தமாய்ப் பாடுங்கள்

சரணங்கள்

1. வானம் பூமி உண்டாக்கின அவரைப் பாடுங்கள் - நம்மை
வானலோகம் சேர்ப்பவரை வாழ்த்திப் பாடுங்கள்
- ஆண்டவரை

2. செங்கடலை பிரித்தவரை சேர்ந்துப் பாடுங்கள் - தினம்
செம்மையான இதயத்தோடு அவரைப் பாடுங்கள்
- ஆண்டவரை

3. எரிகோ மதில் உடைத்தவரை எழுந்து பாடுங்கள்
எண்ணில்லாத நன்மை செய்த இவரை பாடுங்கள்
- ஆண்டவரை

4. நல்லவர் இவர் என்பதையே ருசித்து பாடுங்கள்
வல்லவர் எங்கள் இயேசு என்று வணங்கி பாடுங்கள்
- ஆண்டவரை

5. மரித்தெழுந்த மகிபனையே மகிழ்ந்துப் பாடுங்கள்
நமக்காகப் பரிந்து பேசும் பரனை புகழ்ந்துப் பாடுங்கள்
- ஆண்டவரை

6. தாயைப்போலக் காப்பவரை துதித்துப் பாடுங்கள் - நம்
தாழ்வில் நம்மை நினைத்தவரை தினமும் பாடுங்கள்
- ஆண்டவரை

7. காலை மதியம் மாலையிலும் அவரைப் பாடுங்கள் - நடு
இராவினிலே விழித்து எழுந்து ஜெபித்துப் பாடுங்கள்
- ஆண்டவரை

4. சிலுவை எந்தன் தஞ்சம்

பல்லவி

தஞ்சம் உந்தன் சிலுவை நிழலில் - தினம்
தங்கி இளைப்பாறுவேன்
நெஞ்சின் பாரம் எந்தன் நோவும்
சிலுவையில் சுமந்தவர் நீர் - தஞ்சம்

சரணங்கள்

1. உனக்கிருக்கும் இந்த கொஞ்ச பெலத்தோடே போ
உன்னை அனுப்பிடும் தெய்வம் நானல்லவா
என்றீரே ஜெயம் தந்தீரே
வந்தேன் தந்தேன் ஏற்றுக் கொள்ளும் ஐயா
- தஞ்சம் உந்தன்

2. கண்ணீர் பள்ளத்தாக்கை கடந்து நீ போகையிலே
உன் முன் செல்லும் தெய்வம் நானல்லவா
என்றீரே பெலன் தந்தீரே
தாரும் பாரும் சோதனை காலத்தில் - தஞ்சம் உந்தன்

3. திக்கற்ற வேளை திகைத்து நின்றிருக்கையிலே
எனைக் காண்கின்ற தெய்வம் நீரல்லவா
என் குரல் அன்பாய் கேட்டீரே
வாரும் வாரும் உம் கிருபை போதும் - தஞ்சம் உந்தன்

5. நிலையில்லாத மனித வாழ்வு

பாடுபட்டு பணத்தை சேர்த்து வைக்கின்ற
கேடுகெட்ட மானிடனே கேளாய்
கூடுவிட்டு ஆவி போன பின்னே
கூட ஒன்றும் வருவதில்லை
மனிதா மனிதா
கூட ஒன்றும் வருவதில்லை

பல்லவி

மனிதா மனிதா
மானிட வாழ்வு நிலைப்பதில்லையே
நிஜமே நிஜமே
பாவத்தின் சம்பளம் மரணமே
உணர்ந்தால் உனையே
அளித்திடுவார் நித்திய ஜீவன் - எங்கள் இயேசுவே

சரணங்கள்

1. தாலாட்டி பாலூட்டிய அன்னை அழுதாலும்
தோள் மீது சுமந்து வளர்த்தத் தந்தை தடுத்தாலும்
தாரமாக வந்தவள் மார்பில் சாய்ந்தழுதாலும்
பெற்றெடுத்தப் பெண்ணும் பிள்ளையும்
புரண்டு புரண்டு அழுதாலும் - மனிதா

2. பொன்னாலும் பூவாலும் அலங்கரித்தாலும்
வண்ண வண்ண ஆடைகளை நீயணிந்தாலும்
பூவாலே மேடையிட்டு புத்தாடைப் போர்த்தி
புழுக்களுக்கிரையாக புழுதியிலே விதைத்திடுவார்- மனிதா

3. அப்பாவி போல நீ விழிச்சி நின்றாலும்
ஆளுகை அதிகாரம் படைச்சிருந்தாலும்
ஆளு அம்பு சேனை வெச்சி ஆட்சி செய்தாலும்
ஆறடி ஆழத்திலே ஆடி அடங்கிடுவாய் - மனிதா

4. மண்ணாசை பொன்னாசை பெண்ணாசையாலே
உன்னாசை உலகவாழ்வு முடியும் தன்னாலே
உன்பாவம் உனைத் தொடாந்து பிடிக்கும் பின்னாலே
எந்நாளும் இயேசுவல்லால் நித்தியத்திலிடமில்லையே
-மனிதா

6. வேஷம் போடும் மனுஷன்

வேஷம் போடுறான் - மனுஷன்
வேஷம் போடுறான்
சஞ்சலப் படுகிறான் - வீணா
சஞ்சலப் படுகிறான்

சரணங்கள்

1. ஆஸ்தி பாஸ்தி சேர்த்து வெச்சி ஆட்டம் போடுறான்
அதை வாரிக்கொள்வார் யாரோ என்பதை மறந்து
போகிறான்
பண ஆசைக்கு பேரு எல்லா தீமைக்கும் வேரு
என எடுத்துரைக்கும் வேதம் சொல்லும் வழிதுறந்து
தனைமறந்து
வேஷம் போடுறான் சஞ்சலப்படுகிறான் அழிஞ்சி
போகிறான் - மனுஷன்

2. உண்டு பெருத்து தின்னு கொழுத்து வாழ நினைக்கிறான் -
தினம்
கண்டு களித்து திரைப்படங்களை நாடி அலையிறான்
உண்டு உறங்கும் உடலிது சாவுக்கேதுவானது
ஒரு பாடையேறி மண்ணுக்குள் இறங்கி
மறைஞ்சி போகும் இதை மறந்து - வேஷம்

3. மூட நம்பிக்கை கூடாதுன்னு பாடம் படிக்கிறான்
ஆனா விளக்கு வைக்கிற நேரத்தில் கன்னத்தில் புத்திய போட்டுக்கிறான்
ஆடிமாசம் கல்யாணத்தை முடிக்க தயங்குறான்
பல சடங்கு நடத்துறான் இராகு காலம் பாக்குறான்
வீண் பாரம்பரிய பழக்க வழக்கம் மாத்த மறந்து மூடி மறைச்சி - வேஷம்

4. பரிசுத்தமான ஜாதியென்று பாட்டு பாடுறான்
பையன் கல்யாணத்துக்கு சொந்த ஜாதி பொண்ணு தேடுறான்
பொண்ணு கல்யாணத்துக்கு சொந்த ஜாதி பையன் தேடுறான்
பரலோக நாட்டிலே பல ஜாதி ஏதுங்க
பூலோக ஜாதி பேதமெல்லாம் அங்கேயில்லை இதை மறந்து - வேஷம்

5. வேஷம் கலைஞ்சிபோகும் நாளும் விரைவில் வருகுது - நடு
வானில் இயேசுவோடு தூதர்சேனை இறங்குது
பதர் பறந்து போகவே மணி களத்தில் குவியுது - வேத
வசனம் கேட்டு நடக்கும் போது வாழ்வில் இன்பம் இதை மறந்து - வேஷம்

7. கொல்கொதாவின் அன்பு

பல்லவி

கொல்கொதாவின் குருசினிலே
குருதி வெள்ளம் பாய்ந்திடுதே
கள்ளன் என் பாவம் கழுவிடவே - அவர்
கால் கரம் மார்பினில் கசிகின்றதே

சரணங்கள்

1. ஈடில்லை இணையுமில்லை
இயேசு என் நேசரைப்போல் எவருமில்லை
உதிரம் வியர்வையாகி மேனியிலே பெருகுதையா
கல்வாரி கொடுமை கண்டு எனது உள்ளம் உருகுதையா
ஏனிந்த பாடுகள் எனக்காய்தானோ - கொல்கொதாவின்

2. மகிமையின் தேவன் மனிதர் முன்னே
மனங்கசந் தழுது நின்றார் மா கொடுமை
வாரடி வாதையாலே வாடி சிதைந்த மேனியது
கல்வாரி பார சிலுவை சுமந்து நடந்த பாதையது
ஏனிந்த பாடுகள் உனக்காய் தானோ - கொல்கொதாவின்

3. பரம சுகம் தரும் உதிரம்
ஊற்றென பாய்ந்திடுதே சிலுவையிலே
காளை வெள்ளாட்டுக் கடா தீர்த்திடாதப் பாவவினை
கல்வாரி சிலுவை அன்பு நித்திய லோகம் சேர்க்கும் உன்னை
ஏனிந்தப் பாடுகள் நமக்காய்தானோ - கொல்கொதாவின்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா (2)

8. நெஞ்சமெல்லாம் நீதானையா

தேவாரம்

சிந்தையை அடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகி யென் சித்த மிசை
குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோமயானந்தமே தேசோ மயானந்தமே

பல்லவி

நெஞ்சமெல்லாம் நீ தானையா - எந்தன்
நினைவெல்லாம் நீ தானையா
பஞ்சமா பாவி யெந்தன் கெஞ்சுமனம் பதறுதையா
தஞ்சமுனையடைந்தேன் சரணம் சரணம் ஐயா

சரணங்கள்

1. குந்தி குந்தி நடந்தேன் குற்றமெல்லாம் புரிந்தேன்
சிந்தையடக்கியுந்தன் சித்தம் செய்ய மறந்தேன்
தந்திரப்பேய் சகவாசம் சதமென தானலைந்தேன்
சுந்தரமைந்தனை மீண்டும் சிலுவையில் தானறைந்தேன்
- நெஞ்சமெல்லாம்

2. விட்டு விட்டேன் உண்மையே துட்டனெனக்கார் துணையே
கெட்ட மகன் போலலைந்தேன் கட்டுக்கடங்கா திருந்தேன்
புகலிட மெனக்காரோ பிளவுண்ட மலைதானோ
அடியவர்க் கருள் சேரும் அமலனே யுமை நாடும்
- நெஞ்சமெல்லாம்

3. தத்தளித்தேன் பரனே சத்தியத்தை மறந்தே
சித்தமிலா தெவர்க்கும் நித்தியத்திலே திடமே
கத்தி கத்தியழுதாலும் கர்த்த னழைத்தாலன்றி
சுத்தர்களுறை பரமே இத்தரணியோர்க் கிலையே
- நெஞ்சமெல்லாம்

9. என்னை ஏன் நேசித்தார்

ஆறுதலின்றி அலைந்தேன்
அரவணைக்கும் தேவனே
நான் பாவியாய் இருக்கையிலே
நேசித்ததேன் இறைவா

பல்லவி

என்னை நேசித்ததேன் இறைவா
ஏராளமாய் கிருபை ஏழையென்மேல் சொரிந்து
நேசித்ததேன் இறைவா..

சரணங்கள்

1. பாவமறியாத பரம்பொருளே - உம்மை
நாட மறந்தேன் நாயகனே
தாழ்மையில் நீருதிக்க பாவியென் பாவமன்றோ
காரணமோ கருணை பொருளே - என்னை

2. மாளிகை மாடங்கள் தேடலையோ - புவி
மாமன்னர் மஞ்சங்கள் நாடலையோ
கூடுண்டு பறவைகட்கு குழியுண்டு நரிகளுக்கு
ஸ்தலமில்லையோ தலை சாய்த்துறங்க - என்னை

3. ஆயர்கள் சேர்ந்தும்மை தேடிவர - தேவ
தூதர் கணம் சூழ்ந்து பாடி வர
தாய் மடி தேடினீரோ வேறிடமுமக்கில்லையோ
தாபரமே தயவே அருள்வாய் - என்னை

10. என்ன கொடுப்பேன்

பல்லவி

என்ன கொடுப்பேன் - இயேசுவுக்கு
என்னில் ஒன்றுமில்லை ஐயா
எல்லாம் என் இயேசுவே

சரணங்கள்

1. மேய்ப்பனாய் நானிருந்தாலோ - ஒரு
ஆட்டுக்குட்டி நான் தருவேனே
புல்லுள்ள இடங்களில் என்னை
மேய்க்கும் நல்ல மேய்ப்பருக்கு - என்னில்

2. தூதனாய் நானிருந்தாலோ - ஒரு
எக்காளம் முழக்கிடுவேனே
வானவர் என் இயேசுவுக்கு
வாழ்த்துபாடி தருவதற்கு - என்னில்

3. ஞானியாய் நானிருந்தாலோ - பசும்
பொன்னும் வெள்ளி நான் தருவேனே
வெள்ளைப்போளம் தூபவர்க்கம்
அள்ளியள்ளி தருவதற்கு - என்னில்

என்னை கொடுப்பேன் - என் இயேசுவுக்கு
ஜீவ பலியாக என்னை
ஏற்றுக்கொள்ளும் இயேசையரே

11. பூரண தேவ அன்பு

பல்லவி

பூரண அன்பு நெஞ்சம் நிறைந்து
என் நேசரண்டை எனை சேர்த்திடும்
நெஞ்சின் விசாரங்கள் எனை வாட்டும் வேளை
அஞ்சேன் அவை யாவும் பறந்தோடி போகும்

சரணங்கள்

1. சுகம் தேடினேன் சுமையாகினேன்
எனைத் தேடி வந்தீர் சுமை நீக்கினீர்
கல்லான உள்ளம் கரைந்தோட செய்தீர்
வழுவாது நான் ஓட வழி காட்டினீர் - பூரண

2. வீணான உலகில் வழி மாறினேன்
கல்லான தெய்வம் நான் நம்பினேன்
வலக்கரத்தால் எனை அணைத்தீர்
தடுமாறும் என்னை தள்ளாது காத்தீர் - பூரண

3. கண்ணீரிலென் ஆறுதல் நீர்
கவலைகள் நீங்கிட கரம் பிடித்தீர்
கன்மலையே புகலிடமே
கிருபையின் கரங்கள் என் அடைக்கலமே - பூரண

12. பிள்ளையை வளர்ப்பு

பிள்ளையை வளர்க்க தெரிஞ்சிக்கம்மா தாயே - உம்
கள்ளம் ஏதும் காணலையே
பிள்ளையது பிறக்கையிலே
இல்லாத கள்ளமெல்லாம்
இடையினிலே வந்ததென்ன

சரணங்கள்

1. பச்ச பிள்ளை அழுகையிலே பசிக்குரல் கொடுக்கையிலே
பூச்சாண்டி பேர சொல்லி பொய்யாகவே மிரட்டிடாமல்
- பிள்ளையை

2. அடிதடி சண்டையிட்டு அவனெதிரில் கூச்சலிட்டு
அப்படியே சண்டையிடும் கெட்டப் பிள்ளையாக்கிடாமல்
- பிள்ளையை

3. சின்ன சின்னப் பொய் பேசி சிங்காரமாய் சிரிக்கையிலே
சீரழிக்கும் பாதையது சிறுப் பிள்ளையவன் நடந்திடாமல்
- பிள்ளையை

4. கெட்ட கெட்ட வார்த்தைகளைச் சத்தமிட்டுப் பேசும்போது
கெட்டிக்காரன் என்று சொல்லி முற்றாகவே அழித்திடாமல்
- பிள்ளையை

5. ஆண்டவரைப்போல அவன் அநுதினம் வளர்ந்திடவே
கண்ணீரைப் பெருக்கி நிதம் ஜெபித்து வேதம் சொல்லிய வழியில்
- பிள்ளையை

13. ஐயோ ஐயோ நரகம்

பல்லவி

ஐயோ ஐயோ நரகம் தெரியுதே - அங்கே
கொழுந்து விட்டு நெருப்பு எரியுதே

சரணங்கள்

1. சாமுவேலு சாரு நல்லா சாராயத்தில ஊறு
ஆபிரகாம் பாரு அங்கே புகையை ஊதுறாரு
தேவ கோபம் மீறுமுன்னே மனச மாத்த பாரு
ஐயோ நரக காட்சி பாரு
2. சாந்தியக்கா பாரு சண்டையில் உன்னைப் போல யாரு
சமாதானம் பேரு கோபம் கொண்டா முகத்தை பாரு -தேவ
3. மோசே மாமா பாரு ஏனோ மோசம் பண்ணுறாரு
ஏசுதாசு வேறு உலக வேஷம் போடுறாரு - தேவ
4. சாராளக்கா பாரு உம் புருஷன் பேச்சை கேளு
மீகாளக்கா யாரு உன் வாய கொறைக்க பாரு - தேவ
5. பால்ராஜி மாமா பாலில் தண்ணிய கலக்கலாமா
லாசரசு மாமா நீங்கள் லஞ்சம் வாங்கலாமா - தேவ
6. எஸ்தர் மாமி பாரு வேத புஸ்தகம் படிக்கிறாங்க
புஷ்பா மாமி வேற புஸ்தகம் ஒளிஞ்சி படிக்கிறாங்க - தேவ
7. லாரி அண்ணன் எழுதி வெச்ச நரகம் பாட்டுபாரு - அதை
யாராரோ எழுதியதா கதையை மாத்துறாரு - தேவ

8. பாவம் செஞ்ச ஆத்துமாவே நரகம் போய் சேரும்
பாவம் தீர்க்கும் இயேசுவண்டை பறந்து ஓடிவாரும்
தேவ கோபம் மீறுமுன்னே மனச மாத்த பாரும்
ஐயா இயேசுவண்டை வாரும்

14. சிநேகிதனே சிநேகிதனே

பல்லவி

சிநேகிதனே சிநேகிதனே
எங்கு வந்தாய் எதற்காக வந்தாய்
ஒன்றாக உண்டு ஒன்றாயுறங்கி
உன்னோடிருந்த ஒன்றான மெய்தேவ
மைந்தனை தேடியோ - சிநேகிதனே

சரணங்கள்

1. அப்பமும் மீனும் தந்து தினம் போஷித்தார் - வெறும்
தண்ணீரை இரசமாக மாற்றி ஆதரித்தார்
முடமான உன்னை சுகமாகு என்றே
கரம் கொண்டு தூக்கிய தேவனை தேடியோ - சிநேகி

2. உத்தமனாக உயர்த்திய உன்னதரை - இங்கு
முத்தமிட்டு சேர்த்து அனைத்திட வந்தாயோ
நித்திய தேவனை கெத்சமனேயில்
கட்டிப் பிடித்து காட்டிக் கொடுக்கவோ - சிநேகி

3. மனுகுலம் மீட்க மகிமையிழந்தவரை - கொடும்
சிலுவை வரையிலும் தாழ்மை தரித்தவரை
முப்பது வெள்ளிக்காசுகளுக்காய்
மகிபனைத் தள்ளி காட்டிக் கொடுக்கவோ - சிநேகி

15. தூண்டிவிடும் பிசாசு

தூண்டி விட்டு வேடிக்கை பாக்குறான் - பிசாசு உன்னை
ஆசைக்காட்டி அழிக்கப் பாக்குறான் - மிக தந்திரமாய்
தூண்டவிடாதே அவனை அண்டவிடாதே
இடங்கொடுத்தால் புகுந்திடுவான்
அழிவுக்குள்ளே நடத்திடுவான் - தூண்டி

சரணங்கள்

1. ஆதியிலே ஏவாளை ஏய்த்தவன் இவனே - அந்த
ஆதாமை பாவத்திலே சாய்த்தவன் இவனே - ஒரு
மரத்தில் பழுத்த கனியைக் காட்டி
முழு உலகையும் வீழ்த்திடவே - தூண்டி

2. சிம்சோனை தூண்டியவன் இந்தப் பிசாசே - பாவ
சங்கடத்தில் வீழ்த்தியவன் இந்தப் பிசாசே - ஒரு
பொழுதில் அழியும் இனிமைக் காட்டி
கணப்பொழுதில் அழித்திடவே - தூண்டி

3. யூதாசை தூண்டியவன் இந்தப் பிசாசே - அண்ணல்
இயேசுவையும் தொடர்ந்து வந்த ஆதி பிசாசே - இனி
தூண்டிய பின் நுழைந்திடவே
தருணம் தேடி அலையும் இவன் - தூண்டி
தூங்கிவிடாதே அவனை துளியும் நம்பாதே
தூங்கி விட்டால் அழிந்திடுவாய்
தருணமிதே விழித்திடுவாய் - தூண்டி

16. எண்ணில்லா கிருபை

பல்லவி

எண்ணில்லா உம் கிருபையாலே
எண்ணில்லா என் பாவம் தீர்ந்ததே
மண்ணில் எந்தன் கண்ணீர் யாவும்
மாற்றும் இயேசுவைத் தொழுவேன்

சரணங்கள்

1. நெஞ்சம் நொந்து வாடினேன்
தஞ்சம் உந்தன் சிலுவை நிழல்
பாவ பாரம் நீங்கவென்று
வந்தேன் உந்தன் சிலுவை வழி - அல்லேலூயா

2. வறண்டு போன வாழ்விலென்
வறட்சி நீங்க வேண்டினேன்
தாகம் தீர்க்கும் உந்தன் வேதம்
நித்திய ஜீவ ஊற்றானதே - அல்லேலூயா

3. தாயைப் போல நேசித்தீர்
தாயின் வயிற்றினில் தெரிந்தெடுத்தீர்
மாறா கிருபை என்னை மூடும்
தேவா உம்பாதம் தேடிவந்தேன் - அல்லேலூயா

17. நீதியுள்ள நியாயாதிபதி

பல்லவி

நீதியுள்ள நியாயாதிபதியாக
நீதிபரர் இயேசு வருகிறார்
நீதியாய் நியாயந்தீர்த்து
நித்தியத்திலே இடங்கொடுப்பார்

சரணங்கள்

1. வானில் தோன்றும் மின்னல் போல இயேசு வருகிறார்
வான தூதர் சூழ அண்ணல் இயேசு வருகிறார்
பரமன் இயேசு மேகம் மீது பறந்து வருகிறார்
பெரும் காகள தொனி முழங்க இயேசு வருகிறார்
வருகிறார் வருகிறார் - இயேசு வருகிறார்

2. முதிர்ந்த மணிகள் அறுக்க தேவன் வேகம் வருகிறார்
தம் களஞ்சியத்தில் சேர்த்திடவே இறங்கி வருகிறார்
அறுப்பு காலம் முடித்திடவே இறைவன் வருகிறார்
களை பதரைப் பறித்து நெருப்பில் போட விரைந்து வருகிறார்

3. நினைத்திடாத நாழிகையில் இயேசு வருகிறார் - எதிர்
நோக்கும் நம்மை ஏற்கும் தேவன் இறங்கி வருகிறார்
உதிரம் சிந்தி நம்மை மீட்ட வேந்தன் வருகிறார்
நமக்களிக்கும் பலனை ஏகதெய்வம் எடுத்து வருகிறார்

4. பாடு மரணம் சுமந்த தேவன் பறந்து வருகிறார் - புது
எருசலேமில் சேர்க்க நம்மைத் தேடி வருகிறார்
குணப்படாதப் பாவிகளைத் தீர்க்க வருகிறார் - புது
வானம் பூமி ஆட்சி நமக்கு அளிக்க வருகிறார்

18. துணையான தேவன்

உமையன்றி உலகில் யார் துணை தேவா
திரு அவதாரா தெய்வக் குமாரா
தேனிலும் இனியதும் மலரடி தா..தா..
யார் துணை தேவா... நீர் துணை தேவா ... 3

சரணங்கள்

1. பரிசுத்தம் வேண்டும் இதயத்திலே
பரிசுத்த தேவனை தரிசிக்கவே
திரு சித்தம் கொண்டெமை பரிசுத்தராக்கிட
மாசிலா உதிரமே சிந்திய தேவா - உமை

2. பாடுகள் வழியே பரமனை நாடி
பாடுபட்டோர்க்குப் பலனளிப்பீரே
அநுதினம் சிலுவைகள் சுமந்திட அருளும்
நலிந்திடும் எமக்கினி நலந்தரும் தேவா - உமை

3. வருத்திடும் பாரம் சுமந்தலைவோரே
வாருங்கள் என்றீர் பாதமே வந்தோம்
நுகந்தனை ஏற்றிட மனமதை மாற்றும்
சாந்தமும் தாழ்மையுமுள்ள எம் தேவா - உமை

4. கேட்டதையெல்லாம் ஈந்தவரே
சாற்றிடும் துதிகள் ஏற்றிடுவீரே
துணையின்றி வாடினேன் துயர்மிகுமுலகில்
வலக்கரம் பிடித்தெமை நடத்திடும் தேவா - உம்மை

19. இயேசுவையே துதிப்போம்

பல்லவி

இயேசுவை துதித்திடுவோம்
கிறிஸ்தேசுவை துதித்திடுவோம்
ஸ்தோத்திர பலிகள் அநுதினம் செலுத்தி
அவரடி பணிந்திடுவோம் - அல்லேலூயா

சரணங்கள்

1. பரிசுத்த தேவனையே பரிசுத்தமாய் தொழவே
கறை திறையில்லா பரிசுத்த வாழ்வை
கிருபையாய் அளித்தவரை
கரங்கொட்டி துதித்திடுவோம்

2. மகத்துவ தேவனையே மகிமையின் கர்த்தரையே
ஆயிரமாயிரம் தூதர்கள் போற்றிடும்
ஆண்டவர் இயேசுவையே
மகிழ்வுடன் துதித்திடுவோம்

3. சேனையின் கர்த்தரையே சேர்ந்து தொழுதிடுவோம்
சாவு பயங்கள் சோர்வுகள் நீக்கிடும்
சிலுவையின் நேசரையே
களிப்புடன் துதித்திடுவோம்

4. ஆமென் அல்லேலூயா அல்லேலூயா ஆமென்
ஆமென் ஆமென் அல்லேலூயா
ஆமென் அல்லேலூயா
அல்லேலூயா ஆமென்

20. சிந்தையிலே கலந்த இறைவன்

சிந்தையிலே கலந்து
எண்ணத்திலே நிறைந்து
செந்தமிழால் பாடவே - தேவா
ஸ்வரங்களின் வரம் தாருமே - உமைபாட
உன்னத பெலன் தாருமே

அனுபல்லவி

பாதகர் மீட்புறவே பாவியைப் போலொரு நாள்
இரட்சண்ய பலியான இரட்சகர் இயேசுவையே

சரணங்கள்

1. சத்திய குமாரனுக்கு சத்திரத்தில் இடமில்லை
கள்ளர் எமை மீட்டவர்க்கு கல்லறையில் இடமில்லை
தலைதனை சாய்த்துறங்க தற்பரன் என் இயேசுவுக்கு
சுத்த மனதை திறந்து தங்குமிடமாய் தரவே - சிந்தை

2. பட்சிக்கும் தீயெனவே முட்செடிதனில் தோன்றி
எச்சரிப்பை தந்த அட்சயன் இயேசுவையே
நிச்சயமாய் நீ அழைத்தால் பட்சமாக சேர்த்தணைப்பார்
உச்சித பலன் தருவார் சத்தியமே மனமே - சிந்தை

3. சிலுவையிலே பெருகி வழிந்திடும் அவர் உதிரம்
சீர்படுத்தும் உன்னை செம்மையிலே நடத்தும்
அடைக்கலம் தேடிடுவாய் அருள்மழை ஊற்றிடுவார்
அவர்பதம் தேடிடுவாய் அநுதினமே மனமே - சிந்தை

21. யூத சிங்கம் உறங்குவதில்லை

பல்லவி

துங்கவனே எங்கள் யூதசிங்கம்
சந்தித்ததோர் அருணோதயம்
மரண இருளை நீக்கும் ஒளியே
மகிமையாய் இஸ்ரவேலிலே
சகல ஜாதி ஜனங்களும்
சீலராய் மனந்திருந்தவே - ஆஹா
நீயோ பாலகனே இரட்சண்ய கொம்பாய் வந்தவனே - துங்க

சரணங்கள்

1. கிருபை வாசல் திறந்திட
நன்மை புவியில் மலர்ந்திட
ஜீவ ஒளியாய் விளங்கிட
நீடுவாழ்வினை வழங்கிட - துங்க

2. கனியினால் வந்த பாவம் தீர
கன்னியின் மகவாய் பிறந்தவர்
மாசிலா மணியானவர்
மேசியா மனுவாகினார் - துங்க

3. இஸ்ரவேலைக் காக்கும் தேவன்
உறங்கவில்லை தூங்கவில்லை
களங்கமில்லா ஞானமே
நளதமாய் மணம் வீசியே - துங்க

22. என் நேசரை எங்கே தேடுவேன்

பல்லவி

எங்கே தேடுவேன்
என் நேசர் இயேசுவை
நகரத்தின் நடுவினிலோ
நடு இராவிலும் காணவில்லை - எங்கே

1. அகிலம் படைத்த ஆண்டவரை - அன்று
ஞானிகள் தேடினார்
தாழ்மையில் உதித்த தற்பரனை - மன்னன்
அரண்மனையில் தேடினார்
அவர் அங்கே இல்லையே
வேறெங்கே தேடுவேன் - நகரத்தின்

2. வழியினில் உறவினரிடையினிலே - அன்று
மரியாள் தேடினாள்
ஆலயந்தனிலே அற்புதரிருக்க
அறியாமல் தேடினாள் - அவர் அங்கே

3. கல்லறைதனிலே கர்த்தனை - அன்று
சீடர்கள் தேடினார்
உயிர்தெழுந்தவரை மரித்தவரிடையே
அறியாமல் தேடினார் - அவர் அங்கும்

எங்கே தேடுவேன் - என்
நேசர் இயேசுவை
உலகத்தின் இறுதிவரை
உங்களோடு இருக்கிறேன் - என்றார்
வேறெங்கே தேடுவேன்..

23. ஆண்டு நடத்தும் தேவ ஆவியானவர்

என்னை ஆண்டு நடத்திடும் தேவாவியே
முற்றும் வழிநடத்தும்
குற்றமில்லாமையிலே - அன்பில்
பரிசுத்தம் காத்திடவே - என்னை

சரணங்கள்

1. சீர்குலைந்தேன் முற்றும் சீரழிந்தேன்
சித்தங் கொண்டு என்னை தெரிந்தெடுத்தீர்
நிந்தனைகள் நீக்கிடவே - என்
நிபந்தனை ஏதும் சொல்லாதவரே - என்னை

2. எல்லையில்லை அன்பிற்கெல்லையில்லை
கல்வாரி நேசரின் காயங்களே
சுமந்தவரே ஏந்திடுமே - எனை
சுமந்திட சிலுவைகள் ஏற்றிடுவேன் - என்னை

3. கிருபையிலே தேவக் கிருபையிலே
பெலப்பட தடைகளை நீக்கினீரே
அடைக்கலமே அளித்தவரே - உயர்
கறைபடா வாழ்வெனக்களித்திடுமே - என்னை

4. ஜீவநதி பொங்கி எனில் பெருக
உமது வசனங்கள் ஊற்றிடுமே
ஜீவன் எனில் இருக்கும்வரை - என்
உமக்கென வாழ்வினை ஈந்திடுவேன் - என்னை

24. ஒண்ணா ரெண்டா

பல்லவி

ஒண்ணா ரெண்டா இயேசு செய்த நன்மைகள் அதை
எண்ணியெண்ணி பாடுகிறேன் உங்கள் நடுவில்
இரட்சிப்பென்னும் பாத்திரத்தைக் கையிலெடுப்பேன் - என்
இரட்சகரைப் பாடி தினம் போற்றிடுவேன் - ஒண்ணா

சரணங்கள்

1. வியாதியின் வேதனையில்
இயேசு நல்ல வைத்தியரே
பாவபாரம் நீக்கி என்னை
பாட்டுப் பாட வைத்தவரே
ஏழு ஸ்வரங்கள் நான் எழும்பிப் பாடுகிறேன்
துதி கீதங்களே அநுதினம் பாடிடவே - இரட்சிப்

2. பர்வதங்கள் நிலை பெயர்ந்து
மலைகள் விலகி வீழ்ந்திடினும்
விலையிலா கிருபை என்றும்
விலகிடாது என் மகனே
நம்பி வருவாய் அவர் கிருபை சூழ்ந்திடுமே
மனமே சுகமே அருள்வார் பரமே - இரட்சிப்

3. வலக்கரம் பிடித்திடுவேன்
வழுவாமல் காத்திடுவேன்
நித்தியத்தில் சேர்த்திடவே
நித்திய நன்மைகள் உனக்களிப்பேன்
என்றுரைத்தவர் எங்கள் இயேசு இரட்சகரே
துதிபாடிடவே சந்தக் கவிபாடிடவே - இரட்சிப்

4. கண்ணீர் துடைத்திடுவார்
களங்கம் நீக்கி தேற்றிடுவார்
கவலைகள் போக்கி எந்தன்
கலக்க மகற்றுவார்
தேனைப் போலவே தேவ கானம் பாடவே
எனை மாற்றினார் சொந்த மகனாக்கினார் - இரட்சிப்

25. கானான் தேசமே என் வாஞ்சை

கானான்.. எந்தன் வாஞ்சை
நான் ஆசிக்கும் தேசமே ஜீவ நதிக்கரையில்
மாதந்தோறும் புது கனி தரும் - கனி
விருட்சங்கள் செழித்திடும் - கானான்

சரணங்கள்

1. பொங்கி பெருகும்
தெள்ளிய பளிங்கு நீரோடைகளில்
நேசரென் இயேசுவின்
அருள் நிறை விழிகளை அருகினில் காணும் - கானான்

2. சூரியன் இல்லை - தேவ
ஆட்டுக்குட்டி அவரே வெளிச்சம்
நீதியின் சூரியன்
நகரத்தின் நடுவினில் ஜொலித்திடும் தேசம் - கானான்

3. ஆலயம் இல்லை - சர்வ
வல்லமை தேவன் அங்கு ஆலயமே
இராவில்லை சாவில்லை
தீட்டு பொய் அருவருப்பு எதும் அங்கில்லை - கானான்

26. சீயோன் பாதை

பல்லவி

சீயோன் பாதை சந்தோஷம் தானே
சோர்ந்து போவதேனோ
சீயோன் மலை நேசரைக் காணலாம்
ஆ...இன்ப நாளென் வாழ்விலே
ஆயத்தமா... என் நண்பரே

சரணங்கள்

1. கிறிஸ்துவுக்குள்ளே மரித்தவரெல்லாம்
ஒன்றாய் சேர்ந்திருப்பார்
வருத்தம் பாரம் பகை சிநேகம்
மறந்தே ஓய்ந்திருப்பார்
மரிக்காதிருக்கும் பரிசுத்தரெல்லாம்
ஆயத்தமாயிருப்பார் - நீயும் இன்றே ஆயத்தமா

2. ஆத்தம நேசரின் அருகினில் ஆயிரம்
தூதர்கள் சூழ்ந்திருப்பார்
தூயரின் அருகே துதிகளைச் சொல்லி
நாமும் காத்திருப்போம்
பாடுகள் யாவையும் பாட்டுகளாக
பரமன் மாற்றிடுவார் - நீயும் இன்றே ஆயத்தமா

3. மகிமையின் தேவனை மாட்சிமையாக
மகிமையில் கண்டிடலாம்
மரணம் வென்ற மகத்துவ தேவனின்
மார்பினில் சார்ந்திடலாம்
பரிந்து பேசும் பரமன் இயேசுவின்
தேசம் சேர்ந்திடலாம் - நீயும் இன்றே ஆயத்தமா

27. அல்லேலூயா ஓசன்னா

பல்லவி

அல்லேலூயா ஓசன்னா - உன்
வாழ்க்கை ரொம்ப மோசந்தான் - நான்
உள்ளத சொன்னா கோபம் எதுக்கண்ணா - இந்த
உலகவேஷம் போடும் நீயும் உண்மை சீஷனா - இயேசுவுக்கு

சரணங்கள்

1. உத்தமனை போல நிமிர்ந்து மற்றவரை குற்றங்குறைகள் கூறி
தப்பிவிட நினைச்சிடாதே பரிசேயன் சென்ற வழியிலே
சுத்தமனம் இல்லையென்றால் தெய்வலோகம் சொந்தமில்லை
சுத்தமனங் கொண்டு சுத்தரிடம் சொல்லு நித்திய நரகம் உனக்கில்ல - அல்லேலூயா

2. பாடுபட்டு பணத்தை சேர்த்து குவித்திட பல வழிகள் தேடி
பொய்யும் புரட்டும் பேசி அழியும் பொருளை சேர்கிறான்
பணத்துக்கு பல்லிளிச்சா பரலோகம் சொந்தமில்லை
பதறி கதறி அழுதாலும் வருகையிலுனக்கிடமில்லை - அல்லேலூயா

3. தூஷணங்கள் பேசும் உதட்டில் துதியின் கீதம் தொனிக்குதடா
சச்சரவு சண்டைகளிட்டு சமாதானம் கூறுதடா
சுயநல பேய் பிடிச்சா சொர்க்கலோகம் சொந்தமில்லை
சுற்றி சுற்றி வந்து கதறினாலும் சுத்தர்கள்
கூட்டத்திலிடமில்லை - அல்லேலூயா

28. நான் நடந்து வந்த பாதை

பல்லவி

நான் நடந்து வந்த பாதையிலெல்லாம்
என்னை சுமந்து வந்த நேசர் இயேசுவே
கடந்த கால பாவங்களெல்லாம் - கொடும்
குருசில் சுமந்து தீர்த்த நேசரே

சரணங்கள்

1. தாயாரின் வயிற்றினில் உருவானமுதல் - எனை
தமக்காக தெரிந்து கொண்டு பிரித்தெடுத்தீர்
ஒரு தகப்பனைப் போல் - எனை சுமந்தவரை
தினம் தழுவிடுவேன் - சிறு பிள்ளையைப் போல்
மார்போடு அணைத்தவரை பாடிடுவேன் - முழு
மனதோடு சேர்ந்தவரை துதித்திடுவேன்

2. வழிமாறி ஓடி ஒரு ஓடத்திலே - கொஞ்சம்
இளைப்பாற நினைத்தேன் அடி தளத்தினிலே
வலக்கரம் கொடுத்து எனை எடுத்து
மீன் வயிற்றினிலும் தனி இடங்கொடுத்து
அழியாது காத்தவரைப் பாடிடுவேன் - வழி
விலகாது மீட்டவரைத் துதித்திடுவேன் - நான்

3. வெகுதூரம் நடந்தே ஒரு மலையருகில் - நான்
களைப்பாற சாய்ந்தேன் சூரைச் செடி நிழலில்
இரு வேளையிலும் கரும் காகம் கொண்டு
சுவை கறியுடனே தினம் அப்பம் கொடுத்து
பசி தாகம் தீர்த்தவரை பாடிடுவேன் - எனக்கு
இளைப்பாறுதல் ஈந்தவரை துதித்திடுவேன் - நான்

29. புவியாளும் புனித தேவன்

பல்லவி

புவியாளும் புனித தேவன்
மனுவாக வந்ததேனோ
புவியாளும் புனித தேவன்

அநுபல்லவி

புவியாளும் புனித தேவன் இங்கு
பாவம் போக்க வந்ததேனோ
மரியாளின் மைந்தனாக
மனுவாக வந்ததேனோ - புவியாளும்

சரணங்கள்

1. மேய்ப்பர் அறிஞர் போற்ற - இந்த
இகம் மீட்க வந்த தேவன்
விண் தூதர் சூழ்ந்து வானில்
துதி கீதம் கூடி பாட
மகிழ்ந்தாட பாலன் பிறந்தார் - புவியாளும்

2. அறிஞோர் விரைந்து வாழ்த்த - மா
மறையோர்கள் ஏந்தி போற்ற
காரிருளை நீக்கும் தீபம்
அருணோதயம் என் இயேசு
கருணாகரன் பிறந்தார் - புவியாளும்

3. ஞானம் வளர்த்தி தேவ கிருபை
மானிடரின் தயவில் வளர்ந்தார்
தந்தை சொல்லைக் கேட்டு நடந்தார்
தாய் வார்த்தைக் கீழ்ப்படிந்தார்
தயவுள்ள தேவ தேவன் - புவியாளும்

4. நானிலம் ஓங்க செய்ய - இங்கு
நடமாட வந்த தெய்வம்
நரர் பாவம் தீர்ந்து போக
நானிலத்தின் மீது தேவன்
நரனாக வந்து பிறந்தார் - புவியாளும்

30. பாவம் பாவம் பாவம்

பல்லவி

பாவம் பாவம் பாவம்
உன்னை சேர்க்கும் நரகம் நரகம்
வாரும் வாரும் வாரும் - இயேசு
பாதம் சேரும் சேரும்

சரணங்கள்

1. கோபம் என்னும் பாவம் கொடும் நரகில் வாட நேரும்
மோகம் என்னும் பாவம் நீ நரகில் உன்னை சேர்க்கும்
வேகம் வேகம் வேகம் நீ போகும் பாதை நாசம்
பாவம் சாபம் போக்கும் நாமம் இயேசு நாமம் என்பதாகும்
- பாவம்

2. பேசும் வார்த்தை யாவும் மிக சுருக்கமாக வேணும்-வீண்
வார்த்தை பேச்சு யாவும் நீ கணக்கு கொடுக்க வேணும்
வேணும் வேணும் வேணும் நாவடக்கமிருக்க வேணும்
பாவம் சாபம் போக்கும் நாமம் இயேசு நாமம் என்பதாகும்
- பாவம்

3. காணும் காட்சி யாவும் மிக கவர்ச்சியாக தோணும்-அதை
வெறுத்து உலகில் நீயும் நல்ல சாட்சியாக வேணும்
பாடும் பாடும் பாடும் பரன் பாதம் தேட நாடும்
பாவம் சாபம் போக்கும் நாமம் இயேசு நாமம் என்பதாகும்
- பாவம்

31. இயேசு நல்லவர் வல்லவர்

பல்லவி

நல்லவரே இயேசு வல்லவரே - புது
நன்மைகள் கிருபைகள் தருபவரே
அல்லேலூயா அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

சரணங்கள்

1. காற்றும் கடலும் கீழ்படியும் - ஒரு
வார்த்தை சொன்னால் அலை அடங்கிவிடும்
நோய்களும் பேய்களும் ஓடிவிடும்
பாவமும் சாபமும் நீங்கிவிடும்
- நல்ல

2. நொறுங்குண்ட இதயத்தை மாற்றிடுவார் - தம்
உதிரத்தினால் ஜெயம் அளித்திடுவார்
மனங்கசந்தழுதிடும் வேளையெல்லாம்
மன்னவர் இயேசென்னை தேற்றிடுவார் - நல்ல

3. பூமியும் நிறைவும் அழிந்திடுமே - அவர்
வாயின் வசனங்களோ நிலைத்திடுமே
துதிகளின் பெருஞ்சத்தம் எழும்பிடவே
எரிகோ மதில் சுவர் இடிந்திடுமே - நல்ல

4. ஒருமுறை மனிதனாய் வந்தவரே - தானே
ஒருமுறை பலியாய் மடிந்தவரே
மறுமுறை வருவேன் என்றவரே
மறுபிறப்படைந்தவர் மகிழ்ந்திடவே - நல்ல

32. சிலுவை மொழிகள்

பல்லவி

சேனைகளின் தேவனே சாலேமின் இராசனே
முள்ளாலே முடிசூடி மரசிலுவை சுமந்தார்
மூன்றாணியால் துளைத்து முகத்தினில் அறைந்தாலும்
மன்னித்த மாதயவை எண்ணி எண்ணி பாடுகிறேன்

சரணங்கள்

1. மா பாதகம் செய்தார் மனுகுல மாந்தரெல்லாம்
மன்னிக்க வேண்டுமையா பரலோக தந்தையென்றார்
அடங்கா பிள்ளையைப் போல் அநியாயம் செய்தார்
ஆனாலும் ஆண்டவரோ அறியாமற் செய்த தென்றார்

2. பொல்லாத பாதகனை கள்ளன் என தீர்ந்தவனை
நல்லாயன் இயேசு சொந்த பிள்ளையென சேர்த்தணைத்து
பாவங்களை பரிகரித்து தந்திடவே பரதீசு
நாளையென நாட்கடத்தா்தின்றுன்னை சேர்ப்பேன் என்றார்

3. தந்தையென தாயுமென சொந்தம் கொண்டாடினவர்
மாது மரியாள் இனியுன் தாயாவாள் என்மகனே
ஆறா துயர்களைவாய் அன்னையா யிருந்தவளே
அன்பான சீடனினி சேயாவான் சேர்த்திடுவாய்

4. கைவிட்டதேன் தேவா கைவிட்டதேன் என்றார்
நம்பி வந்த பேரை என்றும் கைவிடாத சேயன் இவர்
தாங்காத வேதனையோ தாயே தயாபரனே
தானாக ஜீவன் தந்த தத்துவமே வான் பொருளே

5. தாகங்கொண்ட பேர்களையும் தன்னிடமே சேர்த்திடுவார்
தாராளமாய் ஜீவ நீரூற்றாய் மாற்றிடுவார்
தூய இரத்தம் வேளியேறி பொன்மேனி இருண்டிடவே
தாளாத தாகத்தினால் தாகமென கூவுகின்றார்

6. ஆதிமுதலானவரே அநாதி ஆண்டவரே
தந்தையிட்ட சேவைதனை சிரம் மேலே சுமந்தவரே
வந்த பணி முடித்துவிட்டேன் உந்தன் சித்தம் தீர்த்துவிட்டேன்
எல்லாம் முடிந்ததென்ற எந்தை பராபரனே

7. தந்தை குமாரனுக்கு அன்பாகவே யளித்த
விந்தையான ஆணையிது யாரறிவார் பாரினிலே
தானாகத் தந்திடுவார் தானாகவே யெடுப்பார்
அன்பான தந்தை தந்த விந்தையான ஆணையிதே

33. அன்பு தம்பி தங்கச்சி

பல்லவி

அன்பு தம்பி தங்கச்சி
அப்பன் வருகை நெருங்கிடுச்சி
அர்மேகெதோன் யுத்தத்துக்கு
காலம் நேரம் வந்திடுச்சி

சரணங்கள்

1. அண்ணல் இயேசு இராஜனின்
வருகை நாள் நெருங்கிடுச்சி
மின்னல் போல மேகம் மீது
தோன்றும் நாளும் வந்திருச்சி - அன்பு

2. யுத்தங்கள் பெருகிடுச்சி
அத்திமரந் துளிர்த்திடுச்சி
வான அதிசயங்களோடு
ஒலிவமலை வெடிச்சிடுச்சி - அன்பு

3. வான பறவைகட்டு
விருந்து வேளை வந்திருச்சி
வடதிசை சேனை திரண்டு
வரிசையாக நின்னுடுச்சி - அன்பு

34. எந்நாளும் துதிப்பேன்

பல்லவி

சொல்லி துதித்திடுவேன் - அநுதினம்
சொல்லி துதித்திடுவேன்
எண்ணிலா நன்மை செய்த
அன்னை நிகர் இயேசுவை - நிதம்

சரணங்கள்

1. கள்ளமுறும் பாவியெனை தள்ளி விடாதவனை
தெள்ளமுத மூருகின்ற சொல்லமுத மீந்தவனை
உள்ள களங்க மெலாம் உதிரங் கொண்டேயழித்து
அள்ளியணைத்து எனையாட் கொண்ட ஆண்டவனை

2. அலகது அத மேவை அந்நாளிலேய்த் திடவே
ஆரோகணித்து வந்து ஆழியிலாழ்த் திடவே
விட்புல மேகியுயி ரளித்தெழுந் தேகியவன்
அப்பா இப்பாரதி லெனை யாட் கொண்ட ஆண்டவனை

3. பொய்யாயிப் பூவினிலே ஒய்யார மாயுழன்றேன்
அய்யா யெம்மீதினிலே மெய்யாவி யூற்றிடுமே
எக்காளந் தாந் தொனிக்க சொக்க நகர் சேர்த்திடுமே
ஒப்பார் மிக்காருமிலா தாட் கொண்ட ஆண்டவனை

35. மேகமீது ஏறிச்செல்வேன்

பல்லவி

மேக வண்டியில் ஏறிச் சென்று என்
மேசியாவை நான் கண்டிடுவேன்
பாவமில்லா பரலோக நாட்டிலென்
இயேசுவோடு அரசாண்டிடுவேன்

சரணங்கள்

1. காளையும் சிங்கமும் ஒருமித்து சேர்ந்து கலந்து வாழும் நாடு
காலையும் மாலையும் இரவு பகலென்ற பேதமில்லாத நாடு
சாபமில்லா நாடு அது ரோகமில்லா நாடு
வறுமை வேதனை வலிய சோதனை வாட்டிடாத ஒரு நாட்டினுக்கே
- மேக

2. பாம்பின் தலையை நசுக்கிய எங்கள் பரமன் ஆளும் நாடு
பாம்பு புற்றினில் கரங்களை வைத்து குழந்தை விளையாடும் நாடு
தீட்டில்லாத நாடு அதை தீர்த்தவரின் நாடு
ஆட்டுக்குட்டியின் உதிர ஊற்றினில்
ஆடை தோய்த்தவர் வாழும் நாட்டுக்கே - மேக

3. மீட்பரின் நாமம் அறிந்தவர்கள் ஒன்று சேர்ந்து வாழும் நாடு
மாசிலாத தேவ மைந்தனோடு தினம் பேசி மகிழ்கின்ற நாடு
இருள் நிறையா நாடு தேவ அருள் குறையா நாடு
அன்பர் இயேசுவின் ஆறா காயங்களை
அருகில் கண்டு அநுராகம் பாடவே - மேக

36. செந்தமிழ் நாடு

பல்லவி

எந்தன் நேசர் அன்பை நாடும்
செந்தமிழ் நாடு - தெள்ளு தமிழ்
பண்பாடும் பைந்தமிழ் நாடு

சரணங்கள்

1. திராவிட தந்தை எங்கள் ஆபிரகாம் அண்ணலுக்கு
மேதினியில் நாகரீகம் சொல்லி தந்த திருநாடு
நீதியுயர் நூல்களெல்லாம் ஓதி பலர் வாழ்ந்திருந்தும்
சாதி பேதம் பேசி இன்று தாழ்ந்து போன தமிழ்நாடு
பக்தியில் சிறந்த நாடு - இந்த
பாருக்குள்ளே நல்ல நாடு - எந்தன்

2. ஈரடியில் இறையருளை எடுத்து வைத்த திருக்குறளை
வள்ளுவனை உலகினுக்கே தந்த தெய்வ திருநாடு
வீரமா முனிவரோடு எங்கள் வேத நாயகமும்
இயேசுவையே பாட செய்த இணையில்லாத திருநாடு - பக்தி

3. பட்டினத்து அடிகள் கூறும் பரமகுரு இயேசு என்றும்
பதினெட்டு சித்தர்கள்கண்ட ஜெயஜோதி இயேசு என்றும்
இத்தரையின் இறைவன் எங்கள் இயேசு என்பதுரைத்திருந்தும்
பக்தி நெறி பாதை மாறி வாழும் எங்கள் வளநாடு - பக்தி

37. மரியாள் தாலாட்டு

பல்லவி

ஏனிந்த மௌனம் என் செல்வமே
உன்னை யன்றி எனை அண்டிவர - துணை
யாருண்டு கண்ணே யாருண்டு கண்ணே
ஆராரிராரோ ஆராரிரோ

சரணங்கள்

1. பாலூட்டினேன் வன தேனுட்டினேன் - என்
மடிமீது சாய்துனை சீராட்டினேன் - இன்று
செந்நீரில் நீராட்டி சிதைந்த உன் மேனியை
மடி மீது வைத்து கதறுகிறேன் - ஐயா

2. நோய் பிணி வந்து நீ மரித்திருந்தாலோ
பாவி நான் மனம் ஆறி ஓய்ந்திருப்பேன் - இன்று
பாதகன் போல் தொங்க பாவம் என்ன செய்தேன்
பதறுதையோ மனம் பொறுக்கலையே - ஐயா

3. சிறு பிள்ளையாய் எந்தன் கரம் பிடித்தன்று
எருசலேம் வந்தது நினைவில்லையோ - இன்று
நீயின்றி போனால் மகனெங்கே என்றால்
பதிலென்ன சொல்வேன் புரியலையே - ஐயா

38. என்னை காண்கிற தேவன்

பல்லவி

என்னை காண்கிற தேவன் இவர்
உறங்காதவர் தூங்காதவர்
இரவும் பகலும் காத்திடுவார்

சரணங்கள்

1. சிங்க கெபியினில் சிங்கங்கள் நடுவில்
சேதம் வராதென்னை காத்துக் கொண்டார்
ஆராதிப்பேன் இடைவிடாது
கடைசி மட்டும் தேவன் காக்க வல்லவர் - என்னை

2. அக்கினி சூளை தழல் நடுவினில்
விடுவித்து என்னை காத்துக்கொள்வார்
எரிந்து சாம்பல் ஆகிடினும்
மறுதலித்திடாமல் காக்க வல்லவர் - என்னை

3. அலைகள் மீது நடந்து செல்வேன்
அவைகள் என்மேல் புரள்வதில்லை
கரங்களை ஏறெடுப்பேன்
கன்மலையான தேவன் காக்க வல்லவர் - என்னை

4. சீக்கிரமாக சாத்தானை எந்தன்
கால்களின் கீழ் நசுக்கிடுவார்
அஞ்சிடேனே ஆபத்திலே
இயேசு என் நேசர் என்னைக் காக்க வல்லவர் - என்னை

39. துன்பங்கள் வழியே தூயவரை காண்பேன்

பல்லவி

எண்ணிலடங்கா துன்பங்களுடே
என்நேசர் இயேசுவை பின் செல்லுவேன்
என் ஆத்துமா வாழ்வது போலே
வாழ்ந்திட வாழ்த்திடுமே

சரணங்கள்

1. அறையுண்ட கரங்களினால்
அணைத்தென்னை ஆதரிப்பார்
ஆளுகை செய்திட அவர் சுதனாய்
அதிகாரம் தந்து மகிழ்வார்

2. சிந்தையில் பாவங்களை
நீக்கிய நாதனவர்
நீதியிலே அவர் முகத்தை
தரிசனம் செய்திடுவேனே

3. துருத்தியில் சேர்த்திடவே
கண்ணீரெல்லாம் துடைப்பார்
மகிமையில் என் கிரீடங்களில்
வைரங்களாய் அலங்கரிப்பார்

4. பரிசுத்தவான்கள் பலர்
மண்ணில் மறைகின்றாரே
ஏழை என்னை நீர் அழைக்கும் வரை
இயேசுவே உம்மை பின் செல்வேன்

40. நன்மையும் கிருபையும் தொடரும்

பல்லவி

நன்மையும் கிருபையும் தொடர்ந்திடுதே
நாதன் இயேசு என்னோடு இருப்பதால்
அவர் சிலுவை எந்தன் மேன்மையே
அதின் நிழலில் தொடரும் எனது வாழ்கையே

சரணங்கள்

1. உங்களால் உண்டானதல்ல - மீட்பு
கிருபையின் ஈவல்லவா
நம்மில் விசுவாசம் துவக்கிடும் தேவன்
முடிவு பரியந்தம் நடத்திடுவார்

2. அழைத்தவர் உண்மையுள்ளவர் - நம்மை
முன்குறித்த தேவனல்லவா
விருப்பமும் செய்கையும் உண்டாக்கும் தேவன்
முடிவு பரியந்தம் நடத்திடுவார்

3. மனுஷரால் கூடாததுண்டு - ஆனால்
தேவனால் கூடுமல்லவா
நற்கிரியை துவங்கினார் நம்பிக்கையின் தேவன்
முடிவு பரியந்தம் நடத்திடுவார்

41. இலேசான காரியம்

பல்லவி

இலேசான காரியம் - எதுவும்
இலேசான காரியம்
பெலமுள்ளவன் - பெலனற்றவன்
யாராயிருந்தாலும் உதவிகள் செய்வது - இலேசான காரியம்
உமக்கது இலேசான காரியம்

சரணங்கள்

1. மண்ணை பிசைந்து மனிதனை படைப்பது
இலேசான காரியம்
மண்ணான மனிதர்க்கு மன்னாவை தருவதும்
இலேசான காரியம்

2. பெருமழை பெய்தும் பேழையை காப்பது
இலேசான காரியம்
பெருங்கடல் பிளந்து பாதையை வகுப்பதும்
இலேசான காரியம்

3. கூழாங்கல்லாலே கோலியாத் வீழ்ந்தது
இலேசான காரியம்
ஆழ்கடல் மீன் அதில் அடைக்கலம் /வரிப்பணம் தருவதும்
இலேசான காரியம்

4. கற்பாறை போலே கடல்மேல் நடப்பது இலேசான காரியம்
கற்சாடி நீரை கனிரசமாக்குதல்
இலேசான காரியம் - நம்
இயேவுக்கு இலேசான காரியம்

42. இயேசு ஜெனித்தார்

பல்லவி

ஜெனித்தார் ஜெனித்தார்
எங்கள் ஜெகதல இரட்சகனே
உதித்தார் உதித்தார் - இங்கு
உயர் மனுவேலனே - ஜெனி

சரணங்கள்

1. கந்தைகளணிந்தவரே - பாவ
கந்தைகளகற்றிடவே
சொந்த குமாரனாய் சொந்தம் பாராட்டியே
விந்தையாக ஜெனித்தார் - ஜெனி

2. உன்னதம் துறந்தவரே - எமை
உன்னதராக்கிடவே
கண்மணி பாலனாய் கனி வினையகற்ற
கன்னியின் மடியிலுதித்தார் - ஜெனி

3. வானம் திறந்திடவே - வான
சேனைகள் துதித்திடவே
ஞானியர் தேடிட இடையர் வாழ்த்திட
இனிய தேவன் பிறந்தார்

4. தலைமுறை தலைமுறையாய் - அவர்
இரக்கங்கள் முடிவதில்லை
இரட்சண்ய வார்த்தையே
இரட்சகர் இயேசுவே
இகத்தின் மீது ஜெனித்தார் - ஜெனி

43. இயேசுவை நேசிக்கிறேன்

பல்லவி

இயேசுவை நேசிக்கிறேன் அவர் என்னை நேசிக்கிறார்
காசினிமீதினிலே என் நேசருக்காய் உழைப்பேன்

சரணங்கள்

1. வலக்கரம் பிடித்திடுவார் பல வரங்களை அளித்திடுவார்
வழுவாமல் காத்திடுவார் என் வாதைகள் நீக்கிடுவார்
2. கன்மலையாகிடுவார் மன கலக்கங்கள் போக்கிடுவார்
கருத்துடன் ஜெபிக்கையிலே நான் கேட்டதை கொடுத்திடுவார்
3. வானத்தில் தோன்றிடுவார் பெரும் காகள தொனியுடனே
நியாயங்கள் தீர்த்திடவே நம் வானபரன் வருவார்
4. கரங்களை அசைத்திடுவார் அந்த காயங்கள் பார்த்திடுவேன்
சிலுவையின் நேசரையே தினம் சார்ந்திளைப்பாறிடுவேன்
5. ஆயிரம் ஆண்டுகளே அவரோடரசாண்டிடுவேன்
பூரண சீயோனிலே நான் நீடூழி வாழ்ந்திடுவேன்

44. எழுந்து வாரும் நேசரே

பல்லவி

எழுந்து வாரும் நேசரே
வயல் வெளியில் போய் தங்குவோம்
திராட்சை கொடிகள் துளிர்த்ததோ - அதின்
பூ மலர்ந்து சிரித்ததோ
மாதுளம் செடி பூத்ததோ - என
பார்த்து வருவோம் நேசரே - எழுந்து

சரணங்கள்

1. சாலமோன் திரைகளைப் போல் - நான்
கறுப்பாய் இருந்தாலும் - என்
ரூபவதியே பிரியமே - என
அழைத்து அணைத்த நேசரே - எழுந்து

2. கன்மலை வெடிப்புகளில் - உயர்
சிகரங்கள் மறைவிடத்தில் - தினம்
தங்கிடும் என்னை கன்மலை மீது
நிறுத்தவாரும் நேசரே - எழுந்து

3. உறங்கிடும் வேளையிலும் - என்
இதயமோ விழித்திருக்கும் - நம்
நேசரின் சத்தமே கேட்டிட நித்தமே
ஆவலாய் உள்ளம் பொங்கிடுதே - எழுந்து

45. சாதி பேதங்கள் ஏது

பல்லவி

சாதிகள் இல்லையடா - குல
பேதங்கள் யாவும்
பாதகர் புனைந்துரை மாயமடா-கொடும்
பேயனின் வேலையடா - உனை
தீ நரகம் தள்ளும் தீமையடா - சாதிகள்

சரணங்கள்

1. உயர்ந்தவர் தாழ்ந்தவர் உலகினில் உண்டென்று
உன்னதர் சொன்னதுண்டா - நீ
நிறத்தினில் சிவந்தவன் கறுத்தவன் என்று
கர்த்தன் பிரித்ததுண்டா
வறியவர் வருகையில் வேண்டாமென்று - எங்கள்
வானவர் தடுத்ததுண்டா - பொருள்
பெருத்தவர் முகத்தினைக் கண்டு எம் பரமன் புன்னகை
புரிந்ததுண்டா - அது
சரியென ஏற்றதுண்டா - வேத
சரித்திரம் சொன்னதுண்டா - சாதிகள்

2. படித்தவன் பாமரன் இளைத்தவன் கொழுத்தவன்
என்றவர் நினைத்ததுண்டா - ஒரு
எஜமான் அடிமை பிரிவினை உண்டென்று
இறைவன் பகுத்ததுண்டா
கிரேக்கனும் யூதனும் ஆணென்றும் பெண்ணென்றும்
ஆண்டவர் சலித்ததுண்டா
கல்வாரியின் அன்பதை பேதங்கள் பார்த்து
கர்த்தன் பொழிந்ததுண்டா - நீ
வருகையில் தடுத்ததுண்டா - உனை
சேர்த்திட மறுத்ததுண்டா - சாதிகள்

46. கேட்டதெல்லாம் தரும் இயேசு

பல்லவி

கேட்டதையெல்லாம் தருவார் இயேசு ராஜனே
கேளாததும் தருவார் நித்திய தேவனே
அமுக்கி குலுக்கி மடியில் சரிந்து விழும்படி தருவார் - நீ
அளந்து கொடுக்கும் அளவெதுவோ அதன்படி தருவார்
அறிந்திடாத எட்டாத பெருங்காரியம் செய்வார் - நீ

சரணங்கள்

1. பறவைகளைப்பார் அவை விதைப்பதுமில்லை
அறுத்ததையெல்லாம் களம் சேர்ப்பதுமில்லை
பசியோடு பறந்த பறவை பார்த்ததில்லையே
பிழைப்பூட்டும் பரமன் இயேசு துணையிருக்கையிலே - கேட்ட

2. வண்ண மலர்களைப்பார் அவை உழைப்பதுமில்லை - தம்
உடைகளுக்காக அவை நூற்பதுமில்லை
அவைப்போல அழகு மேனி நமக்கில்லையே
சாலமோனும் அது போல அணிந்ததில்லையே - கேட்ட

3. கவலையினாலே முழம் கூடுவதுண்டோ
விசாரத்தினாலே பொருள் அசைவதுமுண்டோ
ஆகாரம் காட்டிலும் நம் ஜீவன் உயர்ந்தது
ஆடைகளைக் காட்டிலும் நம் உடலும் சிறந்தது - கேட்ட

47. கலங்காதே மனமே

பல்லவி

அலை கடல் போலே அலையும் மனமே
கலங்குவதேன் தினமே
கண்ணீருடன் அவர் காலடி - தினம்
தேடி வந்திடுவாய் - அவர்
பாதம் அண்டிடுவாய்

1. பாவங்கள் தீர்த்திடுவார் - தம்மிடம்
வருவோரை தள்ளாதவர்
உனை சேர்த்திடுவார் சுத்தமாக்கிடுவார்
கல்வாரி நேசரவர் - அலை

2. காயங்கள் ஆற்றிடுவார் - நெறிந்த
நாணலை முறிக்காதவர்
உனை தேற்றிடுவார் குணமாக்கிடுவார்
பெலன் கொண்டு எழும்பிடுவாய் - அலை

3. சாபங்கள் மாற்றிடுவார் - மங்கிய
திரிகளை அணைக்காதவர்
உன்னை நேசித்ததால் ஜீவன் ஈந்தவரை
உயிருள்ளவரை துதிப்பாய் - அலை

48. சிலுவை நாதர் இயேசு

தொங்கிவிட்ட சதைகளிலே மேலாடை போர்த்தி
அதில் சிலுவையை தூக்கி வைத்து
பங்கமுற சவுக்கடியும் பல வாங்கி
நெடுந்தூரம் நடந்து வந்த தங்க மகன்
கல்வாரியில் தள்ளப்பட்டார்
அவர் அங்கியினை உரிக்கையிலே உறைந்த இரத்தம்
மறுபடியும் அழுததம்மா..

பல்லவி

இயேசு என்றொரு வார்த்தை சொன்னால்
உள்ளம் பொங்கிடுதே
ஜீவ ஊற்றில் மூழ்கினேன் - என்
பாவம் மறைந்திடுதே

சரணங்கள்

1. தாழ்வில் வந்த தேவனே - நீர்
தாங்கி வந்த சிலுவையை
தாங்கிட தயை தரணுமே
தாயாபரா வரமருளுமே - இயேசு

2. சஞ்சல நேரம் தாழ்த்தி என்னை
தனித்து மௌனம் காக்கிறேன்
மிகுந்த கிருபை நிறைந்த தேவா
இரங்குமே எந்தன் மீதிலே - இயேசு

3. தாழ்ந்து போன உலகை மீட்க
உயர்ந்ததோ உந்தன் சிலுவையே
உழுத நிலம் போல் ஆனதோ - ஒரு
பழுதில்லா திரு மேனியே

49. வாழ்வை இழந்தாயோ

கலைந்த மேகம்தான் உன் நினைவோ
உருக்குலைந்த சிலைதான் உன் நிலையோ

பல்லவி

வாழ்வை இழந்தாயோ - கொடும்
தாழ்வில் இணைந்தாயோ
உடைந்த கலயம் அழிந்த கோலம்
ஆனதால் மனம் நொறுங்கிப் போன - வாழ்வை

சரணங்கள்

1. உள்ளங்கையில் உனை வரைந்தேனே
பிள்ளையைப்போலே ஏந்திடுவேனே
தயங்காதே மதி மயங்காதே - உனை
தேற்றவே நான் வந்தேன் - வாழ்வை

2. இமைப்பொழுதேனும் உறங்கிவிடாமல்
கண்களை உன் மேல் வைத்திருந்தேன்
கலங்காதே மனம் தளராதே - உனை
மீட்கவே நான் வந்தேன் - வாழ்வை

3. இகம் உருவாகி நிலைபெறுமுன்னே
எலும்புகள் முதலாய் உனை அறிவேனே
பூமியின் தாழ்விடம் உன் பிறப்பிடமே - அங்கு
திரும்புமுன் மனம் திருந்து - வாழ்வை

50. இயேசுவே மெய்யான போஜனம்

பல்லவி

மெய்யான போஜனமே
இயேசுவே உம் சரீரம்
மெய்யான பானமிதே
இயேசுவின் திரு உதிரம்
ஆவி ஆத்மா என் ஜீவியமெல்லாம்
போஷித்து வழி நடத்தும் நித்திய ஜீவன் தரும் - மெய்

சரணங்கள்

1. விண்ணின்றிறங்கிய மெய்யான அப்பம்
என்னை மீட்க நொறுங்கியதேனோ - நான்
உம்மில் பிழைக்க நீர் என்னில் நிலைக்க
நிதம் நிதம் பிழைத்திட புசித்திடுவேன் - மெய்

2. கல்வாரி குன்றில் பொங்கும் உம் இரத்தம்
என்னை நித்தம் பரிசுத்தமாக்கும்
என் ஜீவன் என்னில் தங்கும் வரைக்கும்
துதி துதி என உளம் களித்திடுதே - மெய்

51. சுவையான தமிழாலே

பல்லவி

சுவையான தமிழாலே
சுமை நீக்கும் இயேசுவைப் பாடுவேன்
சூழ்ந்து நெருக்கும் பாரமான யாவையும்
தள்ளியுமை நோக்கி நான் ஓடுவேன் - சுவை

சரணங்கள்

1. மாமிசமோ மரணம் ஆவியின் சிந்தையோ
நித்திய ஜீவன்
பாவம் பெருகின இடத்திலெல்லாம்
பெருகிடுதே உந்தன் மா கிருபை - சுவை

2. கலயத்தில் மா நிறையும் குடத்தினில் எண்ணெய்
பெருகும் எந்நாளும்
கைவிரல் எழுதும் கழுதையும் பேசும்
கடும்புயல் அமரும் கடல் அடங்கும் - சுவை

3. இயேசு என் சிநேகிதரே அழைப்பினிலே தினம்
நிலைத்திருப்பேன்
நான் தொழும் நேரம் தீரும் என் பாரம்
அவர் பதம் போதும் என் மனமே - சுவை

52. இதயங்கள் இயேசுவுக்கே

எத்தனை இதயம் இருந்தாலும்
இயேசுவுக்கே தருவேன்
உலகத்தனையும் என் காலடியில்
குவித்தாலும் உமை மறவேன் - எத்தனை

சரணங்கள்

1. இதயம் இல்லா மாந்தரிடம் இரக்கமில்லை - இருக்கும்
இதயத்துக்குள் பொல்லாங்கனின் நினைவலைகள்
நான் தேடும் நிஜங்களின் பின் பொய்யான நிழல்கள்
புன்னகையின் திரைகளின் பின் பொல்லாத முகங்கள்
- அதனால்

2. பாவ சேற்றில் புரளும்போது பரிகசிக்கும் - உலகம்
பாத்திரத்தில் பளபளப்பாய் வசீகரிக்கும்
முடிவினில் விரியனைப்போல் பாய்ந்தே கடிக்கும்
முடிவிலா நரகினிலே சேர்த்தழிக்கும் - அதனால்

3. இரக்கத்திலே ஐஸ்வரியம் மிகுந்தவரே
கிருபையும் திரளான மீட்பும் உடையவரே
விடியலின் நேரத்துக்காய் காத்திருப்பேன்
விடியலின் புது கிருபை எனக்கருள்வீர் - அதனால்

53. தலை நிமிர்ந்து நடக்கச் செய்தவர்

சொல்லாகி சுவையாகி ஸ்வரமாகி சுகமாகி
நின்றதோர் பொருளே - அப
ஸ்வரமாகி சுமையாகி பிணியான வினை தீர்க்க
வந்ததோர் வானுருவே
வழியற்று விழித்தோனை விலங்கொடித்து விடுவித்த
வான்பொருளே வாழியவே

பல்லவி

நுகத்தடிகளை முறித்தார் - என் தலை
நிமிர்ந்து நடக்கப் பண்ணினார்
யாக்கோபின் தேவன் உயர்ந்த அடைக்கலம்
ஆனதால் துதித்திடுவேன் - இயேசு
நாதரை புகழ்ந்திடுவேன் - நுகத்தடி

சரணங்கள்

1. சிங்கத்தின் வாயினை சிறுபையனால் கிழித்து
சீக்கிரம் சாத்தானை கால்களின் கீழ் மிதித்து
சிலுவையிலே சாவின் கூரினை முறித்து
சரிநிகர் ஆசனம் தந்தென்னை உயர்த்தி - நுகத்தடி

2. தாகத்தினால் மனம் சோர்ந்து விடாய்த்திருக்க
சத்துரு சூழ்ந்தென்னை நெருக்கையிலே
கழுதையின் தாடை எலும்பினை எடுத்து
விடுதலை தந்திடுவார் எங்கள் தேவன் - நுகத்தடி

3. மரண இருள் கண் இமைகளின் மேலிருக்க
சஞ்சலத்தால் கண்கள் இருளடைந்தாலும்
என் தலைமீதவர் தீபங்கள் ஜொலிக்க
அருள் ஒளியால் பெருங்காரிருளை கடப்பேன் - நுகத்தடி

4. உலகுமதாயினும் தலை சாய்க்க இடமில்லை
நலம்புரிந்தே திரிந்தீர் நானிலம் மீதினில்
நல்லாவி கொண்டுழைக்க வல்லா உந்தன் சிலுவை
அல்லால் வழி இகமீதினில் வேறில்லை - நுகத்தடி

54. நன்மை செய்த கர்த்தர்

பல்லவி

கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால்
அவரைப் பாடுவேன்
கர்த்தர் நீதியுள்ளவர் - அவர்
நீதியின்மேல் பிரியப்படுகிறார் - கர்த்தர்

சரணங்கள்

1. அப்பங் கொடுத்த கரங்களிலே ஆணியடித்தவன்
அத்திமரம் போல் கெட்ட மகன் போல் துரோகம் செய்தவன்
முத்தங் கொடுத்தே காட்டி கொடுத்த என்னை மன்னித்தவரே
இரத்தம் சிந்தி சுத்த உள்ளங்கொடுத்தென்னை
சேர்த்துக்கொண்டவரே - கர்த்தர்

2. அள்ளியணைத்த அவர் முகத்தில் காறியுமிழ்ந்தவன்
முள்ளிலொரு முடி செய்து சிரசினில் அழுத்தி பார்த்தவன்
தேடி வந்த மேய்ப்பரையே கோலில் அடித்தவன்
ஓடிப்போன என்ன விட்டுவிடாது இன்று சேர்த்துகொண்டவரே
- கர்த்தர்

3. கட்டியணைத்த மார்பினிலே ஈட்டி எறிந்தவன்
வெட்டியெறிந்த கொடியைப் போல வாடிப் போனவன்
தாகம் என்றே கேட்டவர்க்கு காடி கொடுத்தவன்
ஆகாதவனென்று தள்ளிவிடாதென்னை
சேர்த்துக்கொண்டவரே - கர்த்தர்

55. பாவிக்கு தஞ்சம் இயேசு

பல்லவி

பஞ்சி நானொரு பாவியென்
தஞ்சம் உன் திரு தாளையா
அஞ்சலென் றருள்வாய் - பரன்
மஞ்சனே மனுவேலனே - பஞ்சி

சரணங்கள்

1. நாடி உன் புகழ் நாயினேன்
பாடிட பதினாயிரம்
கோடி நாவுள தாயினும்
கூடுமோ குமரேசனே - பஞ்சி

2. பொய்யும் வஞ்சமும் போக்கியே
மெய்யும் அன்பும் விடாமல் யான்
தெய்வமே உனை சேவித்திங்
குய்யும் நல்வரம் உதவுவாய் - பஞ்சி

3. அண்ணலே உனதாலயம்
நன்னி நல்லுணர்வோடுனை
எண்ணி யெண்ணி இறைஞ்ச - உம்
கண்ணில் இன்னருள் காட்டுவாய் - பஞ்சி

H.A. கிருஷ்ணபிள்ளை

56. வஞ்சக உலகம்

பல்லவி

கொஞ்சி கொஞ்சி பேசி மயக்கும்
வஞ்சகமான மாய உலகம்
கெஞ்சி கெஞ்சி அழுதாலும்
நஞ்சுபோல உன்னை அழிக்கும்
உலகை நம்பினால் மரணம் - நீ
தப்பிடுவாய் இது தருணம்

சரணங்கள்

1. நீர்மேல் எழுத்தாகி நீல வானில் புகையாகி
நீர் குமிழிப்போல மின்னி நிமிஷத்திலே உடைந்துவிடும்
பொல்லாத உலகமிது மெய்யான வழியும் எது - கொஞ்சி

2. வாராத நிலவைக் காட்டி வா வா என்பாள் தாயாரும்
கண்ணிழந்த சேயைக்கூட கண்ணே என்று அழைத்திடுவாள்
பொல்லாத உலகமிது மெய்யான வழியும் எது - கொஞ்சி

3. இராசா என்றே தந்தையும் கூசாமல் அழைத்திடுவார்
குந்த ஒரு இடமுமில்லே கந்தை மாற்ற வழியுமில்லே
பொல்லாத உலகமிது மெய்யான வழியும் எது - கொஞ்சி

4. சூழ்ந்திருக்கும் சொந்த பந்தம் வீழ்ந்துவிட்டால் விலகிவிடும்
வெந்த புண்ணில் வேல் நுழையும் வேதனைதான் மீதம் வரும்
நல்லாயன் இயேசுவல்லால் மெய்யான வழியும் இல்லை
தள்ளாமல் சேர்ந்திடுவார் மெய் வாழ்வு உனக்கருள்வார்
- கொஞ்சி

57. இயேசுவே சந்தோஷம்

பல்லவி

என்ன என்ன சந்தோஷமே
எல்லையில்லா சந்தோஷமே
இயேசு என்னில் வந்ததால்
பாவ பாரம் போனதால் பரலோக சந்தோஷமே - அல்லேலூயா

சரணங்கள்

1. பாவத்தை விலக்கிவிட்டார் சந்தோஷமே
சாத்தானை மிதித்துவிட்டார் சந்தோஷமே
தந்திடுவார் ஆசீர்வாதம் துதிக்கையிலே
சேர்த்திடுவார் அவரோடு மகிமையிலே - என்ன

2. வழுவாமல் காத்திடுவார் சந்தோஷமே
வரங்களை தந்திடுவார் சந்தோஷமே
மேய்த்திடுவார் புல்லுள்ள இடங்களிலே
ஊற்றிடுவார் ஜீவத்தண்ணீர் உள்ளங்களிலே - என்ன

3. கர்த்தர் கரம் தாங்கிடுமே சந்தோஷமே
தாங்கி தினம் தப்புவிப்பார் சந்தோஷமே
பாய்ந்திடுவோம் அவராலே சேனைகட்குள்ளே
தாண்டிடுவோம் இயேசுவாலே மதில்கள் மேலே - என்ன

4. தூய வேதம் சொல்லித் தரும் சந்தோஷமே
தூய ஆவியாலுண்டாகும் சந்தோஷமே
தூய உள்ளம் கொண்டு அவரை தரிசிக்கவே
தூய கைகளை உயர்த்தி ஜெபித்திடுவோம் - என்ன

58. நான் செய்த பாவங்கள்

பல்லவி

நான் செய்த பாவங்கள்
என் கண்கள் முன்னே நின்றாடுதே
என் தேவனே
மன்னியும் இயேசையா மன்னியும் இயேசையா - நான்

சரணங்கள்

1. சாவோடு நான் செய்த உடன்படிக்கை
சத்துருவாய் என்னை மாற்றியதோ
சஞ்சலங்கள் சங்கடங்கள்
விரட்டிட மிரட்டிட துரத்திட என்னை - நான்

2. மரணத்தின் வாசலை நெருங்குகிறேன்
மரணத்தாவரம் குறித்தவரே
மரண இருள் பள்ளத்திலே
நடந்திட கடந்திட விரைந்திட என்னை - நான்

3. உடைந்து சிதறிய பாத்திரம் நான்
குழைந்து சிதைந்திடும் மண் குடம் நான்
குயவன் கரம் கலயத்தைப் போல்
விளங்கிட சிறந்திட வனைந்திடும் என்னை - நான்

59. இனிதான வேத வசனம்

பல்லவி

தேனிலும் தெளி தேனிலும்
இனிதானதே உம் வார்த்தைகள்
என் தேவனே என் தேவனே
ஆயிரம் பதினாயிரம்
பலகோடியாய் பொன் வெள்ளியோ
உம் வார்த்தைகள் மேலானதே

அனுபல்லவி

அகில்மும் அகிலாண்டமும்
ஆகாயமும் உருவாகுமுன்னே
இருந்த தேவ வார்த்தையே - தேனிலும்

சரணங்கள்

1. வானிலிருந்து வந்த வார்த்தை
வானம் பூமி படைத்த வார்த்தை
வானம் பூமி ஒழிந்த போதும்
ஒழிந்திடாதிந்த தேவ வார்த்தை
வேத வசனம் ஆதிவார்த்தை - தேனிலும்

2. மாம்சமாக வந்த வார்த்தை
ஆவி ஜீவனுமான வார்த்தை
மாம்சமான யாவர் மீதும்
இறங்கி வந்த தேவ வார்த்தை
வேத வசனம் ஜீவ வார்த்தை - தேனிலும்

3. நோய்களை குணமாக்கும் வார்த்தை
பேய்களை உடன் விரட்டும் வார்த்தை
நியாயத் தீர்ப்பின் நாளில் நம்மை
நியாயந்தீர்க்கும் தேவ வார்த்தை
வேத வசனம் தூய வார்த்தை - தேனிலும்

60. ஒளியாக வந்த தெய்வம் இயேசு

பல்லவி

உலகின் ஒளியாக - தெய்வம்
உதித்ததை நான் பாடுவேன் - இந்த
ஆதியில் ஆதாமின் பாவத்தினால் வீழ்ந்த
மேதினியை மீட்க தேவாதி தேவன் - இந்த

சரணங்கள்

1. தீர்க்கரெல்லாம் உரைத்த வாக்குகள் நிறைவேற
தரித்திர கோலத்திலே தாழ்மையில் தோன்றிடவே
சத்திரத்தின் சிறு முன்னணையில் நம் சத்தியபரன் இருந்தார்
நித்தியத்தில் எமை சேர்த்திடும் தேவன்
நித்திரையிலிருந்தார்
உன்னதத்தில் தேவனுக்கு
மகிமை உண்டாகவும்
மாந்தரில் பிரியம் மலர்ந்திட என்றும்
மண்ணில் சமாதானம் எங்கும் வளர்ந்தோங்கிட - உலகின்

2. வானத்திலே வெள்ளி வழியொன்று காட்டிவர
ஞானியர்கள் சிலர் நாதனை போற்றுகின்றார்
வானத்திலே பல தூதர்கள் சேர்ந்து வாழ்த்துக்கள் பாடுகின்றார்
ஆட்டிடையர் இவர் மாட்சிமைக்கண்டு சாட்சிகள் கூறுகின்றார்
என் பாவங்கள் எண்ணாதவர்
விண்ணுக்கடங்காதவர்
மண்ணில் மனுவாகி சொல்லினுருவாகி
அன்பே அகமாகி என்னுள் உறைகின்றவர் - உலகின்

61. அஸ்திபாரமாகிய கிறிஸ்து

பல்லவி

என் அஸ்திபாரம் கிறிஸ்துவின் மேல் இருப்பதினால்
அசைவதில்லை நான் அசைவதில்லை
அல்லேலூயா ஆனந்தமே
இயேசு கிறிஸ்துவினால் ஜெயம் பெறுவேன் - என்

சரணங்கள்

1. யோசேப்பை அறியாத பார்வோன்கள் வரலாம்
போஷித்த காகங்கள் பறந்து போகலாம்
யோர்தானின் கரைகளைத் தாண்டிப் போனபின்
வானத்து மன்னாவும் ஒழிந்து போகலாம்
கவலையில்லை, கலக்கமில்லை
கிறிஸ்துவுக்குள் இருப்பதால் தோல்வியில்லை - என்

2. மாராவின் நீரூற்று கசந்து போகலாம்
சாராளின் அடிமைப்பெண் இகழ்ந்து பேசலாம்
ஆரோனும் மிரியாமும் எழும்பி எதிர்க்கலாம்
கோராகின் கூட்டங்கள் கலைந்து போகலாம்
கவலையில்லை கலக்கமில்லை
கிறிஸ்துவுக்குள் இருப்பதால் தோல்வியில்லை - என்

3. சமுத்திர மீன் உன்னை விழுங்கிப் போடலாம்
பசித்த சிங்கங்கள் கெபியில் உலவலாம்
சேவல் கூவுகின்ற மூன்று வேளைக்குள்
சீமோனைப் போல் சிலர் மாறிப்போகலாம்
கவலையில்லை கலக்கமில்லை
கிறிஸ்துவுக்குள் இருப்பதால் தோல்வியில்லை - என்

62. நீதியின் வலக்கரம்

பல்லவி

நீதியின் வலக்கரத்தால் நிதமும் என்னை தாங்கிடுமே - நீதிபரரே
ஓங்கிய புயத்தினால் உயர்த்தி என்னை நிறுத்திடுமே
- உயர்ந்தவரே

உம்மைத் தேடி முகம் காண மனம் நாடி விழையுதே
பலகோடி புதுப்பாடல் தினம் பாடி மகிழவே - நீதியின்

சரணங்கள்

1. பாவத்தோடு பயணம் செய்து பழகிப் போனதால்
வேதம் சொல்லும் வழியைவிட்டு விலகிப்போனதால்
பாதங்களில் படிந்துவிட்ட பாவக்கறை நீங்கிடவே
பரிசுத்த வசனத்தாலே கழுவி என்னை நிறுத்திடுமே பரிசுத்தரே
- நீதியின்

2. பாவத்தின்மேல் ஜெயம் பெற தேவ ஆவி வேண்டுமே
மாமிசத்தை ஜெயிக்க தூய ஆவி தாருமே
ஆவியுடன் ஆத்துமா சரீரமதை மாற்றிடவே
பரிசுத்த ஆவியாலே நிரப்பி என்னை நடத்திடுமே உயர்ந்தவரே
- நீதியின்

3. மேகத்தோடு போனவரே நேசரேசுவே இந்த
தேகம்விட்டு உம்மைச் சேர ஆவல் பெருகுதே
தாகத்துடன் காத்திருக்கும் தாசர்மனம் ஏங்கிடுதே
பரிசுத்த உதிரத்தாலே கழுவி என்னை நிரப்பிடுமே பரிசுத்தரே
- நீதியின்

63. சிலுவை சுமந்த தோள்கள்

பல்லவி

என்னை சுமந்த தோள்கள் மீது ஈனச் சிலுவையா
என் உருவம் வரைந்த உள்ளங்கைகளில் கொடிய
ஆணிகளா - என்னை

சரணங்கள்

1. கன்மலை மீதினிலே எந்தன் அடிகளை நிறுத்திடவே
கல்வாரி மலையின் ஒரத்திலே நீர் தள்ளாடி நடந்ததென்ன
- என்னை

2. பொன்னிற மேனியிலே தூய செந்நீர் வழிந்ததென்ன
பொல்லாத சேவகர் போர்த்திய செவ்வங்கி மேலும் சிவந்ததென்ன
- என்னை

3. கன்மலை புகலிடமே - கொடும் கல்வாரி பாடுகளா
மார்போடு என்னை அணைத்தவர்க்கே வாரடி காயங்களா
- என்னை

64. கலங்காதே மனமே

பல்லவி

என் மனமே நீ கலங்கிடாதே
எல்லையில்லா கிருபை சூழ்ந்துன்னை காத்திடுமே - என்

சரணங்கள்

1. நினைப்பது நடவாமல் போகின்ற போதும்
நடப்பதும் தவறாகி வருத்திடும் போதும்
வெளுத்ததெல்லாம் பசும்பாலென தோன்றும்
நினைப்பதும் நடப்பதும் அவர் சித்தமாகும் - என்

2. காரணம் இல்லாத காயங்களாலே
மனம் உடல் சோர்ந்திட மதி மயங்காதே
காயங்களால் குணமாக்கிடும் தேவன்
கன்மலை புகலிடம் உனக்களிப்பாரே - என் -

3. வகையொன்று தேடி அலைந்திடும் அலகை
வீழ்த்தியுன் காலடி மிதித்திடுவாரே
வழி விலகாது அவர் காலடி தொடர்வாய்
வலக்கரம் வழித்துணை உனக்களித்திடுவார் - என்

65. ஒரு துளி அன்பு

பல்லவி

மலரிதழ்மேலே பனித்துளி போலே
ஒரு துளி அன்பு யார் தருவார் என்று
ஏங்குதே என் மனம் இன்று - இயேசையா
ஏங்குதே என் மனம் இன்று

சரணங்கள்

1. வளம் தரும் வாழ்வினை கனவு கண்டேன்
வறண்ட வனாந்திரம் வாய்த்ததென்ன
குணம் கெட்ட மாந்தர்களின் இதமற்ற வார்த்தைகளால்
மணம் தரும் மலர்கூட முள்ளாகிப் போனதென்ன - மலரிதழ்

2. குலக்கொடியாய் நல்ல கனிதரவே
கனிச்செடியாம் உம்மில் இணைத்திருந்தீர்
கனியற்ற விஷக்கொடியாய் கருக்குள்ள முள்ளாகி
உறுத்திய என்மீதும் உம் அன்பை பொழிந்ததென்ன - மலரிதழ்

3. வருகையின் நாளினில் மகிழ்வுடனே
முகமுகமாய் உம்மை தரிசிக்கவே
கிருபையின் கரங்களுக்குள் அனுதினம் அடங்கிடுவேன்
திருவருள் தரும் தேவன் திருப்பாதம் பணிந்திடுவேன்-மலரிதழ்

66. கள்ளு சாராயம் தள்ளும் நடுத்தெருவில்

பல்லவி

கள்ளு சாராயத்தினால் நீ கண்டது என்ன தம்பி
உள்ளதும் போய்விடும் தள்ளாட நேரிடும்
நல்ல குடும்பம் நடுத்தெருவில் வரும் - கள்ளு

சரணங்கள்

1. காசு இல்லாதபோது கடன் வாங்கிக் குடிக்க சொல்லும் - நல்ல
பாசம் பொங்கிடும் மனைவி பிள்ளைகளை
நாசப்படுத்தி நடுத்தெருவில் விடும் - கள்ளு

2. கந்தல் துணியுடனே, தெரு கண்ட இடம் படுப்பாய் - உன்
சொந்த பந்தம் உனைக்கூடிக்கொண்டு - பல
குந்தகம் பேசி கூவி சிரித்திடும் - கள்ளு

3. பொய்யன் திருடனைப்போல் உன் புத்தி குழம்பிவிடும் - உன்
கையிலுள்ளதெல்லாம் பறிபோய் விடும்
கண்டவரும் உன்னை காறி உமிழ்ந்திட - கள்ளு

4. இயேசுவை உன் மனதில் கொஞ்சம் எண்ணி இடம் கொடுப்பாய் - உன்
மாசுகள் நீங்கிடும், சாபங்கள் மாறிடும்
பாவம் விலகிட, சந்தோஷம் பொங்கிடும் - கள்ளு

U.M. தேவதாஸ்

67. தீமைக்கு நன்மை

பல்லவி

நன்மை செய்தாலும், தீமை செய்யும்
இந்த பொல்லாத உலகத்திலே
பல தீமை செய்தவர்க்கும் நன்மை வரும்
எங்கள் இயேசுவின் பாதத்திலே

சரணங்கள்

1. காளை வெள்ளாடு கோழி அறுத்தாலும் கருமம் தீராதுங்க
பல ஆறு குளம் மூழ்கி ஸ்நானம் செஞ்சாலும் பாவம் போகாதுங்க
வந்தாலே போதும் இயேசுவிடம் உள்ளம் தந்தாலே பாவம் தீர்ந்துவிடும்
சொந்தமென வந்தவரைத் தள்ளாதே தம்பி - நீ நன்மை

2. மாலையணிந்து மலை ஏறி பணிந்தாலும் ரோகம் மாறாதுங்க
ஒருவேலை வணங்கி இரு வேளை தொழுதாலும் சாபம் நீங்காதுங்க
தொட்டாலே தீட்டு பட்டாலே பாவம் பொல்லாத உலகம் நம்பாதீங்க
சொந்தமென வந்தவரை தள்ளாதே அம்மா - நீ நன்மை

3. பாலும் நெய்யும் பழம் படையல் போட்டாலும் பேய்குணம் மாறாதுங்க
உடல்கீறி உதிரம் சிந்தி தீயில் குதித்தாலும் உறு பிணி தீராதுங்க
தன்னாலே உதிரம் சிந்திய மீட்பர் சொன்னாலேபோதும் சுகம் கிடைக்கும்
சொந்தமென வந்தவரைத் தள்ளாதே ஐயா - நீ - நன்மை

68. இதயமே இதயமே

பல்லவி

இதயமே என் இதயமே - நீ
சுமந்த காயங்கள் அதிகமோ
இயேசு என் நேசர் உனக்காய் சுமந்த
காயங்கள் காட்டிலும் அதிகமோ

சரணங்கள்

1. ஒளிப்பிடத்தில் மகா ஆழங்களில் உன்னை
படைத்தவர் அவரல்லவா
படைத்தவரே உன்னை கைவிடுவாரோ
கண்மணியே கலங்காதே - இதயமே

2. கரங்களின் நிழலின் மறைவினிலே - தினம்
மறைத்துன்னை காத்துக் கொள்வார்
கரங்களில் வரைந்தவர் கிருபையினாலுன்னை
அலங்கரிப்பார் கலங்காதே - இதயமே

3. தாயினும் மேலாய் நாயகன் இயேசு - உன்
காயங்கள் ஆற்றிடுவார்
நியாயங்கள் தீர்த்திட வான சிங்காசனம்
வீற்றிருப்பாய் கலங்காதே - இதயமே

4. வானவர் வாழ்த்திடும் வானபரன் - அன்று
அணிந்தது கந்தையன்றோ
வானம் அடங்காத வள்ளலும் உனக்குள்ளே
அடங்கிட வந்தது விந்தையன்றோ - இதயமே

அனுசரணம்

கண்மணியே என் கண்மணியே - நீ
சிந்திய கண்ணீர் மிகுதியோ
கல்வாரி நேசர் குருசினில் சிந்திய
உதிரத்தைக் காட்டிலும் மிகுதியோ - இதயமே

69. அன்பின் திருவுருவே

பல்லவி

அன்பின் திருவுருவே எனை
அழைதிட்ட என் நேசரே
உமையன்றி வேறெங்கு நான் ஓடிச் செல்வேன் - எனை
தினம் காக்கும் துணை நீரய்யா

சரணங்கள்

1. அழுகின்ற கண்ணீரை அமுதாக்குவீர் - உம்
அருள்வாக்கை பெரும் நோய்க்கு மருந்தாக்குவீர்
ஒளி தந்து என் வாழ்வில் இருள் நீக்குவீர்
ஒளியாகி உமைக்காணும் வழிகாட்டுவீர் - அன்பின்

2. துன்பங்கள் வரும்போது துணையாகுவீர் - நான்
துவளாமல் மிரளாமல் எனைத் தாங்குவீர்
அன்பான கரம் நீட்டி அருள் காட்டுவீர்
அன்போடு சேர்த்தெனக் கமுதூட்டுவீர் - அன்பின்

3. தாய் தந்தை போலென்னை தாலாட்டுவீர் - என்
சிரம் மீது கரம் வைத்து முடிசூட்டுவீர்
மணவாளனே இன்று எனை மாற்றுவீர் - உம்
மணவாட்டி என்றழைத்து மகிழ்வூட்டுவீர் - அன்பின்

– வழக்கறிஞர் தனசேகர்

70. பொல்லாத மனிதர்

பல்லவி

செத்தவனை சுமந்து செல்லும் பொல்லாத மனிதா - நீயும்
செத்துப்போகும் நாளும் வருது துள்ளாதே மனிதா - ரொம்ப
துள்ளாதே மனிதா!

சரணங்கள்

1. நல்லவனோ கெட்டவனோ, படிச்சு பட்டம் பெற்றவனோ
ஆளுகின்ற நாட்களெல்லாம் ஆட்டம் போட்டு அலைந்தவனோ
ஆடி ஆடி - ஒடி ஒடி நலிஞ்சு மெலிஞ்ச உடலாகி
பேச்சடங்கி மூச்சடங்கி மூடிஞ்சு போன சடமாகி - செத்த

2. புத்திபெற்ற ஞானியோ, சக்தியற்ற ரோகியோ
சக்தி புத்தி சேர்ந்திருந்தும் பக்தியற்ற பாவியோ
நாடி நாடி - தேடி தேடி - சேர்த்ததெல்லாம் மாயமாகி
வீடிருந்தும் வீதியிலே புழுதிபோல புரண்டு புரண்டு - செத்த

3. நாசியிலே சுவாசமுள்ள வாட்டசாட்ட மேனியோ
பாவத்தாலே சாபமாகி ஓட்டையாகி போனதோ
மூடி மூடி - கூடி கூடி குவித்த பாவம் பலகோடி
மூடி உன்னை மீட்டிவார் தேடிவந்த நேசரவர்

செத்தவனை சுமந்து செல்லும் பொல்லாத மனிதா - இயேசுவில்
ஜீவன் பெற வழியிருக்கு அஞ்சாதே மனிதா! - நீ
அஞ்சாதே மனிதா!

71. பாப்பா பாட்டு

பல்லவி

சின்ன சின்ன கண்ணே, கண்ணீர் எதற்கு - கண்ணீர் எதற்கு
உன் கண்ணீரெல்லாம் இயேசு துடைத்திடுவார்
ஆரார் ராராரீரோ அன்பே ஆரார் ராராரீரோ
கண்ணே ஆரார் ராராரிரோ

சரணங்கள்

1. உறங்கிடும் வேளையில் உறக்கமில்லை - நீ
உணவுண்ணும் நேரத்தில் உணவுமில்லை
பசிதாகமோ பரிதாபமோ
பரமன் என் இயேசு உந்தன் பசியாற்றுவார் - சின்ன

2. நோய்பிணி வேதனை தாங்கலையோ
உன் மேனியின் காயங்கள் ஆறலையோ
குணமாக்குவார் சுகமாக்குவார்
அடித்தாலும் இயேசுன்னை அரவணைப்பார் - சின்ன

72. கவிழ்க்கும் உலகம்

பல்லவி

உலகம் உன்னை உயர்த்திவிட்டால்
மயங்கி விடாதே மனிதா - விழுந்து விடாதே, அது
உயர்த்தி உன்னை கவிழ்த்து விடும்
மறந்தும் இருந்தும் பாவங்கள் உன்னைத் தொடர - உலகம்

சரணங்கள்

1. பாரில் பல புகழ் தேடிவரும்
பணமும் உறவும் பறந்து வரும்
பாரின் பட்டங்களும் சேர்த்த செல்வங்களும்
தேவ வீட்டில் உன்னை சேர்க்காது மறந்தும் - உலகம்

2. காணும் உலகினை படைத்தவரே
கருணை வடிவம் உடையவரே
மேன்மை வெறுத்து நம் பாவம் கழுவிட
தாழ்மை உருக்கொண்டு தவழ்ந்தாரே மறந்தும் - உலகம்

- வழக்கறிஞர் தனசேகர்

73. உதவி செய்யும் தேவன்

பல்லவி

ஒரு விசை மாத்திரம் உதவி செய்யும், என் தேவனே - இந்த
ஒரு விசை மாத்திரம் நினைத்தருளும் - என் தேவனே
விழியிழந்தேன், வழி மறந்தேன்
உலகின் மடியினிலே என்னையிழந்தேன் - இந்த

சரணங்கள்

1. கண்களுக்கு காவலில்லையே - என்
எண்ணத்திற்கு எல்லையில்லையே
கண்களுக்கு பிரியமாகி
நெஞ்சத்துக்கு இனிமையாகி
வஞ்சகமாய் என்னை அழைத்தது - உலகம்
நஞ்சு போல் என்னை அழித்தது - அதனால் - ஒரு விசை

2. நெஞ்சத்திலே தூய்மையில்லையே - இங்கு
கொஞ்சத்திலும் உண்மையில்லையே
கழுதையின் எலும்பெடுத்தால்
கதறிய சேனையெல்லாம்
கரங்கொட்டி சிரிக்கின்றதே - கைவிலங்கு
ஓசையை இரசிக்கின்றதே - அதனால் - ஒரு விசை

3. மூன்னூறு நரிகள் பிடித்தவன் - பெலிஸ்தியர்
வெள்ளாண்மை கதிர்கள் எரித்தவன்
தூண்களை தடவிடவே
பிள்ளையாண்டான் உதவிடவே
நசரேய விரதம் விலகவே - என்னை விட்டு
மகா பெலன் நீங்கி போனதே - அதனால் - ஒரு விசை

74. உலகம் குப்பை

பல்லவி

பவுலடியான் புறக்கணித்த
குப்பைகளை சுமந்திடும் உலகம்
சமாரியா பெண் வீசியெறிந்துவிட்ட
செப்புக்குடம் நாடிடும் மனிதர்

சரணங்கள்

1. உலக சிநேகம் தேவ பகை
போதுமென்ற மனம் ஆதாயம்
அழிந்திடும் உலகை நாடுகின்றார்
அழியா கிருபைக்கு விலகி நின்றே
இவர் தேடுவதெல்லாம் மேன்மை
மனம் நாடுவதெல்லாம் இலாபம் - பவுலடியான்

2. அகன்ற பாதையை தெரிந்தெடுத்தார்
இடுக்கமான வழி இவர்க்கு பகை
சிலுவை உபதேசம் பயித்தியமாம்
சுகபோக வாழ்வே தரிசனமாம்
இவர்க்கு பாரம் இறங்கினால் போதும்
என்றும் நிழலில் உறங்கினால் போதும் - பவுலடியான்

3. இழந்தவர் எவரும் அழிந்ததில்லை
இழந்திட எதுவும் இல்லையென்றால்
இருப்பது ஒன்றது அவர் நாமம்
என்றென்றும் இயேசு எல்லாம் தருவார்
நாங்கள் தேடுவதெல்லாம் சிலுவை
தினம் உரைப்பதெல்லாம் சுவிசேஷம் - பவுலடியான்

75. கையளவு மேகம்

பல்லவி

கையளவு மேகம் அனுப்பி வைப்பார்
கோலும் தடியும் கொண்டென்னை தேற்றிடுவார்
அஞ்சிடேன் நான் அஞ்சிடேன்
மரணம் வந்தாலும் அஞ்சிடேன்

சரணம்

1. ஆறு வற்றிப் போனாலும், பூமி காய்ந்து போனாலும்
கர்த்தர் வாக்கை நம்பிடுவேன்
காகங்களை அனுப்பி அப்பம் கொடுப்பார் - கரும்

2. சேனைகள் திரண்டாலும், தேசமே எதிர்த்தாலும்
தேவ வாக்கை நம்பிடுவேன்
சேனைகளின் தேவன் என்னோடிருப்பார் - தேவ - கையளவு

3. பக்தர்கள் எதிர்த்தாலும் சுத்தர்கள் அதிர்ந்தாலும்
சத்தியத்தை சொல்லிடுவேன்
சுத்த பரன் எந்தன் துணையாகிடுவார் - பரி

76. அதோ அதோ இயேசு

பல்லவி

அதோ அதோ இயேசு நாதர்
மேகம் மீது வருகிறார்
பதினாயிரங்களிலே சிறந்தவரே - சிவந்தவரே

சரணம்

1. கானா ஊரினிலே, கலியான விருந்தினிலே
குறை நீக்கி நிறைவாக்கி கனிரசம் வழங்கியவர் - அதோ

2. ஐந்தப்பம் மீன் இரண்டை ஐயாயிரம் பேருக்குமேல்
வயிரார வழங்கியவர் வழித்துணை சீடருடன் - அதோ

3. நாலாம் நாளினிலே நாறிப்போன லாசருவை
நலம் பெறவே உயிர்கொடுத்தோர் - நானிலம் அதிசயிக்க - அதோ

4. நாயீன் விதவையவள் கண்ணீரை துடைத்திடவே
தலைமகனை எழுப்பினவர் - திரள் திரள் தூதருடன் - அதோ

77. ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்

பல்லவி

ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் இயேசு தேவா
ஸ்தோத்திரமே துதி பாத்திரரே
பாத்திரமாகிட கிருபை செய்யும் - ஸ்தோத்திரம்

சரணங்கள்

1. பெலவீனமான பாத்திரம் நான்
பயன்படாத பாத்திரம் நான்
பெலப்படுத்தும் திடப்படுத்தும்
கனமுள்ள பாத்திரமாக்கிடுமே - ஸ்தோத்திரம்

2. குழைந்துபோனதோர் பாத்திரம் நான்
குயவன் கரத்திலுள்ள பாத்திரம் நான்
உருக்குலைந்தேன் உருவழிந்தேன்
திருச்சித்தம் போலென்னை வனைந்திடுமே - ஸ்தோத்திரம்

3. மகிமையிழந்த பாத்திரம் நான்
வழுவிப்போனதோர் பாத்திரம் நான் - தம்
மகிமைக்கென்றே தெரிந்து கொண்டீர்
கிருபா பாத்திரமாக்கிடுமே - ஸ்தோத்திரம்

78. சிட்டு குருவி

சரணம் - 1

சிட்டுக்குருவி உன்னைப்போல பறக்க எனக்கு ஆசை
சின்னக்குயிலே உன்னைப்போல பாட எனக்கு ஆசை
நீங்கள் பறக்கும்போதும் பாடி மகிழும் காரணமென்ன
உங்கள் நிறைவான சந்தோஷத்தின் ரகசியமென்ன

அனுசரணம்

பட்டினி பசியும் ஏது - இயேசு பிழைக்க வைத்திடும் போது
கவலை கண்ணீர் ஏது ? கர்த்தர் கூட இருக்கும் போது - சிட்டு

சரணம் - 2

முல்லை மலரே உன்னைப்போல சிரிக்க எனக்கு ஆசை
லில்லிமலர்போல் மணம் வீச எனக்கு ரொம்ப ஆசை
உங்கள் வெள்ளைச் சிரிப்பின் காரணத்தை அறிந்து
கொள்ளலாமா - அந்த
நறுமணத்தின் இரகசியத்தை புரிந்துக்கொள்ளலாமா

அனுசரணம்

பாரம் என்பது ஏது - பாவபாரம் நீங்கின பிறகு
துயரம் என்பது ஏது - வேத வசனம் தேற்றிடும்போது - முல்லை

சரணம் - 3

வெள்ளி நிலவே உன்னைப்போல வெளிச்சம் தந்திட
ஆசை - விண்
மீன்கள் போல வானில் தினம் மின்னி ஒளிர்ந்திட ஆசை - வான்
மகிமையோடு நீங்கள் ஜொலிக்கும் காரணம் என்ன
உங்கள் மேனியோடு வெளிச்சம் இருக்கும் இரகசியம் என்ன

79. கல்வாரி அன்பை

பல்லவி

கல்வாரி அன்பை நினைத்து நினைத்து
ஓடி வருவேனையா
ஒருபோதும் தள்ளாமலே
எனை அன்பால் அழைத்தீரே
உந்தன் அன்பால் நினைத்தீரே

சரணம்

1. மாறாதவர் இயேசு மாறாதவர்
வாக்குகளில் என்றும் மாறாதவர்
மாறாதது என்றும் மாறாதது
அவர் கிருபை என்றும் மாறாதது
நம்பி வந்தால் எந்தன் நேசர்
ஒருபோதும் தள்ளாதவர் என்னை - கல்வாரி

2. ஒளியானவர் மெய்வழியானவர்
உயர் தரவே பலிபொருளானார்
பலியாகவே மரிசுதனானவர்
மறைபொருளாய் என்னில் உறைகின்றவர் - நம்பி

80. என்னை பெத்த ராசாவே

பல்லவி

என்னை பெத்த ராசாவே - என்
கண்ணைப் போல உன்னை வளர்த்தேன்
கண்ணுறங்கிப் போனதென்ன
கல்வாரி சிலுவையிலே - என்னை

சரணம்

1. கண்ணே நீ கண்திறந்தாய்
காரிருள் கலைந்ததையா
அன்பே நீ அவதரித்தாய்
அந்தகாரம் அகன்றதையா
பொன்னே நீ பிறந்ததினால்
பாவமெல்லாம் பறந்ததையா
அன்னை எந்தன் தாலாட்டு
உன் செவியில் கேட்கலையா
ஆராரீரோ...ஆராரீரோ... - என்னை

2. மன்னா நீ உதித்ததினால்
மண்பதை உயர்ந்ததையா
ஐயனே பாடு பட்டாய்
பேய் பிணியும் விலகுதையா
சிலுவை சுமந்ததினால்
சீலமெல்லாம் பெருகுதையா
சேயுந்தன் செவியினிலே
என் குரலும் கேட்கலையா
ஆராரீரோ...ஆராரீரோ... - என்னை

3. கல்லாகிப் போன மனம்
கனியாய் கனிந்திடவே
அன்னை எந்தன் மடியினிலே
உன் மேனி சாய்ந்ததென்ன
மெய்யான போஜனமே
மெய்ப்பொருளே என் மகனே
தாயெந்தன் தாலாட்டு சேயுனக்கு கேட்கலையா
ஆராரீரோ...ஆராரீரோ - என்னை

81. மனிதனின் பல முகங்கள்

பல்லவி

மனிதனின் பலவித முகங்களைப் பார்க்கையில்
மனதுக்குள் சிரிக்கின்றேன் - அவன்
முகத்திரை விலகி வேஷம் கலைகையில்
மனதுக்குள் அழுகின்றேன் - என்

1. வாயில் வசனம் மணக்க மனதில் லாப கணக்கோ
அகத்தில் வெறுப்பிருக்க முகத்தில் புன்னகை
காட்டி மயக்கும் மனிதன் - அவனை
நினைக்கையில் அழுகின்றேன் - என்
மனத்துக்குள் துடிக்கின்றேன் - மனிதனின்

2. ஜொலிக்கும் உல்கை காட்டும் - அது கிடைக்கும் எனவும் உரைக்கும்
ஆட்டின் தோலுக்குள் பதுங்கும் ஓநாய்கள்
பாட்டில் மயங்கும் மனிதன் - இவனை நினைக்கயில்
சிரிக்கின்றேன் என் மனதுக்குள் துடிக்கின்றேன் - மனிதனின்

3. வரங்கள் மிகுந்து பெருகும் அதை அறிந்து உலகம் மயங்கும்
தங்களைக் கொண்டு தம்மை அளந்து பார்த்திடும்
தந்திரமான மனிதன் - இவனை நினைக்கையில் அழுகின்றேன்
என் மனதுக்குள் துடிக்கின்றேன் - மனிதனின்

4. வேத வசனம் விலக்கி - பெறும் உணர்ச்சி வசத்தில் நிரம்பி
துடிக்கும் மனிதனுக்கும் தூய ஆவிக்கும்
முடிச்சு போடும் மனிதன் இவனை நினைக்கையில் சிரிக்கின்றேன்
என் மனதுக்குள் துடிக்கின்றேன் - மனிதனின்

5. உடலும் பொருளும் வேண்டேன் அந்த சிலுவை ஒன்று போதும்
அடிச்சு வடுதெரிய இடுக்கமான வழி
தேடும் புதிய மனிதன் உறவை நினைத்தே ஏங்குகின்றேன்
இந்த உலகெங்கும் தேடுகின்றேன் - மனிதனின்

82. இறை ஆட்சியின் எல்லைக்குள்

பல்லவி

உந்தன் ஆட்சியின் எல்லைகட்குள்ளே - நான்
அடங்கி வாழ்ந்திடுவேன்
எந்தன் வாழ்க்கையின் எல்லைகளெல்லாம் - நீர்
பரிசுத்தம் என எழுதும்
பரிபூரண மாகிடவே - என்னை
பரிசுத்தமாக்கிடுமே

சரணங்கள்

1. சாத்தானின் ஆழங்களில் விழுந்திடாமல்
சத்திய வசனத்தால் சுத்தப்படுத்தும்
கல்வாரி உதிரம் பாய்ந்திடுதே - என்
கள்ளமெல்லாம் கழுவிடவே - பரி

2. நித்திய ஜீவன் பெற நீர் மரித்தீர்
எந்தனை மீட்டிடவே உயிர்கொடுத்தீர்
நிமிஷத்திலே மறுரூபம் பெற
முத்திரித்து நடத்திடுமே - பரி

3. பக்தர்கள் கூட்டத்தில் சேர்ந்திடவே
பக்தியின் வேஷமதை களைந்திடவே
சித்தப்படி செய்யும் மனம் ஈந்திடுமே
சத்தியபரன் ஆவியே - பரி

83.வெள்ளி நிலவே

மழை துளிகள் தாளமிட
மாலை தென்றல் தாலாட்ட
வான்வெளியின் வீதியிலே
வலம் வருகின்ற வெள்ளி நிலவே
நீ வருகின்ற வழியில் என் நேசரைக் கண்டாயோ - என்
ஆசைகள் அவரிடம் சொல்லிவிடவே
என் அருகினில் வருவாயோ

சரணம்

1. வானம் பூமி உண்டாக்கினார்
ஆதிதேவன் வார்த்தையினால் - தாம்
படைத்ததெல்லாம் நலமெனவே
படைப்பின் தேவன் அறிந்தனரே
பூமி ஒழுங்கின்மை ஆகிப்போனதென்ன
வெறுமையாகிவிட்ட கோலமென்ன - அவர்
படைக்கயிலப்படியே படைத்தனரோ - இல்லை
படைத்தபின் பாழாகி போனதோ
இந்த இரகசியம் எனக்கு விளங்கலையே - இதை
அறிந்து சொல்ல இங்கு வருவாயோ! - மழை

2. வானம் அவர் சிங்காசனம்
பூமியவர் பாதபடி - அவர்
பகலவனைப் படைக்கும் முன்னே - இங்கு
வெளிச்சம் தந்தது இரகசியமே
இரவை ஆள உன்னை இறைவன் படைந்திருக்க
பகலில் தூங்கிவிட்ட மனிதனுக்காய் - நீ
மலைமேல் ஏறி வருவாயோ - ஒரு
மல்லிகை சரம் எடுத்து தருவாயோ - அன்று
மலைமேல் மோசே உடைத்துவிட்ட- கற்
பலகை துண்டுகள் கொண்டு வருவாயோ! - மழை

84. ஜெய் ஜெய் இயேசு ராஜா

ஜெய் ஜெய் ஜெய் ஜெய் இராஜாதி ராஜா
பாத்திரரே நீரேயெம் கர்த்தாவே

1. காலங்கள் எல்லாம் மாறாதவரே
கர்த்தாதி கர்த்தருமாயுள்ளவரே
வாக்குகளை நிறை வேற்றுகிறவரே
வல்லமையுள்ள தேவ தேவரீரே

2. பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்றே
பரலோக சேனைகள் பணிகின்றாரே
கரிசனையாக காக்கிறவரே
தரிசனங்களை தந்த தேவரீரே

3. தனவந்தன் ஆயினும் தரித்திரரானீர்
தரித்திரராம் எம்மை தனவந்தராக்கவே
தேவனாயிருந்தும் மனித ரூபமானீர்
பாவமுள்ள மனிதர் எமக்காகவே -JS

85. நமக்காக யாவும் செய்யும் தேவன்

எனக்காக யாவற்றையும் செய்பவரே
எனக்கினி பயமில்லை உலகினிலே
எனக்காக யாவற்றையும் செய்ததினால் - நான்
இரட்சிப்பின் பாத்திரம் ஏந்தி தொழுதிடுவேன் - நான்

சரணம்

1. பஞ்சத்தில் எலியாவுக்கு அப்பம் கொடுத்தார்
பஞ்சமின்றி எலியாவை ஆசீர்வதித்தார்
பஞ்சம் தீரும் வரை அந்த விதவை வீட்டில் - அந்த
பானையில் எண்ணெயும் மாவும் குறையவில்லை - அந்த

2. நாளைய தினத்திற்காக கவலை வேண்டாம்
நாதன் இயேசு இருக்கிறார் அஞ்சவே வேண்டாம்
நாளைய தினத்திற்காக கவலைப்படும் - அந்த
நாளுக்கு நாளுக்கு அதன் பாடுகள் போதும்

-JS

86. முன்னணையில் உறங்கியவர்

பல்லவி

முன்னணை மீது மன்னவர் உறங்கும்
விந்தையை கண்டேனே - என்
நிந்தை நீக்க வந்தவரை - ஒரு
கந்தையில் கண்டேனே

சரணம்

1. ஊதக்காற்று வீச, மேய்ப்பர் உடல் நடுங்க
தூதர் கூட்டம் பாட, வானில் துதி முழங்க
ஒத்தயடிப் பாதையிலே, பெத்தலையின் அருகினிலே
உள்ளமதை குளிரவைக்கம் உண்மையை கண்டேனே - என்

2. பொன்னும் வெள்ளைப்போளம் கைகள் சுமந்து வர
மின்னுகின்ற நட்சத்திரத்தை தொடர்ந்து வர
தொல்லைகளை தொலைத்திடவே பிள்ளையெனப் பிறந்தவரை
துள்ளுகின்ற மனதுடன் என் கண்ணால் கண்டேனே - என்

3. கற்றவரும் இடையினிலே வழிதவற
கொற்றவனும் - கண்சிவந்து மனம் பதற
பக்தியுள்ள சிமியோன் தன் கரங்களிலே ஏந்தி வர
சுத்தமனம் கொடுத்தவரை கண்ணால் கண்டேனே - எனக்கு

87. பழக்கமாகிவிடும் பாவம்

எப்படியோ பாவம் வந்து
இனிக்க இனிக்க பழகி விடும்
தப்பிதமான வழிகளில் ஓட
தன்னலம் காட்டும் தன்பெலன் கூட்டும் - எப்படியோ

1. இயேசுவே தேவன் என்று சொன்னால்
இல்லை அவர் ஒரு மனிதன் என்கும்
மாசுகள் கூறி வேதம் புரட்டி
மனதை குழப்பி விடும் - நல்ல

2. இச்சை உலக இன்பங்கள் காட்டி
எதிலும் மனதை சோர்வாக்கும்
அச்சம் எதிலும் அதிகம் பெருக்கி
அடிமையாக்கி விடும் - உணர்வை
அடிமையாக்கி விடும்

3. மாயமான புன்னகை புரியும்
மனதை கண்ணை குருடாக்கும்
பாயும் தேவ அன்பினை தடுத்து
பாரம் சுமத்தி விடும் - மனதில்
பாரம் சுமத்தி விடும்

4. இயேசு என்ற பேரை கேட்டால்
எந்தப் பாவமும் எழுந்தோடும்
இன்னும் உன்னை அவரிடம் தந்தால்
எங்கும் ஜெயம் கிடைக்கும் - உலகில்
எங்கும் ஜெயம் கிடைக்கும்

UM தேவதாஸ்

88. புரட்சி பூக்கள் மலரட்டும்

புரட்சி பூக்கள் பூக்க வேண்டும்
புதிய சிந்தனை மலர வேண்டும்
இறைவன் பெயரால் ஏய்க்கும் மனிதரை
இனங்கண்டொதுக்கிட வேண்டும் - நீ

அனுபல்லவி

1. இடுக்கமான வழியை விலக்கி
அகன்ற பாதையின் மயக்கம் தந்து
உறங்க வைக்கும் சிலுவை பகைஞர்
உறவை விலக்கிட வேண்டும் - தினம்
உபத்திரவங்கள் அதிக கன நித்ய
மகிமை விரும்பிட வேண்டும் - தன்
சிலுவை சுமந்திட வேண்டும்

2. மதுரமான இரசத்தை பருக
திரண்டு கூடிடும் கூட்டம்
சவுக்கை எடுக்கும் இயேசுவின் பின்
தொடர மறுப்பதென்ன
பாடு மரணம் எது வந்தாலும்
பரமன் வார்த்தைகள் போதும் - என
தொடரும் சீடர்கள் வேண்டும்

3. மரித்த மனிதர் ஆவியாகி
உலவுவார் வந்து பேசுவார் - என
பிதற்றும் மனிதரின் புரட்டு வார்த்தைகள்
விலக்கி நடந்திட வேண்டும்
வாழும் வரைக்கும் வசன ஒளியில்
வாழ்வு ஒளிர்ந்திட வேண்டும் - ஜீவ
வசனம் பாதைக்கு தீபம்

4. வானம் சென்றவர் இயேசுவன்றி
ஒருவரிலையென வேதம் சொன்னதை
வானம் சென்று திரும்பி வந்தவர்
மறந்து போனதென்ன
அவரின் வார்த்தை, ஆவி, ஜீவன்
வேறு நமக்கெது வேண்டும் - திரு
வார்த்தை நமக்கது போதும்

5. திருமறை கடல் ஆழ மூழ்கி
அழகு முத்துக்கள் எடுப்பதன்றி
அரைத்த மாவை அரைக்கும் மனிதரின்
வார்த்தை மறந்திட வேண்டும்
அடுத்த வாரம் இயேசு வருகிறார் - என
கணக்கு சொல்லிடும் கூட்டம் - நீ
ஒதுங்கி சென்றிட வேண்டும்

89. மனிதரைக் கட்டியிழுக்கும் கயிறுகள்

பல்லவி

மனிதரைக் கட்டி இழுக்கும் - அன்பின்
கயிற்றினை அறுத்தது யார்
தேவனும் மனிதனும் இணைந்திடாதபடி
உறவை சிதைத்தது யார் - தேவ

அனுபல்லவி

கண்டு பிடிப்போம் கண்டுபிடிப்போம் - அந்த
எதிரி யாரென்று கண்டு பிடிப்போம்

சரணங்கள்

1. இறைவன் நமக்களித்த மகிமை ஆடையினை
இடையினில் பறித்தது யார்
இரு கனிகளிருக்க அறிவுக் கனிகாட்டி
உயிர்க்கனி மறைத்தது யார்
புரிந்து கொள்வோம் புரிந்து கொள்வோம் - அந்த
பேயினை புரிந்து கொள்வோம் - மனிதரை

2. இறைவன் எழுதித் தந்த இரண்டு பலகைகளை
உடைத்திட செய்தது யார் - கவி
எழுதி குவித்தாலும் ஈசாயின் மகனை
வழுவிட செய்தது யார்
அறிந்து கொள்வோம் அறிந்து கொள்வோம் - அந்த
வஞ்சகனை அறிந்து கொள்வோம் - மனிதரை

3. பரமனோடு தினம் புசித்து வாழ்ந்தவனின்
பாதையை மாற்றியதார்
பையில் பணம் தந்து மெய்யை காட்டித்தர
கைக்குள் போட்டுக் கொண்டதார்
விலக்கிடுவோம் விலக்கிடுவோம் - அவன்
வழிகளை விலக்கிடுவோம்

பல்லவி

மனிதரை கட்டியிழுக்கும் - அன்பின்
கயிற்றினை அறுத்தது யார்
தேவனும் மனிதனும் இணைந்திட கல்வாரி
சிலுவையை சுமந்தது யார்
கண்டு பிடிப்போம் கண்டு பிடிப்போம் - இந்த
உண்மையினை கண்டு பிடிப்போம் - மனிதரை

90. எப்படி பார்த்தாலும் இயேசு நல்லவர்

பல்லவி

எப்படி எப்படி பார்த்தாலும் இயேசு நல்லவரே
இப்படி அப்படி விலகிடாமல் காக்க வல்லவரே

சரணங்கள்

1. கோடரி மரத்தின் வேரின் அருகில் வைத்தவரே
கோடரி இரும்பை கூட மிதக்க விட்டவரே
கொடியென நான் படர செடியாய் இருப்பவரே
கனிகளும் எனில் மிகுந்திட - அருள்
வரம் தரும் உயர் கிருபைகள் மிகும் - எப்படி

2. களைகளை பிடுங்கி தீயில் எறிவேன் என்றவரே
களைகளை பயிரின் நடுவில் வளர விட்டவரே
களைகளின் நடுவினிலும் பயிரென வளர்ந்திடுவேன்
கதிர்மணியென பதர் பறந்திட
களஞ்சியமதில் சேர்த்திடுவார் - எப்படி

3. நன்மையும் கிருபையும் என்னை தொடரும் என்றவரே
நன்மை என்னில் இல்லையென்று உணர வைத்தவரே
செம்மையான இதயங்கொண்ட நீதியுள்ள மனிதருக்கு
வெளிச்சம் மகிழ்ச்சி விதைத்து வைத்தவர்
விரைவினில் அதை முளைக்கச் செய்வார் - எப்படி

91. தேவனே என் ஆண்டவரே

தேவனே என் ஆண்டவா
உம்மை மறந்த பாவி என் மீதிலே
மிகுந்த கிருபை பொழிந்ததை - நான்
பாடுவேன் வாழ் நாளெல்லாம்

சரணங்கள்

1. ஆதாமின் அரையிலமர்ந்து
அறிவுக்கனி நான் புசித்ததும் - அந்த
ஆபிராம் அரையமர்ந்த லேவி
தசமபாகம் கொடுத்ததும்
மாம்சத்தில் நான் பிறக்குமுன் - என்
பாவம் தீர நீர் மரித்ததும்
அதிசயம் மா அதிசயம் - இந்த
அகிலம் அறியா ஆச்சர்யம்

2. மரத்தின் பின்னால் ஒளிந்த மனிதன்
மகிமை ஆடையை இழந்ததும் - மரத்
தழைகள் தின்னும் மிருகம் ஒன்று - தன்
தோலை துணியாய் கொடுத்ததும்
மரத்தி லானதோர் சிலுவையை - எங்கள்
மகிமை தேவன் சுமந்ததும்
ஆச்சர்யம் மா ஆச்சர்யம் - இந்த
உலகை மாற்றிய சரித்திரம்

3. மரித்த சாமுவேல் எழும்பினாரென்று
பரிசுத்தர் சிலர் உரைப்பதும் - இன்னும்
மரித்த ஆவிகள் உலவுறாரென
வசனத்தை துணைக்கழைப்பதும்
உயிர்தெழுந்த தேவ மைந்தனை - சிலர்
மீண்டும் சிலுவையிலறைவதும்
அதிசயம் இது ஆச்சர்யம் - தூய
ஆவிக்கெதிரான விசித்திரம்

92. ஆசைகள் பலவிதம்

என் மனசுக்குள்ளே சில ஆசைகள் - என்
இதய வீணை எழுப்புகின்ற ஓசைகள்
நான் நடந்து வந்த பாதையில் என்னை நேசித்த இறைவா
மலர் இதழ்மேல் பனித்துளி போல் அன்பு வைத்தவரே

1. காலை நேர பனியினிலே காலாற நடந்து செல்ல ஆசை
மனசுக்குள் ஆசை
ஏதேன் தோட்டத்திலே என் இயேசுவுடன்
கரம் கோர்த்து நடந்து செல்ல ஆசை - என் மனசு

2. சீனாய் மலை கொடுமுடியில் மோசே போல் அமர்ந்து ஜெபிக்க ஆசை
மனசுக்குள் ஆசை
தேவன் எடுத்து தந்த அந்த பலகைகளில்
எனது பாடல் எழுதி வைக்க ஆசை - என் மனசு

3. வானவில்லை கொஞ்சம் வளைத்து வீணையாக்கி மீட்டி பாட ஆசை
மனசுக்குள் ஆசை
வானில் தூதருடன் இயேசு வரும் பொழுது - என்
பாடல் பாடி பறந்து செல்ல ஆசை - என் மனசு

4. குமரியிலே நான் பாட இமயமதில் எதிரொலிக்க ஆசை
மனசுக்குள் ஆசை
எல்லா தேசத்திலும் எல்லா மொழிகளிலும் - வியாசர்
லாரன்ஸ் பாடல் உலகம் பாடம் ஆசை - என் மனசு

93. விட்டில் பூச்சிகள்

விளக்கில்லாமலே வெளிச்சம் தேடிடும்
விட்டில் பூச்சிகள்
இரவை தாண்டாமல் விடியல் தேடிடும்
சின்ன சின்ன சூரியன்கள்..
வேத வசனம் விளங்காமலே - அதின்
ஆழம் அறியாமலே
ஆகாய சிலம்பம்
ஆடும் மனிதர்கள்

சரணங்கள்

1. விழிகள் இல்லாமல் தினம் தினம் தரிசனம்
காண துடிக்கும் கண்கள் - வேத
வார்த்தைக்கு வெளியில் வாழ்வை தொலைத்துவிட்டு
வானம் பார்க்கும் உள்ளங்கள்
உழைத்திடாமலே ஊதியம் பெற
துடித்திடும் நெஞ்சங்கள் - இந்த
உண்மை உணராமல் உரத்து கூச்சலிட்டு
ஒளிந்திடும் நமரங்கள்

2. வேதம் நமக்கு வந்த வழிகள் அறியாமல்
விளக்கமளிக்கும் சுத்தர்கள் - அதை
நமக்கு தந்தவர் செய்த தியாகம் அறியாமல்
உருட்டி புரட்டும் எத்தர்கள் - தூய
ஆவி பெயராலே ஆட்டம் போட்டு - கீழே
விழுந்து புரளும் மனுடர் - ஒரு
நாளில் இரகசியம் வெளிவரும் - அட
பாவம் இந்த மனிதர்

அனுசரணம்

மனக்கண் திறந்திடும் வெளிச்சம் வீசிடும்
காலம் வர வேணுமே - பல
பேதங்கள் மாறும் தீமைகள் ஓடும்
நாட்கள் மலரனுமே
மனையாட்டி சபையாகவே - மனவாளன் முகம் காணவே
கறை திறை நீங்கி திருச்சபை ஜொலிக்குமே

94. சீயோன் குமாரத்தி

பல்லவி

சீயோன் குமாரியின் சிரசினிலே
நித்திய சந்தோஷம் நிலைத்திருக்கும்
ஆனந்த களிப்பில் இதயங்கள் பாடிட
ஆனந்த துதி எழும்பும்

சரணங்கள்

1. பாதம் கல்லில் இடறாதபடி
கரங்களில் ஏந்திடவே
வழி பாதைகளில் தினம் தாங்கிடவே
தூதர்கள் விரைந்திடுவார்
அல்லேலூயா ஜெயம் அல்லேலூயா
அல்லேலூயா துதி - அல்லேலூயா

2. மரண இருள் பள்ளதாக்குகளில்
பயமின்றி நடந்திடவே
அவர் கோலும் தடியும் நம்மை தேற்றிடவே
சஞ்சலங்கள் விலகிடுமே - அல்லேலூயா

3. கன்னிகையின் கற்போடு கடந்து செல்வோம்
கரை திறை நீங்கிடவே
கண்ணிமைப்பொழுதில் மறுரூபமாகி
மணவாளனின் முகம் காண்போம் - அல்லேலூயா

4. பாடுகளில் விசுவாசமதில்
விசுவாச பரிட்சைகளில்
தூய ஆவியினால் நமக்கு உண்டாகிடும்
சந்தோஷம் அடைந்திடுவோம் - அல்லேலூயா

5. சீயோன் எனும் சுவிசேஷகியே
சிரசினை உயர்த்திடுவாய் - உந்தன்
வாசல்களில் பிரவேசித்திட
அரசரும் விரைந்திடுவார் - அல்லேலூயா

95. இயேசுவே ஆண்டவர்

உதிர்கின்ற சருகுகள் உதிர்ந்து போகட்டுமே
உதிரா இதழ்களாய் இணைந்திருப்போம் இயேசுவிலே
மகிழ்ந்திருப்போம் என் மனமே

பல்லவி

மனமெங்கும் நிறைந்திருக்கும் - என்
சிந்தையிலே உறைந்திருக்கும்
இயேசுவே ஆண்டவர்
இடையர் கூடி வர அறிஞர் தேடி வர தூதர் பாடி மகிழ
விண்ணோர்கள் பண் பாட மண்ணோர்கள் கொண்டாட
என்றென்றும் மண்ணில் சமாதானமே

சரணங்கள்

1. பாடாத இராகம் ஆனேன் ஒளிராத தீபம் ஆனேன்
விடியாத இரவானேன் முடியாத கதையானேன்
எனது நிழலும் எனை ஒதுக்கிட
எனது நிலை என்னவென்று நான் காணவே
என் கால்கள் என் பாதை என் தீபம் என் தேவன்
எந்நாளும் நின் வேதம் என் கீதமே

2. கடல் மீது மழையானேன் கானகத்தில் நிலவானேன்
மீட்டாத வீணையானேன் எழுதாத கவியானேன்
சுமக்க முடியா சோக சுமைகள்
விலக்கும் வழி என்னவென்று நான் தேடவே
சொன்னாலும் மாறாது சொல்லாமல் ஆறாது
பொல்லாத மாந்தர் செயல் மாறவே..

3. நிறமில்லா மலரானேன் இனிப்பில்லா தேன் ஆனேன்
அனலின்றி தணலானேன் விழிகளின்றி இமையானேன்
புதுமை மனிதம் புதிய உலகம்
விடியும் என்று நின் பாதம் நான் பாடவே
விண் மீன்கள் விண் தூதர் விண் பாடல்கள் பாட
எந்நாளும் நம் வாழ்வில் கொண்டாட்டமே

96. வெள்ளை மனமும் தொல்லைதான்

வெள்ளை மனம் கூட தொல்லையாகிவிடும்
இல்லையென்று சொல்வாயோ மனமே
முல்லை மலர் சிரிப்பின் வெள்ளை நிறம் - அந்த
கள்ளிப்பாலிலும் உண்டு மனமே
அள்ளிப்பருக முடியுமா மனமே

சரணங்கள்

1. ஏதும் அறியாத அப்பாவி தம்பியை
ஏதேனின் அருகினில் கொன்று விடும்
பல வண்ண ஆடை அணிந்த தமயனை
பாழும் கிணற்றிலே தள்ளிவிடும்
பொல்லாத உலகமடா
இதை நம்புவது மடமையடா - வெள்ளை

2. பெரு மழைக்கு ஒதுங்க பேழை செய்தவனை
பழரசம் கொடுத்தே மயக்கிடும்
எரியும் நெருப்பில் தப்பி மலையில் ஒளிந்தவனை
பாவ சேற்றிலே அமிழ்த்திடும்
இது சோதோமின் கூட்டமடா - இதை
விலக்கிட வேண்டுமடா - வெள்ளை

3. எழுதி கொடுத்தாலும் மலையில் உடைத்தவனை
கானானில் நுழைந்திட தடுத்திடும்
கழுதை உரைத்தாலும் ஏற்க மறுத்தவனை
பாதி கூட்டமும் தொடர்ந்திடும்
இது பிலேயாம் கூட்டமடா
புறக்கணித்திட வேண்டுமா - வெள்ளை

4. சாதியால் பிரித்து சாதிக்க நினைத்தது
சரியாய் போனதடா - இதை
அறிந்த பின்னும் நீ உறங்கி கிடப்பது
சரித்திர கொடுமையடா
இது வந்தேறி கூட்டமடா
இதை விரட்டிட வேண்டுமடா - வெள்ளை

5. மனிதர் எதிர்த்தாலும் மூடி மறைத்தாலும்
தேவ கரம் காக்கும் தினமே
பலத்த அவர் கரத்தில் அடங்கியிருந்தாலே
உயர்த்தும் தேவன் அவர் மனமே
அவர் வலக்கரம் நிழல் தருமே
நம்மை அநுதினம் நடத்திடுமே - வெள்ளை

97. இறைவனை துதிக்கும் இயற்கை

பல்லவி

நிலவும் வான சுடரும்
எழு கதிரோன் உலவும் வானும்
துள்ளித் திரியும் மான்கள் பறவை
வண்ண மலர்கள் யாவும் என்னோடு உம்மை துதிக்கும்

சரணங்கள்

1. உலவும் தென்றல் காற்றினிலே
உமது வார்த்தை கேட்டிடுவேன்
குழலின் இனிய ஓசையிலே - உம்
அன்பை நினைத்து தினம்
சங்கீதம் நான் பாடுவேன் - புது
சங்கதிகள் அமைத்து ஸ்வரங்களை இணைத்து
சந்த கவிகள் சூட்டுவேன்
சந்ததம் என்னோடு இருக்கின்ற தேவனை
ஜதிகள் சொல்லி துதிப்பேன்
சங்கீதமே என் சந்தோஷமே
உமது சமூகமே - நிலவும்

2. அலைகள் புரளும் கடல் நடுவே
உமது வார்த்தை ஒலித்திடுதே
வீசும் புயலின் இடையினிலே - உம்
கரங்கள் துணைக்கு வர
புது பாடல் நான் பாடுவேன் - ஒரு
களங்கமில்லாத ஞானப்பால் கலந்து
புது கவிதை சாற்றுவேன்
வான தூதருடன் வருகின்ற தேவனை
கானம் பாடி புகழ்வேன்
சுக இராகமே என்றும் நான் பாடவே
உமது கிருபையே - என்றும் - நிலவும்

98. சலனமும் சஞ்சலமும்

பல்லவி

சலனம் கொண்ட மனதில்
சஞ்சலங்கள் வருவது நிஜமே
வசனம் நிலைத்திருக்கும் மனதில்
சந்தோஷம் மலர்வதும் நிஜமே

சரணங்கள்

1. கிறிஸ்துவின் சிந்தை அணிந்ததினால்
கவலைகள் என் மேல் படர்வதில்லை
உலக சிந்தையால் தேவ பகைஞனாய்
மாறினால் வியப்பு ஏதுமில்லை - எனை
மயக்கும் உலகிலே மயங்கிடாமலே
வலக்கர நிழலில் தங்கிடுவேன் - சலனம்

2. கிறிஸ்துவின் கரம் என்னை தாங்குவதால்
துயரக்கடலில் நான் வீழ்வதில்லை
இதய நினைவுகள் அறிந்த ஆண்டவர்
என்றும் என்னைக் கைவிடுவதில்லை - என்
வாழ்வு தாழ்விலும் வாட்டும் வெயிலிலும்
ஆண்டவர் கர நிழல் மறைவதில்லை - சலனம்

3. கிறிஸ்துவின் அன்பென்னை நெருக்குவதால்
உலகம் என்னை நெருங்கி வருவதில்லை
சிலுவை சுமப்பதால் பாடு சகிப்பதால்
சோதனை நேரத்தில் சோர்வதில்லை - என்றும்
உமது கரத்தினால் நன்மை பெறுவதால்
தீமை என்னை என்றும் தொடர்வதில்லை - சலனம்

4. கிறிஸ்துவின் கிருபைக்குள் வாழ்வதினால்
தீயவர் என்னை தொடுவதில்லை
நன்மை கிருபைகள் தொடர செய்திடும்
தேவ அன்பு என்றும் குறைவதில்லை - அந்த
இறுதி நாள் வரை இயேசு ஆண்டவர்
கரங்களை நான் என்றும் விடுவதில்லை - சலனம்

99. நித்திய தேவனே சத்திய மைந்தனே

பல்லவி

நித்திய தேவனே சத்திய மைந்தனே
முத்திரையாக தேவன் தந்த தூய ஆவியே - எனக்கு
துதி ஸ்தோத்திரம் தினம் பாடி மகிழுவேன்
பதினாயிரம் கவி பாடி புகழுவேன் - நித்திய

சரணங்கள்

1. தூதர் கூட்டம் பாடுதே தூய தூய தேவனே
நானும் சேர்ந்து உம்மை பாடுவேன்
உம்மை தேடும் யாவரும் உமக்குள் மகிழ்ந்து பாடவே
சந்தோஷம் சந்தோஷமே - நித்திய

2. பறவை கூட்டம் பாடுதே பரலோக தேவனை
பணிந்து குனிந்து தினமும் பாடுவேன்
நடுவில் வந்து வாசம் பண்ணும் தூய ஆவியானவரை
நாள்தோறும் நானும் பாடுவேன் - நித்திய

3. பாலர் கூட்டம் பாடுதே பரிசுத்தமாய் ஆடுதே
நானும் பாடி நடனம் ஆடுவேன்
எம்மை மீட்க மனிதனாய் மண்ணில் வந்த இயேசுவே
ஆண்டவரே உம்மை பாடுவேன் - நித்திய

100. இயேசுவுக்கே கடன் கொடுப்போம்

பல்லவி

கடன் கொடுப்போம் - கர்த்தருக்கே
கடன் கொடுப்போம்
ஏழைகளுக்கு இரங்கி - நிதம்
இயேசுவுக்கே கடன் கொடுப்போம்

சரணங்கள்

1. போதுமென்ற மனதிருந்தால் மிகுந்த இலாபம் பெற்றிடலாம்
தேவ பக்தி உடனிருந்தால் ஆசீர்வாதம் அடைந்திடலாம்
பேராசை பெருநஷ்டம் உணர்ந்தவர்க்கில்லை கஷ்டம்
ஐஸ்வர்ய மயக்கம் நம்மை மதிகேட்டில் தள்ளியழிக்கும் - கடன்

2. இயேசு எந்தன் ஜீவன் என்றால் சாவுகூட லாபமன்றோ
ஞானம் தரும் ஆதாயம் பசும் பொன்னைவிட உத்தமமன்றோ
பொல்லாத பொருளாசை சேதமாக்கும் மாம்ச இச்சை
வேதனைகள் உருவகுத்தும் தீமைக்கெல்லாம் வேராகும் - கடன்

3. அகிலத்தை ஆண்டு அதையும் ஆதாயமாக்கிடலாம்
ஜீவனது நஷ்டமடைந்தால் மனிதர்க்கு அதில் லாபமென்ன
ஐஸ்வர்யம் சம்பத்து எல்லாம் எவன்பெற அவர் சித்தமோ
அவன் பங்கில் மகிழ்ந்திடவே அதிகாரம் அவர் தருவார் - கடன்

கடன் தொல்லை தீர்ப்பதுதான் கர்த்தரது வேலையோ
பாவ கடன் தீர்ந்த பின்னே உலகம் நமக்கு
பெருந்தொல்லையோ - கடன்

101. இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்

இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்
எல்லாம் எனக்கு வேண்டும்
பரிசுத்தம் வேண்டும் பயபக்தி வேண்டும்
போராடி ஜெபித்திட வேண்டும்

சரணங்கள்

1. சோதனை வேதனை நேரத்திலும்
சோர்ந்திடாமலே ஜெபித்திட வேண்டும்
சுருக்கமாய் ஜெபிக்க பழகிட வேண்டும்
சொற்கள் மிகுதியை தவிர்த்திடல் வேண்டும்
நல்ல போராட்டம் போராடி உலகில்
ஓட்டத்தை முடித்திட வேண்டும் - இதுவும்

2. ஆவியின் வரங்கள் அத்தனையும்
ஆண்டவர் எனக்கு அருளிடவேண்டும்
ஆவியின் அனல் எனில் குறைந்திடாமல்
அவர் பணி நான் என்றும் முடித்திட வேண்டும்
அந்நியர் அனைவர்க்கும் ஆண்டவர் செய்தியை
அந்நியர் மொழியில் அறிவிக்க வேண்டும் - இதுவும்

3. வேதம் சொல்லும் வழிகளிலே
வாழ்வெனும் பயணம் தொடர்ந்திடவேண்டும்
ஏழு ஸ்வரங்கள் இசைத்திட வேண்டும்
எத்திசையிலும் அது ஒலித்திட வேண்டும்
ஜீவ புத்தகம் திறந்திடும் நாளில்
என் பெயர் அதிலே இருந்திட வேண்டும் - இதுவும்

102. நரனை நம்பாதே

பல்லவி

நாசியிலே சுவாசமுள்ள நரனே - உன்னை
நம்புவதில் யாருக்கென்ன பலனே
வெட்டுப்பட்டு விழுந்தாலும்
தண்ணீர்பட்டு துளிர்க்குமென்று
மரத்தையும் நம்பலாம் - அது
வளருமென்று சொல்லலாம்
மரம் போல் வளர்ந்த உன்னை
எத்தனைக் காலம் நம்பலாம் - நாசி

சரணங்கள்

1. காலி பானை உடலொரு நாள் உடையும்-உன் வயதும்
சூலிக்காரன் வருஷம் போல கழியும்
வேலி தாண்டி மேய்கின்ற காளைகள் இங்கு அதிகம் - உன்
வாலிபத்தின் மிடுக்கும் முடுக்கும் எத்தனை காலம் நிலைக்கும்
- நாசி

2. அச்சம் வந்தால் அழகு முகம் வெளுக்கும் - மனதில்
எரிச்சல் வந்தால் மனிதன் முகம் கருக்கும்
உலகமெல்லாம் உந்தன் கையில் கிடைத்தும் - உன்
ஆத்துமாவை இழந்து விட்டால் எத்தனை லாபம் கிடைக்கும்
- நாசி

3. சிறகொடிந்தால் பறவை எப்படி பறக்கும் - உந்தன்
மனமுடைந்தால் இரவில் ஏது உறக்கம்
இயேசு உன்னில் வந்தால் வாழ்வு செழிக்கும் - வேத
வசனத்திலே நிலைத்திருந்தால் நித்திய மகிழ்ச்சி கிடைக்கும்
- நாசி

103 நேசபாலம் இயேசு

தொகையறா

உலகெலாம் படைத்தவன் தாள் போற்றி
உயிரெல்லாம் வளமுடன் காப்பவன் தாள் போற்றி
நேசத்தின் பாலமாய் நிலைத்தவன் தாள் போற்றி
இயேசுவே தெய்வமே உந்தனடி என்றும் போற்றி

பல்லவி

நேசபாலம் இயேசுவே - என்
ஆசையெல்லாம் இயேசுவே
ஆசையாய் என்னை தேடி வந்த
பாச மலரும் இயேசுவே

சரணங்கள்

1. கோடை வெயிலில் வாடினேன் - குளிர்
தென்றலாய் என்னை தேற்றினீர்
பாவ சுழலில் மூழ்கினேன் - கரை
சேரவே கரம் நீட்டினீர்
ஆயனே தேவ சேயனே - எனை
ஆள வந்த ஐங்காயனே - நேச

2. வாடை காலத்து வசந்தமே - ஜீவ
ஓடையாய் ஆவியூற்றுமே
பேதை என் இருள் நீக்கியே - ஒளி
ஆடை தந்தெனை மாற்றுமே
நாளெல்லாம் உம்மில் வாழவே - மா
கிருபையால் எனை மூடுமே - நேச

3. மாமிசம் எனை வாட்டுதே - தேவ
ஆவியே வழி காட்டுமே
ஆவியில் நிறைவாகவே - உமை
போற்றும் வரம் எனில் கூட்டுமே - நீ
வானில் வரும் அந்த நாளில - உன்
தூய திருமுகம் காணவே - நேச

104. இலேசான உபத்திரவம்

பல்லவி

உபத்திரவம் இலேசானது - அதி
சீக்கிரத்தில், நீங்கிபோனது
நுகத்தடிகள் மெதுவானது - என்றும்
அவர் சுமைகள் இலகுவானது

சரணங்கள்

1. அவர் கிருபை போதுமானது - மலை
விலகினாலும் விலகாதது
வானம் பூமி உயரம் காட்டிலும் - இங்கு
அவர் கிருபை பெரிதானது

2. தேவ அன்பு ஒழியாதது - நம்
பாவம் போக்கும் நதியானது
அன்னை தந்தை அன்பை காட்டிலும்
கல்வாரி அன்பு மேலானது

3. வேத வசனம் உயர்வானது - தெளி
தேனிலும் அதி ருசியானது
ஏழுமுறை மண் குகையில் உருக்கின - நல்ல
வெள்ளியைப்போல் தூய்மையானது

4. ஊக்கமான ஜெபமானது - நம்
வாழ்வில் மிகுந்த பெலனானது
ஜெபிக்கும் மனிதர் வாழ்க்கையானது - என்றும்
தோல்விகளை காணாதது

105. இயேசுவைப்போல் வேறு தெய்வம் இல்லை

பல்லவி

உம்மைப்போல் ஒரு தெய்வம் இல்லையே - இதை
இல்லையென்று சொல்ல யாருமில்லையே
வானம் பூமி யாவும் பலகோடி மாந்தர் யாரும் - உந்தன்
பார்வைக்கு என்றும் மறைவதில்லையே

சரணம்

1. மரண இருளின் பள்ளம் அதை உருவ நடந்து செல்லும்
தருணம் உந்தன் கோலும் தடியும் தினமும் என்னை தேற்றும்
கருணையருளும் தேவா உந்தன் புதிய கிருபை தாரும்
மருளும் பாவியெந்தன் தீய மனதை இன்று மாற்றும்

2. தன் காலத்தில் தன் கனிதரும் இலைகள் உதிர்ந்திடாத மரம்
நீர்கால்களின் ஓரத்திலே நிலைத்திருந்து செழிக்கும்
இரவு பகலும் தியானம் தூய வேதம் எந்தன் தாகம்
நினைக்க நினைக்க இனிக்கும் உந்தன் நாமம் எனக்கு போதும்

3. உலவும் தேவ கண்கள் என் கருவைக்கூட பார்க்கும்
உமது கரங்கள் மறைவில் இருக்கும்போது ஏது கலக்கம்
உயர் அடைக்கலம் நீயே தினம் தங்கும் மறைவிடம் நீயே
இறைவன் எந்தன் பங்கு என்று என் இதயம் சொல்வதும் சரியே

106. இயேசுவே உம் திருமுகம்

பல்லவி

இயேசுவே உம் திருமுகம் காணும்
நாளும் வாராதோ - என
ஏங்கி தவிக்கும் ஏழை எந்தன்
ஏக்கம் தீராதோ - மனதின்

சரணம்

1. ஆதாமைப் போல் என் மீறுதல் மூடி
மடியினில் ஒளித்து வைத்தேனோ
சோதோமின் மேல் என் பார்வை திரும்பி
ஓடி ஒளிந்தேனோ
சாரமில்லா சாந்துகள் பூசிடும்
மாய மனிதர்கள் விலகட்டுமே
திருமறை ஒளி தரும் வெளிச்சத்திலே - என்
பயணம் தொடரட்டுமே - இயேசுவே

2. அகத்தினில் தூய்மை இழந்ததினால் - உம்
தரிசனம் இழந்தேனோ
உதிரத்தினால் புது உடன்படிக்கை செய்தீர்
உம்மை துதித்திடுவேன்
கிருபையின் ஆவி ஊற்றும் ஐயா
கிருபை தேவனின் கரம் துணையே
வேண்டுதல் ஆவி நிறைந்த என் கண்கள்
உம்மை நோக்கட்டுமே - இயேசுவே

3. கனிதரும் வாழ்வே வருகையின் நாள்வரை
இனி எம்மில் தொடரட்டுமே
பனிபோல் இறங்கும் உம்திரு வசனம்
மனிதரில் நிரம்பட்டுமே
பாடுகளிடையே பரமனை சேவிக்கும்
வாலிப இதயங்கள் எழும்பட்டுமே
திருச்சபை ஆவியின் அனலால் நிறைந்து
பரிசுத்தம் பெருகட்டுமே - இயேசுவே

107. கடலின் அலைகள் அடங்குமா

பல்லவி

கடலின் அலைகள் அடங்குமா
உடைந்த கலயம் இணையுமா
சிவிங்கி புள்ளிகள் மாறிப்போகுமா - அந்த
எத்தியோப்பியன் நிறமும் வெளுக்குமா - உலகில்

சரணம்

1. வேலியின் அருகே செல்லும் பழக்கம் ஏனம்மா
கண்ணைப் பறிக்கும் கனிகள் உந்தன் தாகம் தீர்க்குமா
கள்வன் அவன் சொன்ன வார்த்தை உண்மையாகுமா - கட

2. மாலை நேரத்தில் மேல்மாடி ஒரத்தில்
கவிஞனவன் கண்கள் கலங்கி போனதேனம்மா - ஒரு
பெண்ணுக்காக கொலையும் செய்ய துணிந்ததேனம்மா - கட

3. விதையொன்று விதைக்க வேறு செடி முளைத்திடுமா
அவர் நடாத நாற்றுகள் இங்கு நிலைத்து நின்றிடுமா
மாசில்லாத கொடிகள் குறைந்த கனிகள் கொடுக்குமா-கட

4. வேலிகள் பயிரை இங்கு மேய்த்திடல் தகுமா
தவறிப்போன ஆட்டைப்போல கதறலாகுமா
நல்ல மேய்ப்பன் செல்லும் வழியை விலக்கலாகுமா

கடலின் அலைகள் அடங்குமே
உடைந்த கலயம் இணையுமே
சிவிங்கி புள்ளிகள் மாறிப்போகுமே
உதிரத்தாலே மாறிப்போகுமே - இயேசுவின்

108. நம்ப முடியாத உலகம்

பல்லவி

நம்ப முடியா உலகம்தானடா- இது
நம்ப முடியா உலகம்தானடா
பளபளக்கும் மினுமினுக்கும் பழம் போல் பல்லிளிக்கும்
நம்பி நீ கை நுழைத்தால் பாம்பென படமெடுக்கும்

சரணம்

1. பொய்யான வார்த்தை சொல்லி மதம் மாற்றுவார் - எங்கள்
மெய் தெய்வம் இயேசு உந்தன் மனம் மாற்றுவார்
பாடு துன்பம் இந்த உலகில் பேரின்பம் அந்த உலகில்
தந்திடுவார் நம்பி வந்திடுவாய்

2. ஐஸ்வர்யம் பெருகுமென்று இவர் கூறுவார் - சிலர்
அதின்மேல் நம்பிக்கை வைத்தே தடுமாறுவார்
தீமைக்கு அது வேராகும் தீயவர்க்கு சொந்தமாகும்
கண்டிடுவாய் வேதம் நம்பிடுவாய்

3. மெய்யுலகம் சேர்க்க இயேசு வழிகாட்டுவார் - பலர்
பொய்யுலக வாழ்வு இதில் சுகம் தேடுவார்
பாடு துன்பம் சாபம் என்பார் மெய்வழியை மறைத்திடுவார்
தப்பிடுவாய் நீ தப்பிடுவாய்

4. செங்கடலை பிளந்துவிட்டது மோசேயின் கோலோ - அந்த
கோலியாத்தை வீழ்த்தியதும் தாவீதின் கல்லோ
போவாசின் அன்னையவள் ராகாபை வேசியென்பார்
என்ன சொல்வேன் நான் என்ன சொல்வேன்

5. சத்தியத்தை சிலுவையிலே மீண்டும் அறைவார் - இயேசு
சிலுவையில் சிந்திய இரத்தத்தை காலால் மிதிப்பார்
நன்மை செய்யும் இயேசுவையும் வெண்கல சர்ப்பம் என்பார்
என்ன செய்வேன் நான் என்ன செய்வேன்

109. மனிதரின் கைகள்

பல்லவி

காலையிலே மாலையிட்டு
மாலையிலே மண்ணையள்ளி
தள்ளுகின்ற கைகளடா - பாவ
மனிதனின் கைகளடா
ஓர் விரல் விண்ணை நோக்க
மூன்று விரல் தன்னை காட்ட
சுட்டு விரல் நீட்டியுன்னை
குற்றப்படுத்தும் கொடிய கைகளடா
நரரின் கைகளடா

சரணங்கள்

1. தோட்டத்து கனி தந்த தோகையிவள் என்று
காட்டிய ஆதாமின் கைகள்
தோட்டத்தை பறித்திட நாபோத்தை கொலை செய்த
ஆகாபு அரசனின் கைகள்
நோவாவின் பேழையை எள்ளி நகையாடி
வெள்ளத்தில் மூழ்கிய கைகள்
போராசையாலே குஷ்டரோகியாய்
மாறிய கேயாசி கைகள் - தடு

2. சமுத்திரம் பிளந்திட சாதனை புரிந்திட
நீட்டிய மோசேயின் கைகள்
ஆத்திரம் கோபம் கண்களை மறைத்திட
கற்பலகை உடைத்திட்ட கைகள்
கைவேலையான கன்றுக்குட்டி செய்து
கெட்டுப்போன ஆரோனின் கைகள்
சொத்திலொரு பங்கை மறைத்து வைத்ததால்
செத்து போன அனனியா கைகள் - வீணாய்

3. ஆதாமுக்குள் செத்த அகிலம் மீட்டுவிட்ட
தேவ ஆட்டுக்குட்டி கைகள்
பார சிலுவையதை தூக்கமுடியாமல்
தூக்கி சுமந்த கைகள்
ஐங்காய மேற்றிட ஆணி துளைத்திட
ஆண்டவர் நீட்டிய கைகள்
ஐயனே என ஆசையாய் அழைத்து
மகன் என அணைத்திடும் கைகள் - எனை

110 மத்தேயு 7:7 பிடிக்கும்

இரண்டு பக்கம் கருக்குள்ள பட்டயம்
அது திருமறை வேத வசனம்
அதன் ஒரு பக்கம் மட்டும் பார்த்து
தமதாசைகளை திணித்து
மறுபக்கம் பாராமல் மயக்கத்தில் ஆழ்ந்துவிட்ட
மனிதர்களே!!

பல்லவி

மத்தேயு சுவிசேஷம்
7:7 எங்களுக்கு பிடிக்கும் - ஆனால்
லூக்கா சுவிசேஷம் 6:38
நெனச்சா மனசுக்கு கசக்கும் - ரொம்ப கசக்கும்
கேட்டு கேட்டு ரொம்ப பழகிப்போச்சு - இப்போ
கொடுக்க சொன்னா அதை மனசு ஏற்குமா

சரணங்கள்

1. உள்ளதெல்லாம் கொடுத்துவிட்டால் - அப்போ
குடித்தனம் நமக்கெதற்கு
பணம் பொருள் நமக்கிருந்தால் - அட
அடுத்தவன் தயவெதற்கு
இந்த வாழ்கைத்தான் எனக்கு வேண்டும் - அட
பட்ட துன்பங்கள் போதும் போதும் - இந்த மத்தேயு

2. சிலுவையை சுமக்க சொன்னார் - அது
சுமையா கணக்குது
கல்வாரி பாதையிலே - சிறு
கற்களும் தடுக்குது
பாடில்லாத ஒரு பரவச வாழ்க்கையை
நெனச்சு நெனச்சு மனம் ஏங்குது ஏங்குது - மத்தேயு

3. சத்துருக்களுக்கு பசிச்சா - நாங்க
சாப்பாடு போடணுமா
சாத்தானை மிதிப்பது போலவே காலால்
மிதிக்கவே தோணுமா
உலக ஐஸ்வர்யம் எல்லாம் வேண்டுமென
தினம் தினம் ஜெபித்திட மனசு விரும்புது - மத்தேயு

4. ஆணிகள் பாயாத - அலங்கார
சிலுவை எதற்கு
வாசலை திறவாத - பெரும்
வீடுகள் நமக்கு எதற்கு
கரையை சேராத கப்பர்நகூம் படகுகள்
ஏராளம் மிதந்திடும் மாய உலகிலே - மத்தேயு

111. திறந்தருளும்

பல்லவி

அருளும்
திறந்தருளும்
கண்களை திறந்தருளும்
வேத மகத்துவ ஆழம் அறிந்திட....
தேவ திரித்துவ ஞானம் உணர்ந்திட....
திறந்திடும் மனக்கண்கள் எனக்கில்லையே - அதினால்

சரணங்கள்

1. எதிரிகள் சூழ்ந்தென்னை நெருக்கையிலே - மனம்
பதறியழுது தினம் புலம்புகிறேன்
தேவனின் சேனைகள் சூழ்ந்தென்னை காப்பதை
காண்கின்ற கண்களும் எனக்கில்லையே - அதினால்

2. வறண்ட வனாந்திரம் தொடர்ந்திடுதே - சிறு
துருத்தியும் நீரின்றி உருண்டிடுதே
பிள்ளையின் அழுகுரல் ஆண்டவர் கேட்டிட
சுவை நீர் சுணையொன்று தென்படவே - எனக்கு

3. உதிரத்தினால் பாவ களிம்பகற்றி - வெறும்
பதர் என அலைந்த என் துயர் விலக்கி
கதிர்மணியாக்கி தம் களஞ்சியம் சேர்த்திடும்
கற்பகமே தற்பரனே - அற்புதனே உமை - காண

4. வழியருகேயமர்ந்த வறியவன் போல் - இரு
விழிகளும் இழந்துளம் உடைந்ததினால்
கதிரொளி கண்டபின் மறைந்திடும் பனித்துளி
மறைவதைப் போலெந்தன் அகத்திரை - திறந்திட

112. வெறுக்கும் உலகம்

பல்லவி

உலகம் என்னை வெறுத்தாலும் - முழு
பகையாய் மனிதர்கள் பகைத்தாலும்
தாங்கவொண்ணா துயர் நீக்கி - பெரும்
வேதனை தாங்கிட பெலன் தருவார்

சரணங்கள்

1. அக்கினி பொறிகள் பறந்திடும் காலம்
வருத்தம் மனிதரில் பெருகிடும் நேரம்
ஆண்டவர் நாமம் உயர்ந்த அடைக்கலம்
போதும் போதும் எனக்கவர் பாதம் - உலகம்

2. ஆண்டவர் செய்யும் பெரும் காரியம் யாவும்
ஆராய்ந்து பார்த்திட எவரால் கூடும்
கர்த்தரின் நாமம் பலத்த என் துருகம்
போதும் போதும் எனக்கது போதும் - உலகம்

3. துதிகள்பாடி கரம்தட்டி மகிழ்வேன்
துன்பங்கள் என்னை என்ன செய்யும்
இயேசுவின் நாமம் இனித்திடும் நாமம்
வேண்டும் வேண்டும் எனக்கின்னும் வேண்டும் - உலகம்

113. ஆயிரம் ஆண்டு ஆளுகை

பல்லவி

ஆயிரம் ஆண்டுகள் ஆளப்போகும் இராஜாதிராஜனே
உந்தன் இராஜ்ஜியம் சீக்கிரமாக வந்திட வேண்டுமே

1. பஞ்சம் இல்லையே அங்கே பட்டினி இல்லையே
துன்பம் இல்லையே அங்கே துயரம் இல்லையே
அன்பு இராஜ்ஜியம் அது நீதியின் இராஜ்ஜியம்
என்றென்றும் அழியாத சாம்ராஜ்ஜியம் - ஆயிரம்

2. புசிக்க விருந்து உண்டு பசி தொடர்வதில்லையே
தாகம் தீர்க்கும் ஜீவ தண்ணீர் குறைவதில்லையே
நித்திய இராஜ்ஜியம் அது சத்திய இராஜ்ஜியம்
என்றென்றும் அழியாத கிறிஸ்துவின் இராஜ்ஜியம் - ஆயிரம்

3. கவலையில்லையே அங்கே கண்ணீர் இல்லையே
இதயம் மகிழ பாடல்தவிர வேறில்லையே
இன்ப இராஜ்ஜியம் அது மகிமை இராஜ்ஜியம்
என்றென்றும் அழியாத தூய இராஜ்ஜியம் - ஆயிரம்

-கிறிஸ்தவம்

114. சுழலும் உலகம்

பல்லவி

சுற்றி சுற்றி ஓடும் - இந்த
உலகம் பெரிசு
உலகில் வாழும் மனிதரின் உள்ளம்
ரொம்ப சிறுசு
இந்த சின்ன உள்ளத்திலே - இயேசு
தங்கிட விரும்புகிறார்
வாசற்படியில் நின்று டக் டக் என்று
கதவை தட்டுகிறார்

1. விண்ணைவிட்டு மண்ணில் இயேசு வந்தது எதற்காக - தன்
தந்தையைவிட்டு பூவில் இயேசு உதித்தது எதற்காக
பாவ உலகில் வாழும் மனிதரின் பாவம் போக்கவே
புது வாழ்வு தந்து சின்ன உள்ளத்தில் வாழவே - வாசற்படி

2. விண்ணின் தேவன் மனிதரின் சாபம் தீர்த்தது எதற்காக - புது
வாழ்வு தந்து புது மனிதனாக வாழவைத்தது எதற்காக
வாழும் வரை பரிசுத்தமான சாட்சியாய் வாழவே
இறுதிவரை இயேசுவே உந்தன் துணையாய் இருக்கவே - வாசற்படி

3. உள்ளத்தூய்மை உள்ளவராக வாழ்வது எதற்காக
உன்னதர் இயேசு துணையாய் கூட வருவது எதற்காக
நீதிபரர் இராஜ்ஜியத்தில் உன்னை சேர்க்கவே
நீதி கிரீடம் உந்தன் சிரசில் அழகாய் சூட்டவே - வாசற்படி

-கிறிஸ்தவம்

115. கண்ணீரை மாற்றும் இயேசு

பல்லவி

கண்ணீர் விட்டு கதறியழுது துடிக்கும் தம்பி - உன்
கண்ணீர் துடைக்கும் மருந்து ஒன்று இருக்கு தம்பி
இரட்சிபென்னும் மருந்து அது இயேசுவிலே இருக்கு
நம்பி வா அவரிடம் மன்னிப்பளிப்பார் இலவசம்

சரணங்கள்

1. தினதந்தி பேப்பரிலே தினம் தினம் தொடர்ந்து வரும்
சிந்துபாத் கதையை போல பாவம் உன்னைத் தொடருதோ
அமெரிக்க மக்களையே லெட்டரில் வந்து பயமுறுத்திய
ஆந்த்ராக்ஸ் கிருமி போல மனதில் பீதி கிளப்புதோ
அச்சமில்லை அச்சமில்லை ஆண்டவர் இயேசு இருக்கையிலே
பயமில்லை பயமில்லை பாவ பரிகாரம் இயேசுவிலே

2. ஆப்கன் குகைகளிலே பின்லேடன் போல் ஒளிவாயோ
அத்திமர நிழலினிலே ஆதாம் போல மறைவாயோ
அந்தியூர் காடுகளில் வீரப்பன்போல ஒளிவாயோ
ஆகாய கூடு கட்ட கழுகு போல பறப்பாயோ
பாதாள ஆழத்திலே படுக்கை போட்டு படுப்பாயோ
அங்கேயும் ஆண்டவர் கரம் தொடர்ந்து பிடிக்கும் அறிவாயோ

3. திங்கள் முதல் வெள்ளிவரை தினம் தினம் இரவினிலே
சின்னதிரை தொடரைப்போல உலகம் உன்னை இழுக்குதோ
விழுங்கிட உன்னைத் தேடி சிங்கம் போல் வகைத்தேடி
உலவும் எதிரியவன் வாயும் திறந்து அழைக்குதோ
தப்பிவிடு தப்பிவிடு இந்த தருணம் மீண்டும் வருவதில்லை
நம்பிவிடு நம்பிவிடு நம் இயேசுவை போல எவருமில்லை

116. மார்கழிமாத பூவாய் மலர்ந்த இயேசு

பல்லவி

மார்கழி மாசத்திலே பெத்தலகேம் சாணத்திலே
வானப்பூ மலர்ந்ததென்று வாசலிலே கோலமிட்டேன் தங்கமே
தீ நரகம் அடைத்திடவே தங்கமலர் மலர்ந்ததென்று
நீர் தெளித்து கோலமிட்டேன் தங்கமே

சரணங்கள்

1. பாராண்ட வேந்தரெல்லாம் காணாமற் போன கதை
மூவேந்தர் ஆண்ட தமிழ் நாட்டறிஞரும் உரைத்த கதை
தித்திக்கின்ற தமிழினிலே சித்தர்களும் விளக்கியதை
முத்தமிழில் நாவினிக்க பாடி பாடி கோலமிட்டேன்

2. போற வழிப்பாதையிலே கல்லை வைத்து கண்ணுறங்க
தேவதூதர் ஏறியிறங்க கனவு கண்டே கண்விழிக்க
கல்லை நட்டு எண்ணெய் வார்த்து எத்தனவன் கடந்து செல்ல
பின்னே வந்த மாந்தர் அதை வணங்கியதை பாடவந்தேன்

3. நட்ட கல்லை தெய்வமென்று நாலுமலர் சாற்றிவிட்டு
சுற்றி வந்து முனுமுனுவென சொல்லும் மந்திரங்களேதடா
நட்ட கல்லும் பேசிடுமோ நாதன் உள்ளே இருக்கையிலே
சுட்ட சட்டி சட்டுவங்கள்தான் கறி சுவையதை அறியுமோ

117. பழைய மனுஷன் புதிய மனுஷன்

பல்லவி

எனக்குள் எனக்குள் இருக்கும் பழைய மனுஷன் சாகனும்
புதிய புதிய மனுஷனை நான் அணிந்து கொள்ளனும்
கிறிஸ்துவுடன் சிலுவையிலே இணைந்து வாழனும்
மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபமாக வேணும்

சரணங்கள்

1. உள்ளான மனுஷன் வல்லமையில் வளர
உன்னத ஆவியால் நிறைந்து புது பெலனடைய
வலக்கரம் பிடித்திடும் என்னை வழி நடத்திடும்
உந்தனடி சுவடுகளில் வழுவிடாமல் தினம் நடந்திட
- எனக்குள்

2. பொல்லாத சாத்தான் விழுங்கிட வருவான்
வகைதேடி உன்னையழிக்க வலை விரித்திடுவான்
பாதையில் கவனமே வழித்துணை இயேசுவே
உளையான சேற்றிலிருந்து தூக்கியெடுத்து நிறுத்திடுவார்
- எனக்குள்

3. நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலே
வற்றாத நீரூற்றைப்போல செழித்தோங்கிடவே
ஆவியின் வரங்களால் என்னை அலங்கரித்திடும்
ஜீவனுள்ள நாள் வரையிலும் நிலைத்து உமக்குள்
வாழ்ந்திடவே - எனக்குள்

அனுசரணம்

எனக்குள் இருக்கும் புதிய மனுஷன் நிலைத்து நின்றிடனும்
கிறிஸ்தேசுவின் சிந்தையை தினம் அணிந்து வாழனும்
மறுமையிலே மகிமையிலே மகிழ்ந்து பாடனும் - நீர்
மறுபடியும் வரும்போது உம்மோடு அரசாளவேணும்
- எனக்குள்

118. விசுவாச ஓடம்

பல்லவி

விசுவாச ஓடம் தடுமாறும் நேரம்
கோலும் தடியும் என்னை நடத்தும்
விசுவாச துரோகம் தலைவிரித்தாடும்
காலம் கடைசிக்காலம்

சரணங்கள்

1. மரண இருள் பள்ளத்தாக்குகளில்
தேவரீர் என்னோடு இருப்பதினால்
பயமின்றி திகிலின்றி நடந்திடுவேன்
ஓட்டத்தை ஓடி முடித்திடுவேன்

2. அற்பகாலம் மூண்ட கோபத்தினால்
இமைப்பொழுது உம் முகம் மறைத்தாலும்
நிரந்தர கிருபையுடன் இரங்கிடுவீர்
சுதந்திரம் மறுமையில் அளித்திடுவீர்

3. மோதியடிக்கும் வெள்ளத்திலே
ஏழையென் அடைக்கலம் நீரல்லவா
வெயிலுக்கு நிழல் என ஒதுங்கிடுவேன்
ஜெயமென சாவையும் விழுங்கிடுவீர்

119. துதிகளின் நடுவில்

பல்லவி

துதிகளின் நடுவில் உலவிடும் தேவன்
துதிகளையே விரும்பிடுவார்
துதித்தால் மனம் இரங்கிடுவார்

சரணங்கள்

1. மகளே என அன்பாக அழைப்பார்
பாவியென்று தீர்ப்பதில்லை பாவம் இனி செய்யாதே - என்
அன்பில்லாத மனிதர் உன்னை வெறுத்திடுவார்
கல்லெறிந்து கொல்லக் கூட துணிந்திடுவார்
பதறாதே மனம் பதறாதே
பாவம் மன்னித்தவர் பக்கத்திலிருக்க பரவசமாய்
பாடிடுவாய் - துதி

2. மகனே என பேர் சொல்லி அழைப்பார்
விழிகளிரண்டும் ஒளிபெறுமென கருணையுடன் சுகம்
தருவார் - என்
பார்வையுனக்களித்து மனம் மகிழ்ந்திடுவார்
போர்வைதனை உதறி நீயும் எழுந்திடுவாய்
விலகாதே வழி விலகாதே
வழியும் அவர் உயிரும் அவர் வாய்மையுமாய்
இருக்கின்றவர் - துதி

3. வாலிபனே எழுந்திரு என்பார்
நாலாரு வயதில் மரித்த நாயினூரின் விதவை பெற்ற
பாடை தொட்டு பரமன் உன்னை எழுப்பிடுவார்
தாயின் கண்ணீர் துடைத்திடவே அழைத்திடுவார்
தளராதே மனம் தளராதே
தாயும் அவர் தந்தையும் அவர் வாய் திறந்தே பாடிடுவாய் - துதி

4. சிநேகிதன் என கனிவுடன் அழைப்பார்
மறுதலித்த மனிதனையும் காட்டி கொடுத்த கொடியனையும்
பஞ்சம் பசி பட்டினியிலுடல் சோர்ந்திடலாம்
கொஞ்சகால உபத்திரவம் தொடர்ந்திடலாம்
கலங்காதே மனம் கலங்காதே
எத்தனை எத்தனை இடர்வரினும் இறுதிவரை
துணையிருப்பார் - துதி

120. சொந்த பந்தம் நிரந்தரமில்லை

பல்லவி

சொந்தம் என்று சொல்லிக்கொள்ள
ஒன்றும் இல்லை என்று சொல்லி
வந்ததெல்லாம் வரவில் வைத்தேன் - எந்தன்
சொந்தம் என்று சொல்லிக்கொண்டு
வந்த சிலர் அள்ளிக்கொண்டு
சென்றதெல்லாம் செலவில் வைத்தேன்
இதுவும் மாயைதான் அதுவும் மாயைதான்
எல்லாம் மாயைதான் என்று கண்டுக்கொண்டேன்

சரணங்கள்

1. கதிரவன் கீழொரு தீங்கு கண்டேன்
மனிதரின் மீதது பரவக்கண்டேன்
ஒருவன் விதைக்க மற்றவன் அறுக்க
ஒருவன் உழைக்க யாரோ பிழைக்க
மனதுக்குள் சஞ்சலங்கள் பெருகக் கண்டேன்- சொந்தம்

2. சூரியன் கீழொரு ஸ்தலத்தைக் கண்டேன்
நீதி ஸ்தலத்திலே அநீதி கண்டேன்
முன்பு நடந்ததே இன்றும் நடந்ததே
பின்பு நடப்பதும் முன்பு நடந்ததே
தேவனின் செயல் மட்டும் நிலைக்க கண்டேன் - சொந்தம்

3. ஞாயிறு ஒளியினில் அழகு கண்டேன்
படைத்தவர் படைப்பினில் மிளிரக் கண்டேன்
மகிழ்ந்திருப்பதும் நன்மைகள் செய்வதும்
பலன் பெறுவதும் தேவ அநுக்கிரகம்
அத்தனையும் நியாயம் என்று அறிந்துக் கொண்டேன் - சொந்தம்

121. தேடி வந்த ஆண்டவர்

பல்லவி

நான்தேடும்போது அருகிலிருக்கும் ஆண்டவர்
என்னைத்தேடி வந்து சிலுவை மரத்தில் மாண்டவர்
என்னைத்தேடி வந்ததால் வன்சிலுவை சுமந்ததால் - ஒரு
தாயைப் போல அன்பு காட்டி அரவணைத்தவர் - அந்த
பேயின் வாயிலகப்படாமல் என்னைத் தடுத்தவர்

சரணங்கள்

1. மாயலோக வாழ்வை நம்பி
மாண்டிடாமல் என்னைக் காத்தவர்
ஆயனாகி ஆட்டைப்போல் - தம்
கோலினாலே என்னை மேய்த்தவர் - அடி
காயம் ஆற்றியே குணமாக்கும் தேவனே
தீயன் எந்தன் தீமை யாவும் சிலுவை மீதிலே
பாய்ந்து ஓடும் உதிரத்தாலே தீர்த்த நாதனே

2. இறைவன் பாதம் நாடிதேடி
உலகம் இன்று ஓடும்போதிலே
குறைகள் யாவும் நிறைவாக்கிட
எம்மைத் தேடி வந்த தேவனே
விடிகாலை கிருபைகள் புதிதாக வழங்கினீர்
வாடி வதங்கும் பயிர்களாகி மாய்ந்திடாமலே - ஒரு
செடியில் இணைந்த கொடிகளாகி கனிகள் வழங்கவே - நான்

3. துருகமாகி நீதிமானை
காக்கும் நல்ல நீதி தேவனே - ஒரு
மிருகம்போல வாழ்ந்த என்னை
மனிதனாக்கி மகிழும் தேவனே
எனக்காக யாவையும் செய்து முடிக்கும் ஆண்டவா
ஜீவன் இருக்கும் நாட்கள் வரையில் உமக்குள் ஜீவிப்பேன் - என்
ஜீவனுள்ள தேவனே நீர் விரைந்து வாருமே - நான்

122. வெள்ளை காகிதத்தில் கவிதையா

பல்லவி

வெள்ளை காகிதத்தில் கவிதை தேடுகின்ற
கறுப்பு பேனாக்களே!
வெள்ளை காகங்களை சாறிபாத்தில் தேடும்
கறுப்பு எலியாக்களே!
எலியாவின் தேவன் எங்கே எங்கே - என
பாட்டு பாடும் மனிதா - கர்த்தர்
தேடும் எலியாக்கள் எங்கே - என
அவர் அழைக்கும் குரல் கேட்குதா

சரணங்கள்

1. சோதோம் கொமோராவிலே - இவன்
ஏதேனை தேடினான் - சொந்த
தமயனின் உருவிலே - சொத்தில்
உரிமையை நாடினான்
பாதை மாறி தேவ வாக்கை கேளாமல்
தர்ஷீஸ் படகேறினான் - தனி

2. பார்வோனின் பெலத்திலே - இவன்
பெலப்பட விழைகிறான் - பொல்லா
எகிப்தின் நிழலிலே - தினம்
ஒதுங்கவே விரைகிறான் - கொஞ்சம்
இலகுவுண்டாயிற்றென்று அறிந்தபோது - தன்
இதயம் கல்லாக்கினான் - கொஞ்சம்

3. பாபிலோன் விருந்தினை
தினம் ருசிக்கவே துடிக்கிறான் - கெட்ட
யேசபேல் உதவியால் - பழத்
தோட்டத்தைப் பறிக்கிறான்
வியாதியால் உடலும் சோர்ந்தபோது
பரிகாரிகளை தேடினான் - கொடும்

4. ஆபத்து வேளையில் நீ
தேவனை தேடியே - அவர்
கரத்துக்குள் அடங்கினால் - உனை
காக்கும் நிழலாகுவார்
அறியக்கூடாத அற்புதமான - பெரும்
காரியம் செய்குவார் - நீ

எலியாவின் தேவன் எங்கே எங்கே - என
தேடி ஓடும் மனிதா - கர்த்தர்
தேடும் எலியாக்கள் இங்கே இருக்கிறோம்
என்று பாடு மனிதா

123. வேடனின் வலை

பல்லவி

வேடன் வைத்த இரையைத் தின்ன
வேகமாக பறந்து வரும் வண்ணப்பறவை
பாவம் சின்ன பறவை - அந்த
இரைக்கு பின்னால் மறைந்திருக்கும்
வலையை கொஞ்சம் கவனிக்காத அன்ன பறவை
பாவம் இந்த பறவை
வேடன் கை சிக்கிய பறவை
வண்ண சிறகை விரித்திடுமா
எண்ணிய திசையில் பறந்திடுமா - வேடன்

சரணங்கள்

1. கண்ணில் கண்ட காட்சிகளும் நெஞ்சமதின் நினைவுகளும்
கணக்கினில் சேர்ந்திருக்கும் கடைசிநாளில் கணை தொடுக்கும்
கண்ணிமைக்கும் நேரத்திலே கர்த்தர் வரும் வேளையிலே
தலையுயர்த்தி நெஞ்சம் நிமிர்த்தி தெய்வத் திருமுகம்
பார்த்திடாமல் - வேடன்

2. என்னிதய காயங்களும் விண்ணைத் தொடும் சோகங்களும்
கனல்போல் என்னை எரிக்கும் கடல்மணல்போல குவிந்திருக்கும்
காரிருள் சூழ்ந்திடினும் கடும்புயல் சீறிடினும்
கரம் உயர்த்தி கடல் அமர்த்தி காப்பவர் மொழி கேட்டிடாமல்
- வேடன்

3. கர்த்தர் எந்தன் கன்மலையே ஆபத்தில் அருந் துணையே
சத்துருக்கள் எதிர் வரினும் எனக்கு இல்லை இனி பயமே
எந்தன் நினைவாயிருக்கும் இயேசு ஐயன் என் துணையே
பதம் பணிந்தே மனம் மகிழ்ந்தே அடிசுவடுகள் தொடர்ந்திடுவேன்
- வேடன்

124. நான் பாடுவேன்

பல்லவி

நான் பாடுவேன் என் தேவனே
நீர் மீட்டுக்கொண்ட உள்ளம் மகிழுமே
உந்தன் வல்லமையால் என்னை நிரப்புமே
தேவ ஆவியே என்னை நடத்துமே

சரணங்கள்

1. ஜீவ தேவ இராஜனே என் ஆத்ம நேசரே
உந்தன் சித்தம் செய்ய என்னை தத்தம் செய்கிறேன்
உம் நாமமே என் கீதமே உம் சமூகம் வல்லமைகள்
என்றும் நாடுவேன்

2. கேருபின்கள் மத்தியில் அமர்ந்த தேவனே
கீர்த்தனங்கள் பாடியே கெம்பீர சத்தமாய்
நான் நாடுவேன் உம் நாமமே வானங்கள் மகிழ்ந்து பூமி
பூரிப்பாகுமே

3. வெண் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் நேரத்தில்
என்னையும் தம்மோடு சேர்த்தமர்த்தும் தேவனே
எந்நாளுமே என் உள்ளமே நித்தம் நித்தம் போற்றி போற்றி
உம்மை பாடுமே

4. சுவாசமுள்ள யாவும் உம்மை போற்றி பாடிட
ஸ்தோத்திரங்கள் கோடி கோடி நானும் பாடுவேன்
என் தேவனே என் இராஜனே என் ஜீவனுள்ள நாட்களெல்லாம்
உம்மை தொடருவேன்

125. கர்த்தர் நல்லவர்

பல்லவி

நல்லவர் கர்த்தர் நல்லவர்
வல்லவர் தப்புவிக்க வல்லவர்

சரணங்கள்

1. சிங்கத்துக்கு தப்புவிக்க வல்லவர்
அக்கினிக்கு தப்புவிக்க வல்லவர்
பின் தொடர்ந்து ஆர்ப்பரிக்கும் பார்வோனின் சேனையை
செங்கடலில் ஆழ்த்த வல்லவர் - நல்லவர்

2. யோர்தான் கரை கடக்க வல்லவர்
கானானின் வாழ்வளிக்க வல்லவர்
யோனாவை மீன் விழுங்கி மூன்று நாள் ஆனபின்பும்
ஜீவன் தந்து காக்க வல்லவர் - நல்லவர்

3. ஆத்ம நேசர் எங்கள் இயேசு நல்லவர் - தம்
பாத்ரமாக எம்மை மாற்ற வல்லவர்
ஆத்துமா சரீரம் ஆன இரண்டையும் எம் தேவதேவன்
அக்கினிக்குள் தள்ள வல்லவர் - நல்லவர்

4. சாவை வென்ற இயேசு என்றும் நல்லவர்
சர்வ வல்ல எங்கள் தேவன் வல்லவர்
மேகம் ஏறி சென்று நாம் மோட்ச லோகம் சேர்ந்து வாழ
முத்திரையாய் தூய ஆவி தந்தவர் - நல்லவர்

5. வெள்ளத்துக்கு தப்புவிக்க வல்லவர் - என்
உள்ளத்துக்குள் தங்கும் தேவன் நல்லவர்
சுத்த உள்ளங் கொண்ட இஸ்ரவேலரான யாவருக்கும்
என்றென்றும் கர்த்தர் நல்லவர் - நல்லவர்

6. நேற்றும் இன்றும் என்றும் இயேசு - நல்லவர்
ஏற்ற காலத்தில் உயர்த்த வல்லவர்
காற்றிலும் கடல் அலைகள் சீற்றம் கொண்டு தாக்கினாலும்
வார்த்தையாலே காக்க வல்லவர் - நல்லவர்

126. உம்மை பாடும் வரம்

பல்லவி

உம்மை பாடும் வரம் தாருமே - தேவா
எந்தனடி பிறழாமல்
உந்தன் மலரடி பணிந்தேன் - உமை

சரணங்கள்

1. வானமடங்காத வான் பொருளே
வானவர் வாழ்த்திடும் என்னரசே
தவமின்றி நான் பெற்ற நல்வரமே
தாயே தமிழே துதியிசை மலர் சூடி
நிசநிச மபதப ரிகமரி நிநிச - உமை

2. கருவினில் எனைக் கண்ட காருண்யமே - உந்தன்
கிருபையின் கரங்கள் என்னை அனைத்திடுமே
திருமறை தெளித்தேன் என்றும் இனித்திடுமே
வரம் தரும் வளம் தரும் வாழ்விலென் துணையாகும் -உமை

3. இனி வரும் பலன் நோக்கி ஓடிடவே - கொடும்
மரண பயம் நீங்கி மகிழ்வுறவே
பூரண சீயோனின் கீதங்களால்
தினம் தினம் மலர்பதம் தழுவியென் கரம் கூப்பி -உமை

4. ஆயிரமாயிரம் தூதருடன்
அகமகிழ்வேன் மணவாளனுடன்
பேரின்ப கீதங்கள் என் நாவினிலே
ஸ்வரங்களின் மலர் சரம் ஆயிரம் தினம் சூட்டி - உமை

127. என்னை தொட்டு வாழ வைக்க

பல்லவி

என்னை தொட்டு வாழ வைக்க
விண்ணை விட்டு வந்தவரே
என்னை விட்டு விலகாமல்
என்னோடு இருப்பவரே (ரை)

அனுபல்லவி

தினமும் பாடுவேன் - உமை
துதித்து பாடுவேன் - அநு
தினமும் பாடுவேன் - நான்

சரணங்கள்

1. மண்ணை எடுத்து மகிமையை தந்தவரே
மண்ணில் எழுதி என் பாவத்தை சொன்னவரே
விண்ணப்பத்தை கேட்பவரே கேட்டதெல்லாம் கொடுப்பவரே
சத்துருவால் வரும் பயத்தை நீக்கி ஜீவன் காப்பவரே
என் ஜீவன் நிலையற்றது உம் கிருபை முடிவற்றது
உந்தன் உடன்படிக்கையோ இறுதிவரை நிலைநிற்பது

2. பச்சை மரத்தையும் வெட்டும் மனிதர்களே
பட்ட மரத்தையும் விட்டு விடுவாரோ
பட்ட துன்பம் மாற்றி என்னை வெற்றிக் கொடி ஏந்த வைத்தீர்
பட்டயமாம் வசனத்தாலே பாவ பகையை முறியடித்தீர்
ஐயா நீர் பெரியவரே மெய்வாழ்வு தருபவரே
என்னில் அன்பு கூர்ந்ததினால் உடன்படிக்கையை காப்பவரே

3. தொட்ட கனி எமில் தீமை கொடுத்ததென்ன
ஜீவகனி கண்ணில் காட்ட மறந்ததென்ன
தொட்டெழுதி தந்த பலகை மலையடி உடைந்ததென்ன
கட்டளைகள் தந்தவரை கொடும் சிலுவைமீது அறைந்ததென்ன
கல்வாரி மேட்டினிலே பேரன்பு பாய்ந்ததென்ன
கள்வனையும் தூய்மையாக்க குருசில் ஜீவன் கொடுத்ததென்ன

4. கன்மலையானவர் எந்தன் அடைக்கலமே
கண்மணி போல் எம்மை காப்பது நிச்சயமே
நீதியில் பிரியம் வைப்பார் நீதிபரர் துணையிருப்பார்
நீதிமான் தங்கியிருக்க பலத்த துருகமாகிடுவார்
திக்கற்ற பிள்ளைக்கெல்லாம் ஏற்ற துணையானவரே
தேற்றரவாளனே உமை போற்றி போற்றி பாடிடுவேன்

128. கண்ணுக்குள்

கண்ணுக்குள் பளபளக்கும் தள்ளிவிட்டு பரிகசிக்கும்
உள்ளுக்குள் என் மனமோ சோதனையில் சோர்ந்துவிடும்
சொந்தமென சார்ந்திருக்க யாருமில்லாத நேரத்திலே

பல்லவி

இயேசு என் முன்னே சென்றார் என் பின்னே வா என்றார்
இத்தனை பெரும்தயவு எனக்குமா
எத்தனாம் என் மேலும் அவர்க்கு இரக்கமா

சரணங்கள்

1. பால் போல் வெளுத்திருக்கும் பழம் போல் புளித்திருக்கும்
ஆட்டு தோல் அணிந்து கொண்டு வேங்கையது ஒளிந்திருக்கும்
தேடி வந்தார் தோள் கொடுத்தார்
சேதமில்லாமல் வாழவைத்தார் - இயேசு

2. தேன் போல் இனிப்பிருக்கும் தேள் விஷம் நிறைந்திருக்கும்
புன்கையின் வேஷத்திலே பெரும் பகை மறைந்திருக்கும்
நம்பி வந்தேன் அள்ளியெடுத்தார்
எல்லையில்லாத அன்பு வைத்தார் - இயேசு

3. தாயன்பை அறிந்ததில்லை தந்தை அன்பை ருசித்ததில்லை
தீமையன்றி நன்மை இல்லை நம்பி வந்த உலகத்தில்
கை பிடித்தார் கண்ணீர் துடைத்தார்
காலமெல்லாம் காவல் என்றார் - இயேசு

129. என் நினைவில் நிறைந்த நாட்கள்

பல்லவி

என் நினைவில் நிறைந்த நாட்கள்
என் சிந்தையில் பதிந்த காட்சிகள்
திரும்பி வரவேண்டும் என்றே - நான்
விரும்பி வரம் வேண்டுகின்றேன்

1. மழலை போல மனம் மாற வேண்டும் என்று சொன்னீர் - இறை
அரசில் சேர அது தகுதியாகும் என்றும் சொன்னீர்- கள்ளம்
கபடமில்லாத மழலைப் போலவே
உமது கரங்கள் பிடிப்பேன் - தெள்ள
தெளிந்த மனதோடு திரும்பி வந்த - அந்த
இளைய மைந்தன் போல் நடப்பேன் - என்

2. பொன்னும் பொருளும் உயர் பதவி புகழ் பெருகும்போதும் - அதை
தின்னும் கூட்டம்தான் பெருகும் என உரைக்கும் வேதம் - மதி
மயக்கும் பொருளாசை மனதில் அண்டாத வாழ்வு
வேண்டுகின்றேன் - மதி
மயக்கும் உலகைவிட்டு விலகி எனை வெறுத்து
சிலுவை தினம் சுமந்து நடப்பேன் - என்

3. அதிக படிப்பு உடல் இளைக்கசெய்யும் என்று சொன்னீர் - உயர்
ஞானம் இருக்குமிடம் கிறிஸ்துவின் உடலென்றும்
உரைத்தீர் - பெரும்
ஞான மனிதனாய் முதிய மனிதரிடை என்னை
அமர செய்தீர் - வண்ண
சிறகை விரித்து சிட்டுக் குருவி போல -புது
மெட்டுக்களிசைக்க ஸ்வரம் கொடுத்தீர் - என்

130. என் உயிர் நீயே என் வழி நீயே

இருண்ட வானிலே ஒளிதரும் தீபமே
வறண்ட என் வாழ்வினை துளிர்த்திட செய்பவரே

பல்லவி

என் உயிர் நீயே என் வழி நீயே
உண்மையும் நீயே என் தெய்வமும் நீயே

சரணங்கள்

1. நான் உயிர் பெறவே தன் உயிர் கொடுத்தவரே
என் வழி செல்ல தானே வழியானவரே
பொய்யான உலகிலே மெய் வாழ்வு நான் காண
மெய் ஜீவ பலியானவரே - என் மன்னவன் இயேசுவே - என்

2. வல்லமை பெறவே தூய ஆவி தந்தவரே
நன்மைகள் தொடர புது கிருபை ஈந்தவரே
தொல்லைகளின்று அகன்றிட தீமை யாவும் விலகிட
என்னோடு உடன் வருபவரே - என் இனிய நண்பரே - என்

3. உலகை வென்றிடவே புது பெலன் அளிப்பவரே
அலகை எதிர்த்திட எந்தன் கரம் பிடிப்பவரே
பொல்லாங்கன் எய்திடும் வல்ல கணைகள் தடுத்திடும்
சர்வாயுதம் எனக்கு தந்தவரே - என் துணையானவரே -என்

4. எக்காளம் தொனிக்கும் அந்த இனிய நாளிலே
புத்தகம் திறந்திட அதில் பெயர் பதித்தவரே
வெள்ளை சிங்காசனம் வேந்தரோடு அமரவே
மேகம் மீது விரைந்திடுவேனே - என் மணமகன் நீயே -என்

131. பார்க்கும் போது பளபளக்கும் உலகம்

பல்லவி

பார்க்கும் போது பளபளக்குது உலகம் - உன்னை
குப்புற தள்ளி வேடிக்கை பார்க்குது தினமும்
மாறாது இந்த உலகம் - பின்னால்
போகாதே இது நரகம்

சரணங்கள்

1. காலை முதல் தினம் மாலை வரை - அதி
கண்ணில்படும் காட்சியெல்லாம்
மனதை மயக்குது மதி மயங்க வைக்குது
மின்னலென மின்னி மறையும்
மின்னிய பின் இருண்டுவிடும்
கண்ணிமைப் பொழுதினிலே
காற்றென கரைந்துவிடும் - பார்க்கும்

2. செவிகளிலும் உன் சிந்தையிலும் - இரு
தேன் துளி சுவைப்பதுபோல்
மனதில் இனிக்குது இதில் இதயம் களிக்குது
செம்மையென இதயம் சொல்ல
இறுதியில் மரணம் வெல்ல
ஏமாந்து போகுமுன்னே
இயேசுவிடம் திரும்பிவிடு - பார்க்கும்

3. சிலுவையிலே நம் இயேசுவுடன் - திரு
அறையுண்டு இணைந்திருக்க
உலகம் இழுக்குதோ தீய பாவம் தடுக்குதோ
சிலுவை சுமந்தவரே பாடுகள் சகித்தவரே
பாடுபடும் உனக்கும் எனக்கும்
உதவி செய்ய வல்லவரே - பார்க்கும்

132. எங்கள் நடுவில்

பல்லவி

எங்கள் நடுவில் என்றும் இருக்கும்
தூய ஆவியே - உமக்கு ஸ்தோத்திரம் ஐயா
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
ஆமென் ஆமென் ஆமென் ஆமென் அல்லேலூயா

1. பாவம் நீதி நியாயத்தீர்ப்பு யாவும் குறித்து
கண்டித்து உணர்த்துகின்ற நேரத்திலெல்லாம்
பரதேசியாய் நான் தங்கும் வீட்டிலே
பிரமாண கீதங்கள் பாட வைக்கவே - எங்கள்

2. என் ஓட்டம் கிறிஸ்துவுக்குள் ஓடிமுடிக்க
சத்தியத்தின் பாதையில் உம் கரம் பிடிக்க
நித்திய கிருபை என்றும் என்னில் விளங்க
சித்தங்கொண்டு மன்னித்தென்னை ஆட்கொள்ளவே - எங்கள்

3. வெண்கல தாழ்பாள்களை உடைக்கின்றவர்
இரும்பு தாழ்பாளையும் நொறுக்கிடுவீர்
சிங்கத்தின் வாயையடைத்த சர்வ வல்லவா - உந்தன்
சிங்கா சனத்திலும் பங் களித்திடுவீர் - எங்கள்

133. மலருக்கு மணம் தந்த மன்னர்

பல்லவி

மலருக்கு மணம் தந்த மன்னவா
குயில் பாட குரல் தந்த குமரா
வான வெளிக்கு நல்ல நீல நிறம் தந்து
விரித்து வைத்த இறைவா - அதை
எனக்கு தந்த தலைவா

குயிலின் நிறம் கருப்புதான்-காண
மயிலின் நிறம் நீலம்தான்
குயிலும் மயிலும் தினம் கூவி ஆடுவது
இறைவா எனக்கு தான் - என்
தலைவா எனக்கு தான் - மலருக்கு

1. மலரும் மணமும் மனம் கமழும்
மனக்கவலைக்கு அது மருந்தாகும்
நிதமுமை துதிக்கும் மனம் என்றும்
நிதம் நீ தங்கிடும் மனமுந்தன் நந்தவனமே
தகிட தகிட தகதிமி தக திமிதா - மலருக்கு

2. நீதியின் நிமித்தம் பாடு வரும்
கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும்
தாழ்மை அணிந்திட கிருபை வரும்
மரணம் ஜெயமாய் முடிவினில் மாறிவிடும் - மலருக்கு

3. வானம் பூமியும் ஒழிந்துவிடும்
வேத வார்த்தை என்றும்நிலைத்திருக்கும்
நடந்திட பாதையில் இருள் விலகும் - என்
நாவில் வசனம் தேன் என இனித்திடுமே - மலருக்கு

134. நம்பி வந்தால்

பல்லவி

நம்பி வந்தால் இயேசு உன்னை
தள்ளவே மாட்டார்
நம்பினோரை காத்திடும் தேவன்
உறங்கவே மாட்டார்

1. ஞான கன்மலை நாயகன் இவரே
தாகம் தீர்த்திடும் ஓடையும் இவரே
காயம் ஆற்றிடும் ஔஷதம் இவரே
நோய்க்கும் பேய்க்கும் எதிரிடை இவரே
மயக்கும் மாமிசம் ஜீவன பெருமை
ஒழிக்க சிலுவை சுமந்தவரை நீ - நம்பி வந்தால்

2. தேவ செவிகள் திறந்தே இருக்கும்
எமது ஜெபங்கள் ஏற்றிடவே
எமக்கு அடைக்கலம் தாபரம் இவரே
ஞான இதயம் அருளிடும் தேவன்
திரும்பி வருகின்ற திரித்துவ நாதன்
வாழ்வெலாம் களிகூர்ந்திட செய்வார் - நம்பி வந்தால்

3. சாய்ந்து போகும் நிழலது போலே
உலர்ந்து உதிர்ந்திடும் மலர்களைப் போலே
சால்வை போல் புவி மாறிவிட்டாலும்
மாறிடாத எம் மகத்துவ ராஜன்
உமது ஆண்டுகள் முடிவதில்லை-எமை
தேவ கரங்கள் விடுவதும் இல்லை - நம்பி வந்தால்

135. வாழவைக்கும் இயேசு

பல்லவி

வந்தவரை தள்ளிடாமல்
வாழவைக்கும் இயேசுவிடம்
வந்தாலே சந்தோஷமே
உள்ளம் தந்தாலே ஆனந்தமே
சஞ்சலங்கள் விலகிடுதே
நிந்தனைகள் மறைந்திடுதே
எல்லையில்லா பேரின்பமே - நமக்கு

சரணங்கள்

1. தம்மிடமாய் வந்தவரை தள்ளிடாமலே
அன்புடனே சேர்த்துக்கொள்ளும் வள்ளல் இயேசுவே
எம்மை சுற்றி நெருங்கி நிற்கும் பாரமான யாவும் தள்ளி
விலக்கியே உம்மை நோக்கி வேகமாய் ஓடிடுவேன்

2. கொஞ்ச நேரம் தோன்றி மறையும் புகையைப் போலவே
கொஞ்ச கால உபத்திரவம் நீங்கி போகுமே
கொஞ்சம் உண்மை இருந்ததினால் கொஞ்ச பெலன் போதுமென்றீர்
கொஞ்சம் கூட அஞ்சிடாமல் தஞ்சமுமை சரணடைவேன்

3. தேவசித்தம் செய்யும் பிள்ளையாக வேண்டுமே
எந்தன் சித்தம் முற்றிலுமாய் நீங்க வேண்டுமே
தேவ அன்பு என்னை நெருக்க தேவ ஆவி அனல் பெருக
ஜீவ கீரிடம் நெஞ்சில் நிறுத்தி நீதி பாதை ஓடிடுவேன் -

136. புழுதியில் அஸ்திபாரம்

பல்லவி

புழுதியில் அஸ்திபாரம்
மண் வீட்டில் வாசம் பொட்டு பூச்சி அரிக்கும்
புவி வாழ்வா நிலைக்கும் - மானிடனே

1. நித்திய ஜீவன் பெற சத்திய வாழ்வடைய
இன்றே இயேசுவண்டை வா
புதிய வாழ்வு இனி தூய ஆவியினால்
மகிழ்வுடன் துவங்கிடுவாய் - மானிடனே

2. புசித்து குடித்து தன் உழைப்பின் பலன் பெறுதல்
தேவ அனுக்கிரகமே
கொஞ்சம் புசித்தாலும் அதிகம் புசித்தாலும்
நித்திரை இன்பமன்றோ - உழைப்பவர்க்கு

3. பாவத்தை மறைக்கிறவன் வாழ்வு பெறுவதில்லை
பாவத்தின் சம்பளம் மரணம்
அறிக்கை செய்து அவற்றை விலக்கி வாழ்பவருக்கு
இரக்கங்கள் குறைவதில்லை - ஆண்டவரின்

4. வசனம் கேளாது செவியை விலக்குபவன்
விண்ணப்பங்கள் அருவருப்பே
திருமறை வழியில் திருந்தி நடப்பவனோ
விவேகமுள்ள மகனே - அவருக்கு

137. தாலாட்டும் தென்றல்

பல்லவி

தென்றல் என்னை தாலாட்டும் நேரம்
இயேசுவை அருகில் கண்டேன்
ஒன்றும் இல்லா பாவியென்னை
நேசித்த விந்தை கண்டேன்
நேற்றும் இன்றும் என்றென்றும் மாறாத
தேவனின் அன்பை கண்டேன்

1. காணாமற் போன ஆடான என்னை - தம்
தோள் மீது அன்போடு சுமந்தவரே
என் பாரம் மாற்றி என் காயம் ஆற்ற
கல்வாரி சிலுவையை சுமந்தவரே - தென்றல்

2. புகை போல ஒழியும் என் ஜீவ நாட்கள்
புல் போல பூபோல உலர்ந்திடுதே
கட்டுண்ட எந்தன் பெருமூச்சை கேட்டீர்
என் நாட்கள் சாய்ந்திடும் நிழலானதே - தென்றல்

3. சாலேமில் எந்தன் கூடாரம் இருக்கும்
சீயோனிலே எந்தன் வாசஸ்தலம்
இராக்காலம் எந்தன் சங்கீதம் ஒலிக்க
என் ஆவி ஆராய்ச்சி செய்திடுதே - தென்றல்

138. உம்மை அம்மா என்று கூப்பிடலாமா

பல்லவி

உம்மை அம்மா என்று கூப்பிடலாமா
என் அப்பா என்றே அழைத்திடலாமா
நல்ல அண்ணன் என்று சொல்லிடலாமா
இனிய நண்பன் என்றே இதயம் நிறைந்து கூவிடலாமா
அன்பு அத்தான் அத்தான் என்றே
மணவாட்டியாக மாறி
உம்மோடென்றும் வாழ்ந்திடலாமா

1. உம்மை அம்மா என்றே கூப்பிட பார்த்தேன் - என்
அக்கிரமங்கள் தடுத்து நிற்குதைய்யா - கெட்ட
பிள்ளையான என்னை - நல்ல
அன்னை போல் தேற்றிய - உம்மை அம்மா

2. உம்மை அப்பா என்றே அழைத்திட நினைத்தேன் - பாவ
பார சுமை என்னை அழுத்துதைய்யா - முழு
பாவத்திலே கிடந்தேன் - தன்
தோளிலேற்றி சுமந்ததினால் - அப்பா

3. உம்மை அண்ணன் என்று சொல்ல நினைத்தாலும் - உலக
கவலை கண்ணீர் கண்ணை மறைக்குதைய்யா - எனை
மயக்கும் உலகை வெறுத்தே - உந்தன்
வலது கரத்தை பிடித்தே - உம்மை அண்ணே

4. மணவாட்டியாக எனை மாற்றவே - தாய்
வயிற்றிலேயே தெரிந்துக் கொண்டீரே - எனை
அழைத்து செல்ல வருவீர் - உந்த
அழகு முகத்தை பார்த்தே அத்தான் என்றே கூப்பிடுவேனே
மணவாட்டியாக மாறிடுவேனே

139. சீயோனின் எக்காளம்

பல்லவி

சீயோனின் எக்காளம் தொனித்திடுதே
இயேசுவின் நற்செய்தி ஒலித்திடுதே
பரிசுத்தமாவோம் பரவசமடைவோம்
பரிசுத்தர் பாதங்கள் பணிந்திடுவோம்
அல்லேலூயா அல்லேலூயா
ஆமென் ஆமென் அல்லேலூயா

சரணங்கள்

1. வயல் நிலங்கள் கதிர் மணிகள்
அறுவடைக்காய் காத்திருக்க
புயல் வருமுன்னே புறப்படுவோம்
புது புது கிருபைகள் அடைந்திடுவோம் -அல்லேலூயா

2. நீதியின் ஆயுதம் அணிந்திடுவோம்
அவர் பணியாற்றிட அணிவகுப்போம்
எதிரியின் வியூகங்கள் முறியடிக்க
பரிசுத்த ஆவியின் துணை பெறுவோம் - அல்லேலூயா

3. செந்தமிழ் நாட்டின் தெருக்களிலே
ஒடுங்கிய கிராமத்து குடிசையிலே
ஒளியென இயேசுவின் திருவசனம்
ஒளிர்ந்திட சேர்வோம் ஒருமுகமாய் - அல்லேலூயா

4. காலம் இனி செல்லாதே
தாமதம் நீ செய்வாயோ
ஒரு நிமிடமும் இனி தாமதியோம்
அவர் வருகை மிக நெருங்கிடுதே - அல்லேலூயா

140. என் தேசம் அழிகின்றதே

பல்லவி

என் தேசம் அழிகின்றதே
என் தேவனே உம் அன்பை அறியாமலே
என் ஜீவன் போகும் நாள் வரும்முன்னே
உம் பணியாற்றிட வரம் தாருமே

சரணங்கள்

1. பல்லாயிரம் பாழாகுதே
பல பல கோடிகள் வீணாகுதே
என் ஜனம் மாள்வதை என் விழி காண்பதோ
ஏராளம் செயல் வீரர் எழுப்பிடுமே - என் தேசம்

2. என் சாபங்கள் என் வாதைகள்
கல்வாரி அன்பினால் கரைந்தோடுதே
மீறுதல் பாவங்கள் சுமந்தவர் பணிக்கென
திறப்பின் வாசல் நிற்க துணிந்திடுவேன் - என் தேசம்

3. என் தேவனே என் ஆண்டவா
என் துணை நீயின்றி யாருமில்லை
என் பெலன் செல்வம் உமக்கென ஈந்திட
எழும்பிடுவோம் எம்முடன் வாருமே - என் தேசம்

4. என் பாடுகள் அவமானங்கள்
கல்வாரி பாடிற்கு ஈடாகுமோ
சுமந்திடும் சிலுவையும் நுகம் என உணர்ந்தேன்
சுமந்திடுவேன் அது இலகுவானதே - என் தேசம்

141. வறண்ட நிலங்களில்

பல்லவி

வறண்ட நிலங்களில் விதை விதைப்போம்
விளைந்த மணிகளை அறுத்திடுவோம்
மிகுந்த கனிதரும் கொடிகளாகி
அவர் பணி முடித்திட எழும்பிடுவோம்

இந்திய தேசத்தை சந்திக்கவே
எஞ்சிய மனிதரை மீட்டிடவே
எழும்பிடுவோம் எழும்பிடுவோம்
இயேசுவின் செய்தியை ஒலித்திடுவோம்

சரணங்கள்

1. கர்த்தர் எனை அழைத்ததால்
அர்ப்பணிப்பேன் என் ஆயுள் வரை
நித்திய ஜீவன் நான் அடைந்திடவே
உம் வார்த்தை கைக்கொள்ளுவேன் - நான் என்றும்

2. கர்த்தரை நான் எப்போழுதும்
எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்
என் வல பக்கத்தில் இயேசு நிற்பதினால்
அசைக்கப்படுவதில்லை - நான் என்றும்

3. கர்த்தர் எந்தன் கன்மலையே
கண்மணிபோல் என்னை காக்கின்றவர்
கர்த்தர் வழி நான் நடப்பேன்
என் விளக்கை ஏற்றுவீர் - என்றென்றும்

142. மேசியா இயேசுவே

பல்லவி

மேசியா இயேசுவே
நாங்கள் நேசிக்கும் தேவனே - விசு
வாசத்தின் வீரராய்
இந்த தேசத்தை கலக்குவோம்

சரணங்கள்

1. சீறும் கடலின் மீதினிலே
சீடனை போல நடந்திடுவோம்
அருகில் இயேசு இருப்பதினாலே - என்றும்
ஜெயமென்றே முழங்கிடுவோம்
ஜெய் ஹிந்த் அல்லேலூயா - வாழ்க பாரதம்

2. புது புது பாடல்கள் பாடிடுவோம்
ஆவியின் வரங்களால் நிறைந்திடுவோம்
எமக்காய் யாவும் செய்து முடித்தவர்
செய்தியை இகம் எங்கும் முழங்கிடுவோம் - ஜெய் ஹிந்த்

3. உமையன்றி வேறொரு தெய்வமில்லை
கிருபையால் நிறைத்திடும் தேவனே
உமை நோக்கி கூப்பிடும் வேளை யெல்லாம்
எம் குரல் கேட்டெம்மை மீட்டிடுமே - ஜெய் ஹிந்த்

4. ஒருவரும் கிரியை செய்திடாத
இருண்ட இராக்காலம் நெருங்கிடுதே
நீதியின் சூரியன் உதிக்குமுன்னே
ஆத்தும ஆதாயம் செய்திடுவோம் - ஜெய் ஹிந்த்

143. உலகம் உலகம் உலகம் - இது

உலகம் உலகம் உலகம் - இது
ஏமாற்றும் உலகம்
உனது உழைப்பை உறிஞ்சி உறிஞ்சி
மயக்கி உயிரை பிடுங்கி அழிக்கும்
உலகம் உலகம் திருட்டு உலகமே - உலகம்

சரணங்கள்

1. உடலை மனதை கெடுக்கும் மதுவை
கொடுத்து குடும்ப உறவை கெடுக்கும்
கொடிய பழக்கம் உனக்கு ஏனடா- புது
வாழ்வு கொடுக்கும் புதிய செய்தி
உனக்கும் எனக்கும் ஏற்ற செய்தி
இயேசு நமக்கு தருகிறாரடா - உலகம்

2. பதறி பாவ குழியில் விழுந்து
பாழும் உலகில் மயங்கிடாமல்
புதிய வாழ்வு அடைய விருப்பமா - உனை
புதிய மனிதனாக்கி தூய
தேவனுடைய பிள்ளையாக்கி
முழுமை வாழ்வு தருகிறாரடா - உலகம்

3. போதும் போதும் மாய உலகம்
நிலைத்திடாமல் அழிந்துபோகும்
உனக்கதின் மேல் மயக்கம் ஏனடா - இனி
புதிய வானம் புதிய பூமி
தூதர் கூட்டம் சேவை செய்யும்
நித்திய வாழ்வு நமக்குதானடா - உலகம்

144. சாமி கும்பிட போனேன்

பல்லவி

சாமி கும்பிட போனேன் - நான்
பட்டை அடிச்சி தலை மொட்டை அடிச்சி - ஒரு
ஜிங்கு சிக்கு ஜிங்கு சிக்கு பாட்டு பாடி - நான்

சரணங்கள்

1. கொழுகட்ட கோழி கறி படையல் வெச்சி நான் சாமி
கும்பிட போனேன்
வாழ பழத்த உரிச்சி வெச்சி ரெண்டு ஊதுபத்தியும்
சொருகி வெச்சி நான் - சாமி

2. மாவிலை தோரணம் மாலை கட்டி நான் சாமி கும்பிட போனேன்
மாட்டு சாணிய எடுத்து வெச்சி ஒரு பூசணி பூவையும்
சொருகி வெச்சி நான் - சாமி

3. வடகல தென்கல நாமம் போட்டு நான் சாமி - கும்பிட போனேன்
வடமல சாற்றி வாசனை விபூதி வாயில போட்டு
மென்னு மென்னு நான் - சாமி

4. உருமி மேளங்கொட்டி ஊர சுத்தி நான் சாமி கும்பிடபோனேன்
உசுர கொடுத்த சாமிக்கு - ஒரு தகதிமி தகஜீனு
தாளம் போட்டு நான் - சாமி

5. மெய்யான தெய்வத்தை புரிஞ்சி கொள்ளாம சாமி கும்பிட போனேன்
பொய்யான உலகில் மெய்யான தெய்வம்
இயேசுதான் என புரிஞ்சி போச்சு - இப்ப
பாட்டு பாடப்போறேன் நல்ல பாட்டு பாடப்போறேன்
பாவமில்லை இனி சாபமில்லை - தினம்
அல்லேலூயா என தாளம் போட்டு - நான்
சாமி கும்பிடபோறேன் இயேசு சாமிய கும்பிடபோறேன்

145. மாயமான உலகு

பல்லவி

மாயமான உலகை நாடி
தொலைந்து போன ஆட்டை தேடி
ஆயனாய் வந்த தேவனே...
உடைந்து போன உறவை இணைக்க
மைந்தனாக அன்பை ஊற்றி
பாலமாய் வந்த தெய்வமே

சரணங்கள்

1. என் பெலன் என் தேவனே - உள்
ளான மனிதனில் நிரம்பவே - எனை
தேற்றும் தூய ஆவியே
உம்மை அறியும் அறிவுக் கெதிராய்
எழும்பும் எண்ணங்கள் மிதிக்கவே
உமது பெலனை தாருமே

2. கனியில்லா அந்தகார கிரியைக்கு
உடன்படாமல் கடிந்து கொண்டு
ஒளியின் மைந்தராய் நடக்கவே
மதியில்லாத மனிதர் போலின்றி
அறிந்திட இறை சித்தமுணர்ந்து
கிறிஸ்துவில் அன்பு கூறுவேன்

3. உண்மை எதுவோ ஒழுக்கம் எதுவோ
நீதி எவையோ கற்புள்ளவை எவை
புண்ணியம் புகழ் நற்கீர்த்தியோ
சிந்திக்கும் மனிதர் சீலமாவார்
குருவடி தொடர் சீடராவார்
இறுதி நாள் வரை தொடருவார்

146. வானில் ஒரு வெள்ளி

பல்லவி

வானில் ஒரு வெள்ளி
மின்னி சேதி சொல்ல
மேசியாவை காண செல்லுவோம்
ஆட்டிடையர் அன்றே
அன்புடன் பணிந்தார் - நாம்
ஆண்டவர் முகம் தரிசிப்போம் அல்லேலூயா...
Happy Happy Christmas

சரணங்கள்

1. கன்னிமரி பாலன் கண்ணீர் துடைப்பாரே
என்னை தேவ பிள்ளையாக்குவார்
யூதராஜ சிங்கம் பாவம் போக்கினாரே
கீதம் பாடி கீர்த்தனம் செய்வோம்

2. வானதூதர் பாடல் நீலவானில் எங்கும்
மேகமீதில் எதிரொலிக்கும்
பாவம் தீர்ந்து போக பாலன் பிறந்ததாலே
மாந்தரில் பிரியம் ஓங்குமே

3. அந்தகாரம் நீங்கும் அருணோதயம் என்றும்
சொந்தம் என்று நம்மில் உதிக்கும்
வந்த வினை நீக்க தன்னை தந்த தெய்வம்
நல்ல தேவன் பாதம் பணிவோம்

147. பட்ட துன்பம் போதுமடி

பல்லவி

பட்ட துன்பம் போதுமடி
நல்ல சேதி கேளுங்கடி
நாத்து நட்டு பயிர் வளர்ந்தும்
நட்டமாகி போனதினால் - பட்ட துன்பம் போதுமடி

பெத்தலகேம் ஊரினிலே
சத்திரத்தின் ஓரத்திலே
சத்தியப்பூ பூத்ததென்று
சத்தமிட்டு கூவுங்கடி

சரணங்கள்

1. வீணான பாவ சுமையால்
கூனாகி போன மனம்
பாழான வாழ்வு இப்போ சீராச்சு பாருங்கடி
சஞ்சலங்கள் தீர்த்திடவே சத்திய குமாரன் இங்கு
சின்ன பாலனாய் பிறந்தார் - பட்ட

2. சேவல் கூவும் நேரமடி
சீக்கிரமாய் எழுந்திருப்பாய்
சீலமான வாழ்வு தர சொக்க தங்கம் பொறந்திருக்கு
செய்த பாவம் போகுமடி கர்ம விணை தீருமடி
கர்த்தன் இயேசு உதித்ததினால் - பட்ட

3. வாழையடி வாழையென - நாம்
வாழ்ந்திட வேனுமடி
வானம் விட்டு வந்தவரே வாழ வைப்பார் வாருங்கடி
இரத்தம் சிந்தி மீட்டிடவே இரட்சகனாய் பிறந்திடவே
இத்தரையில் இவர் பிறந்தார் - பட்ட

148. ஓடி வாங்க ஓடி வாங்க

பல்லவி

ஓடி வாங்க ஓடி வாங்க ஓடிவாங்கையா - நம்மை
தேடி வந்த தெய்வம் பொறந்த செய்தி கேளய்யா
முன்னனையில் தாய் மடியில்
மன்னவரும் இருந்த காட்சி
கண்ணீரும் கவலை தீர்க்கும்
மருந்தாகும் உண்மை சாட்சி - ஓடி வாங்க

சரணங்கள்

1. பாடுபட்டு சேத்த செல்வம் பொத்தலான பையில போட்டு
வீனாகி போனதாலே சோகமாகி போன புள்ள
பட்டு போன மரத்தைப் போல சுத்தங்கெட்டு போனபின்னே
சுத்தமாக்கும் தெய்வம் இப்போ பெத்தலையில் பொறந்துட்டாரு - நம்மை

2. மாடு மனை வீடு எல்லாம் மச்சு கூடகோபுரமெல்லாம்
பட்டம் பரிவட்டம் பதவி பறிபோச்சு பாவி மனுஷா
திட்டம் போட்டு ஏய்த்திடுவார் தட்டு தடுமாறிடுவாய்
ஏற்றுக்கொண்டால் வாழ்வளிப்பார் முன்னனையில் கிடந்த தெய்வம் - நாம

3. வாழும் போது கூடவரும் சொந்தபந்தம் சேர்ந்து விடும்
பட்ட காலில் பட்டா போதும் விட்டு விட்டு ஓடிவிடும்
தான தர்மம் பூஜை படையல் நீக்கிடாது நம்ம சாபம்
வானம் விட்டு பூமி வந்தவர் தந்திடுவார் சமாதானம் - அந்த

4. சாதி சனம் விலகட்டுமே ஊருலகம் ஒதுக்கட்டுமே
சாகும்வரை கூடவருவார் சாமி இயேசு நாதருங்க
ஞானியர்கள் மேய்ப்பரெல்லாம் பார்த்து பணிந்த தெய்வம்
நாமும் சேர்ந்து வணங்கிடலாம் சீக்கிரமா ஓடி வாங்க - ஐயா

149. இந்த பாவ மனிதரை

இந்த பாவ மனிதரை மீட்டிடவே
இயேசு பாலனாய் பிறந்தார்
காரிருள் நீக்கிடும் கதிரவனாய்
பாரினில் இவர் பிறந்தார்

சரணங்கள்

1. முன்னனை குளிரினில் கந்தையிலே
மன்னவர் மரிமடி மீதினிலே
தூதர்கள் துதித்திட வீண்மீன் வழிவிட
தூயவர் பிறந்தனரே - இந்த பாவ

2. பாவத்தின் கூரினை உடைத்திடவே
பரம் பொருள் பாலனாய் அவதரித்தார்
பகையாம் பிரிவினை நடுசுவர் தகர்த்திட
தரணியில் ஜெனித்தனரே - இந்த பாவ

3. மறையவர் மேய்ப்பர்கள் பணிந்திடவே
மறைபொருள் வார்த்தை உதித்தனரே
மறைமா மணியே மாதவகனியே
மகிமையை துறந்தனரே - இந்த பாவ

150. உம்மோடு இருக்க வேண்டுமே

பல்லவி

உம்மோடு இருக்க வேணுமே - உங்க
உங்க அன்பை அள்ளி பருக வேணுமே
விடுதலை தந்தவரே
புது பெலன் ஈந்தவரே
உமது பாதம் அமரவேண்டுமே - தினம் தினம் - நான்
உமது வார்த்தை கேட்க வேண்டுமே

சரணங்கள்

1. பாவம் செய்த கண்களுக்கு
நித்திரையும் தூரமாச்சி
பாவி எந்தன் வசிப்பிடமாய்
கல்லறை தான் மாறிடுச்சி
நம்பிக்கையின் நங்கூரமே நம்பி உம்மை தொடர்ந்திடவே
உமது கண்களில் தயவு வேண்டுமே - அநுதினம் என்னை
நன்மை கிருபை தொடர வேண்டுமே - உம்மோடு

2. என் இதய ஏக்கமெல்லாம்
அறிந்தவர் யாருமில்லை
என் மனதின் பாரங்களை
புரிந்தவர் எவருமில்லை
கருவினில் தெரிந்தவரே கரங்களில் வரைந்தவரே
உமது பாதை தொடர வேண்டுமே - என் காலமெல்லாம்
உமது வார்த்தை எனது பாடமே - உம்மோடு

3. வெண்ணிலவு நட்சத்திரங்கள்
வான தூதர் சேனையெல்லாம்
வானில் நீங்கள் வரும்பொழுது
எங்களுக்கும் வழி கொடுக்கும்
வியாசர் எந்தன் (மானிடர் எம்) பாடலுக்கு
வானதூதர் இசையமைக்க
ஆரவார முழக்கம் கேட்குமே - வெகு சீக்கிரம்
அந்த நாளைக் காண ஆவல் பெருகுதே - உம்மோடு

151. நீதிமானின் கூடாரத்தில்

பல்லவி

நீதிமானின் கூடாரத்தில் கெம்பீர சத்தம்
யாக்கோபின் தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்
தம்புரு கிண்ணரம் வீணையோடு துதிகள் ஆயிரம் - நான்
துதிக்கும் நாவு எழுப்பிடுதே இனிய சங்கீதம் - நீதி

சரணங்கள்

1. பறவை பாடுதே நீ பாட கூடாதா - அந்த
இயற்கை துதிக்குதே நாம் துதிக்க கூடாதா - நம்
பாடு மரணம் ஏற்க இயேசு பிறந்ததினாலே - நம்
பாவமெல்லாம் பறந்து போச்சு பாடிடுவோமே - நீதி

2. நோய்கள் பேய்கள் வேதனைகள் உனக்கு ஏனம்மா - எங்கள்
இயேசு நாதர் சுகங்கொடுப்பார் உனக்கு தெரியுமா - நம்
இயேசு கூட இருக்கும் போது கவலை ஏனம்மா - அவர்
கரம் பிடித்து நடக்கும் போது கலக்கம் வீணம்மா -நீதி

3. புதிய வல்லமை புதிய கிருபை எனக்கு வேண்டுமே
அதை கொடுக்கும் தேவ தேவனை நான் துதிக்கவேண்டுமே
புதிய நன்மை தினமும் என்னை தொடரவேண்டுமே
ஜீவனிருக்கும் வரையில் உமது வீட்டில் நிலைக்கவேண்டுமே- நீதி

4. ஆடிப்பாடுவேன் கூடி நடனமாடுவேன் - என்னை
தேடிவந்த தேவனையே போற்றிபாடுவேன்
தாளத்தோடும் மேளத்தோடும் கீதம்பாடுவேன்
எக்காளம் ஊதி எரிகோ மதிலை இடித்து போடுவேன் - நீதி

152. வேத வாக்கியமே

பல்லவி

வேத வாக்கியமே நமது பாக்கியமே
ஊனை கனுக்களை இதய நினைவை
வகையாய் பிரித்திடுமே - என் ஆத்துமா
ஆவியை நிறைத்திடுமே

சரணங்கள்

1. இருபுறம் கருக்குள்ள எந்த பட்டயம்
அதிலும் கருக்குள்ளது உந்தன் வசனம்
ஜீவன் கொடுக்கும் வல்லமையளிக்கும்
ஆறுதல் படுத்தும் மெய் வழியில்
என்னை வழி நடத்தும் தூய ஆவியால்
என்னை பெலப்படுத்தும் - வேத

2. பரதேசியாய் தங்கும் வீட்டினிலே
உமது பிரமாணம் என் சங்கீதமே
உமது கற்பனை என் மனமகிழ்ச்சி
தினமும் தியானிக்கிறேன் - உம் வேதம்
மனதில் காத்துக்கொள்வேன் - எக்காலம் உம்
வாக்கின் வழி நடப்பேன் - வேத

3. நீர் தந்த அபிஷேகம் நிலைத்திருக்க
வேறொரு போதகம் எமக்கில்லையே
அந்த அபிஷேகம் யாவையும் போதிக்கும்
சிலுவை வழி நடப்போம் - உம் வாக்கில்
என்றும் நிலைத்திருப்போம் - உம் பாதம்
பணிந்து போற்றிடுவோம் - வேத

4. உலகம் அதின் இச்சைகள் ஒழிந்திடுமே
உமது வார்த்தைகள் ஒழிவதில்லை
வானம் பூமி ஒழிந்த போதும்
அழியா வசனங்களில் - நானும்
நடந்து நிலைத்திருப்பேன் - பொல்லாங்களை
எதிர்த்து ஜெயித்திடுவேன் - வேத

153. கண்ணீரில் என் ஆறுதல்

பல்லவி

கண்ணீரில் என் ஆறுதலே
காரிருளில் பேரொளியே
கனவிலும் நினைவிலும் உம்மை மறவேன்
கண்ணீரில் என் ஆறுதலே

சரணங்கள்

1. தாயின் கருவினிலே என்னை கண்ட தயாபரனே
நோயினில் வேதனை நீக்கிடும் மாமருந்தே
பயங்களை போக்கிடும் பரம் பொருளே

2. மேய்ப்பனை போல் எனையே தினம் தேடிடும் தூயவரே
ஆடுகள் போல் அலைந்தேன் மனம் போல் உலகில்
தோளில் சுமந்தெனை தேற்றிடுமே

3. ஈன குருசினிலே தீயர் பாவங்கள் தீர்த்திடவே
ஆணிகள் பாய்ந்திட மேனி சிதைந்திடவே
சிரசினில் முள்முடி ஏற்றவரே

4. நெரிந்திடும் நாணல் என்னை நீர் முறிப்பதில்லை என்றீர்
மங்கி எரிந்திடும் திரிகளை மன்னவனே
அணையாதிருந்திட அருளிடுமே

154. ஆதியில் வார்த்தையானவர்

பல்லவி

ஆதியில் வார்த்தையானவரே
மேதினியைப் படைத்த நாயகனே
உம்மை பாடாத நாளில்லை
மனதில் களித்து இதழ்கள் குவித்து பாடுவேன் - ஆதி

சரணங்கள்

1. சந்திரன் சூரியன் உருவாகு முன்னே
தன்னில் தானே ஒளியாக நின்றீர்
நீரது புவியது தனி தனி பிரித்தது வார்த்தையினால் அன்றோ
பாடும் பறவையினம் நீந்தும் மீன்களினம்
நாதா நின்புகழ் பாடலையோ - ஆதி

2. வாக்கின் கோலாலே எதிரியை துரத்தி - தம்
தாசனின் கோலாலே கடல் நீர் பிரித்து
காற்றும் கடலும் மீன் கீழ்படிவதும் வார்த்தையினால் அன்றோ
காடும் மலைத்தொடரும் வான வெளிச்சுடரும்
தேவா உம் புகழ் கூறலையோ - ஆதி

3. வானத்து விண்ணோளி கிழக்கினில் தோன்ற
வானவரே நீர் வெளிப்படும் நாளில்
வானமும் பூமியும் ஒழிந்திடும் என்பது வார்த்தையினால் அன்றோ
தூதர்கள் காகளம் வானங்கள் அதிர்ந்திட
இயேசுவே நீர் வாருமையா - ஆதி

155. நம்ம பிள்ளைகள் நல்ல பிள்ளைகள்

பல்லவி

நம்ம பிள்ளைங்க நல்ல பிள்ளைங்க - தினம்
வஞ்சகமாக ஏமாற்றிக் கொல்லும்
சாத்தானுக்கும் செல்ல பிள்ளைங்க - நம்ம

சரணங்கள்

1. அழகழகா ஆலயத்தில் அமர்ந்திருக்குதுங்க - ஆனா
அலைபாயும் ஆசை மனம் எங்கோ சுத்துதுங்க
போதகரின் போதகத்தை கேட்க முடியலைங்க
இந்த பாடகரின் பாடல்களை கேட்க முடியலைங்க- அங்க
பக்கத்தில் இருக்கும் ஆளை கிள்ளி பேசி சிரிக்குதுங்க
இப்படி உலக வேஷம் போட்டு திரிஞ்சி
அன்னையை தந்தையை ஏமாற்றி வரும் - நம்ம

2. கலர் கலரா ஆடை அணிஞ்சி பவனி வருதுங்க - அந்த
கடவுள் சொன்ன வார்த்தைகளை மறந்து வருதுங்க
காலேஜிக்கு கட் அடிச்சி கணக்கு பண்ணுதுங்க - இங்க
கடற்கரையிலே காலம் நேரம் வீனா போகுதுங்க - நம்ம

3. அழகழகா அலங்கரிக்க நேரம் செல்லுதுங்க
நமது ஆண்டவரின் சேவை செய்ய போக்கு சொல்லுதுங்க
பான்சு சோப்பும் பவுடர் ஸ்நோவும் பளபளக்குதுங்க கூட
பாவ சுபாவம் நெஞ்சு முழுதும் கொட்டிக்கிடக்குதுங்க
- நம்ம

4. மேடை மேலே ஏறி நின்னு பாட்டு பாடுதுங்க
மன மேடைக்குள்ளே பொய்யும் புரட்டும் ததும்பி நிற்குதுங்க
பாடு பட்ட இயேசுவையே மறந்து போனதுங்க - இந்த
கேடு கெட்ட உலகை நம்பி பாழாய் போகுதுங்க

156. நான் நேசிக்கும் இயேசு

பல்லவி

நாம் உம்மை நேசிக்கிறேன்
கல்வாரி தென்றலை சுவாசிக்கிறேன்
இன்னும் அதிகமாய் நேசிக்கிறேன்
தேவா உம் வார்த்தையை தியானிக்கிறேன்

சரணங்கள்

1. நான் முன்னேறி செல்லும் என் பாதையெல்லாம்
உம் வேத வார்த்தை மெய் தீபமாகும்
என் கால்கள் இடறாது என் பாதம் வழுவாது
என் கரம் பிடித்தென்னை நடத்திடுமே

2. ஏதேன் பூங்காவினில் இழந்ததெல்லாம்
இயேசுவே நான் இன்று அடைந்திடவே
என் நேசர் உதிரம் கெத்சமனேயின்
மலர் செடி வேர்களின் உரமானதோ

3. உம்மாலே கூடாத தொன்றுமில்லை
என்னாலும் கூடும் நீர் பெலன் கொடுத்தால்
மலைமேடு உருளும் கடலோடு அமிழும்
கடுகளவு விசுவாசத்தினால்

4. உம்மோடு பாடுகள் சகிப்பதினால்
உம்மோடு ஆளுகை செய்திடுவேன்
விண்மேகம் ஏறி வெள்ளை சிங்காசனம்
வேந்தரின் பாதங்கள் பணிந்திடுவேன்

157. சாவுக்கு அழைப்பு

பல்லவி

கடைசி காலம் இது
கவனம் வேண்டும் நண்பா
கண்ணாமூச்சு காட்டி கழுத்தறுக்கும் கூட்டம்
எதுவென்று கண்டுபிடி நண்பா
இயேசுவுக்காய் மரித்திட ஆயத்தமா - பர
லோகத்திலே - பலன் பெருவாய் நீ நிச்சயமா

1. தாவீதைப்போல நடனமாடுவோர்
தடுமாறும் காலமிது - நான்
செத்தாலும் சாவேன் எஸ்தரை போலவே
என் ஜனம் மீட்புறவே

2. இது சாவைக்கண்டு அஞ்சாத கூட்டம்
சரித்திரம் படைத்திட துடிக்கும் - நம்
இயேசுவைப் போல சிலுவை சுமக்கும்
சீயோனின் சிங்காரத் தோட்டம்

3. இளையோர் முதியோர் ஆண் பெண் யாருக்கும்
இனி வரும் பலன் மேல் நோக்கம் - இந்த
உலகத்தை வெறுப்போம் உபத்திரவம் சகிப்போம்
இடுக்கமான வழி நடப்போம்

158. தாமதமேன் தெய்வமே!

தாமதமேன் தயாபரனே - உந்தன்
பூமுகம் கானவே ஏங்குகிறேன்
நித்தம் நித்தம் என்ன ஏய்த்தழித்திடும்
உலகினை வெறுத்திடவே
ஒத்து போகாதென் உடலை வீசி- என்
றென்றும் உம்முடன் சேர்ந்து வாழ்ந்திட - தாம

சரணங்கள்

1. மனிதரின் வார்த்தையில் மனங்கசந்தேன்
மாறா உம் கிருபையில் மனமகிழ்ந்தேன்
சேரா ஸ்நேகத்தால் நிலைகுலைந்தேன்
மன்னரின் கரம் அணைக்க முகம் மலர்ந்தேன்
அங்குமிங்குமலைப் பாய்ந்திடும் மனம்
ஆறுதல் அடைந்திடவே
யூதா ராஜ சிங்கம் வெண்சிங்காசனம்
ராஜ ராஜனிவர் இராஜ்ஜியம் கானவே - தாமத

2. சிவந்த மனிதன் இவன் நிழல் வெளுப்போ - அந்த
கருத்தவன் உதிரத்தின் நிறம் கருப்போ
மனிதரில் பேதங்கள் மிகுந்திடல் கான
மனம் பதறும் எந்தன் உடல் உதறும்
தெய்வதிருமகன் சிந்திய உதிரம்
காலில் மிதிபடுமோ
எய்த அம்புகள் ஏந்தும் பொல்லாங்கன்
வஞ்சகம் எந்தன் வாழ்வில் விலகிடுமோ - தாமத

3. கனியுண்ட பாவம் எமில் கழுவிடவே
களங்கமெலாம் நீங்கி மகிழ்வுறவே
பரமகுமாரன் எந்தன் ஜீவனன்றோ
மரணமும் இனியெந்தன் இலாபமன்றோ
வானில் தூதர் கணம் கூடி பாடிவர
சிறகுகள் விரித்திடுவேன்
பாவமேனியிதை வீசியெறிந்து மறு
ரூப மேனியை அழகுற அணிந்திடவே - தாமத

159. சிட்டு குருவியும் பாடுது

பல்லவி

சிட்டுக் குருவியின் பாட்டை கேட்டு
காலையில் கண்விழித்தேன்
காட்டு புறாவின் ஓசை கேட்டு
கர்த்தரை ஸ்தோத்தரிப்பேன்
கிச்சிலி பழங்கள் என்னை ஆற்ற - அவர்
நேசத்தால் சோகமானேன் - சிட்டு

சரணங்கள்

1. இடக் கரம் என் சிரசின் கீழ் - வல
கை என்னை அணைக்கும் - மரு
தோன்றி பூங்கொத்து எங்கேதி திராட்சை
தோட்டங்களில் முளைக்கும் - நீ
பூரண ரூபவதி உன்னில் பழுது ஏதுமில்லை - அந்த
கன்மலை வெடிப்பில் தங்கும் புறாவே
வா வென்றழைப்பவரே - அந்த சிட்டு

2. மாரி காலம் சென்றது - மழை
பெய்து ஒழிந்தது
அத்திமரமும் காய்த்து - திராட்சை
செடியும் பூத்தது - நீ
பெண்களில் ரூபவதி - என் ப்ரியமே எழுந்துவா - என
எந்தன் நேசர் அழைக்கும் சத்தம் என்
செவியில் தொனிக்குதே - அந்த சிட்டு

160. எத்தனை முறை பெத்தலையில்

பல்லவி

பெத்தலையிலே எத்தனை முறை - நீங்க
பிறந்தாலும் தெய்வமே - என்
இதயத்தில் ஓர் முறை பிறக்கவில்லையெனில்
என் வாழ்க்கை வீணிலே
விண்ணில் மகிமை மண்ணில் அமைதி
மாந்தரில் பிரியமே
மலர்ந்திடவே பிறந்தவரே
என் இதயத்தில் வாழுமே

சரணங்கள்

1. தூயவர் பிறந்தது தாழ்மையிலே
தூதர்கள் விளக்கிய உண்மையிதே
இடையர்கள் பாதையில் இடறலில்லை
இறைவனை பார்க்கவும் தவறவில்லை
விண்மீன் தெளிவாய் வழிகாட்ட
ஞானியர் பாதை தவறியதேன்
அரச குமாரனை அரன்மனையில்
அறிஞர்கள் தேடியததிசயமோ - பெத்தலை

2. இரத்தம் சிந்தி எங்கள் இடர் நீக்க
சத்திர முன்னனை தெரிந்தெடுத்தீர்
வினைகளை தீர்த்திடும் பலியாக
மனுகுலம் தழைத்திட அவதரித்தீர்
இருட்டினில் நடந்திடும் ஜனங்களுக்கு
வெளிச்சத்தில் பாதையை திறந்திடவே
சாபத்தின் பாவத்தின் வேரறுத்து
சாத்தானின் சிரசை நசுக்கியவர் - பெத்தலை

பரிசுத்த ஆவியில் நிறைந்திடவே
பரிசுத்த வாழ்வினை தொடர்ந்திடவே
பரவசமாய் நாம் பரிசுத்தராய்
பாலனாய் பிறந்தவரை தொழுவோம்
மழலையின் வடிவில் வந்தவரே
மணமகனாய் மீண்டும் வருபவரே
மாசுகள் நீக்கி தம் மணமகளாய்
மண கோலம் தந்து மகிழ்வாரே - பெத்தலை

161. நிறம் மாறும் மனிதன்

பல்லவி

அடிக்கடி மாறும் மனிதனின் நிறம் - அது
ஏனென்று தெரியாது
ஒரு நாள் புகழ்வார் மறுநாள் இகழ்வார்
காரணம் புரியாது
சிரிப்பு வரும் சிரிப்பு வரும் - இந்த
மனிதனை நினைத்தால் சிரிப்பு வரும்

சரணங்கள்

1. சின்ன சின்ன கோபம் தீர்ந்துவிடும்
வளரவிட்டால் பெருந்தீமை வரும்
சொற்களின் மிகுதியில் பாவம் வரும் - அதை
சுருக்கிவிட்டால் தேன் போல் இனிக்கும்
விட்டுக் கொடுத்தால் கொஞ்சம் தட்டிக் கொடுத்தால்
வெற்றியுடன் இன்பம் தொடர்ந்து வரும் - சிரிப்பு

2. அறுவடை காலத்தில் சேர்த்து வைக்கும்
எறும்பையும் பார்த்தால் ஞானம் வரும்
கை முடக்கி நீ உறங்கிவிட்டால்
தரித்திரம் ஆயுதம் அணிந்துவரும்
இன்னும் கொஞ்சம் உறங்கட்டும் என்றிருந்தால்
சடுதியில் நாசம் நெருங்கிவரும் - சிரிப்பு

3. அகந்தையும் பெருமையும் அகற்றிடுவாய்
ஐஸ்வர்யம் கனமும் அடைந்திடுவாய்
உன் துரவில் ஊறிடும் ஜலம் குடிப்பாய் - உன்
ஊற்றுகள் வீதியில் பாய்ந்துவரும்
அதிகாலை அவரை (நீ) தேடிடவே
எழுந்தால் அவர் முகம் கண்டிடுவாய் - சிரிப்பு

162. எல்லோரும் ஓர் இனமே

பல்லவி

எல்லோரும் ஓர் இனம்
எல்லோரும் ஓர் குலம்
இயேசுவின் இரத்தம் - எம்மை
கழுவினதாலே
ஆனந்தம் ஆனந்தம் என்றும் ஆனந்தம்
அல்லேலூயா அல்லேலூயா பேரனாந்தம்

சரணங்கள்

1. சாதி மத பேதமில்லையே எங்களுக்குள்ளே
உபதேச சண்டையில்லையே - எந்த நாளும்
எளியவன் வலியவன் ஏழை செல்வம் பெருந்தவன் - என
இயேசு எங்களை பிரிப்பதில்லையே - ஆனந்தம்

2. பாதங்களை முத்தமிட்ட பாவியான. பெண்ணையும்
தூய தேவ பிள்ளையாக்குவார் - என்றும்
போதுமென்ற மனதோடு தேவ பக்தி கூடினால்
சாவுகூட இலாபமாகுமே - ஆனந்தம்

3. விசுவாச வீரராகவே எம் பாதையில்
வேகமாக ஓடும்போதிலே - எமக்குரிய
பாந்தய பொருள் அடைந்திடவே பரிசுத்தமாய் வாழ்ந்திடவே
தூய ஆவி பெலன் தருவாரே - ஆனந்தம்

4. கனிதரும் மரங்களாக கர்த்தர் மாற்றுவார்
ஒளிதரும் சுடர்களாக்குவார்
சோதனைகள் பாடுகள் சகித்த இயேசு ஆண்டவர்
உதவி செய்ய உடன் வருவாரே - ஆனந்தம்

163. முடியாததொன்றும் இல்லை

முடியாததொன்றும் இல்லை
என் வாழ்விலே
துணையாகவே என்னோடென்றும் நீர்
வரவேண்டுமே

விசுவாசமே ஜெயமே உலகை வென்றிடுமே
தூய ஆவியே தங்கிடுமே
நிறைவாகவே என்னுள்ளமே
எந்நாளுமே என்னுடனே - முடியாத

சரணங்கள்

1. அடங்காத கடலலை அடங்கும் அவர் வார்த்தையில்
சீறும் செங்கடல் இரண்டாய் பிரியும் அவர் சுவாசத்தில்
பேசாத மிருகமும் பேசும் எனை சுமந்திடும்
பானை மாவும் கலயத்தில் எண்ணெய் நெடுநாள் வரும்
நன்மை கிருபை என்னைத் தொடரும்
எதிலும் ஜெயமே எந்நாளுமே - முடியாத

2. விலகாத கிருபைகள் தொடரும் மலை விலகிடும்
திறளான நன்மைகள் என்னையே தினம் தொடர்ந்திடும்
புதிதான வரங்களும் வாழ்வும் எனில் விளங்கிடும்
திருமைந்தன் கரங்கள் எனையே தினம் தாங்கிடும்
எனது நிழலாய் இறைவன் இருக்க
அசைவதேயில்லை எந்நாளும் - முடியாத

3. தீராத தாகம் தீர்க்கும் நீரோடையே
கல்வாரி மாலை மேலிருந்தே தினம் பாயுதே
விலகாத பாவம் விரட்டும் என் இயேசுவே
உமதன்பில் மூழ்கி தினமும் இளைப்பாருவேன்
நித்திய வாழ்வு நித்திய மகிழ்ச்சி
நிச்சயம் எனக்கே - அந்நாளில் - முடியாத

164. பறந்து காக்கும் பட்சி

பறந்து காக்கும் பட்சியைப்போல
பாதுகாக்கும் பரம தேவா
சொந்தக் குமாரனை எனக்காய் ஈந்து - என்
நிந்தனை நீக்கிய நித்திய தேவா - பறந்து

1. மாம்சமானதோர் வார்த்தையே தேவ
ஆவியை எம்மில் ஊற்றவா
வானம் பூமியும் அகன்று போயினும்
அழிந்திடா உந்தன் வாக்கு தா தா

2. கூலிக்காரனின் வருஷம் போன்ற
வறண்ட வாழ்வினை மாற்றவே
ஏவையை அன்று ஏய்த்த பாம்பின்
கொடிய வஞ்சனை மாற்ற வா வா

3. ஆவியில் அனல் மூட்டவா - விசு
வாசத்தில் உயிரூட்டவா
மாசில்லாதொரு வாழ்வினூடும்மை
நேசிக்கும் மனம் எனக்கு தா தா

165. உலகம் ஒரு நாடகமேடை

உலகம் - ஒரு
நாடகமேடை - அதில்
நடமாடும் கல்லறை நான்
நரகம் - நான்
ஏன் செல்லவேண்டும் - அது
சாத்தானின் இடமல்லவா
பாவம் சாபம் யாவும் நீக்கும் - இயேசு
சிந்திய கல்வாரி இரத்தம் - உலகம்

1. அதிகாலையில் மலரும் - அந்தி
மாலையில் உதிர்ந்துவிடும்
மலர் போன்ற ஒருநாளின் வாழ்வு
சதமில்லை நிலையில்லை இகமீதிலே
கொஞ்ச காலம் தோன்றி
மறையும் புகையைப் போல
காற்றினில் கரைந்துவிடும் - குளிர்

2. புல்லின் மேலமர்ந்து - மின்னும்
பனித்துளி போலிருந்தும்
இளங்காலை கதிர் வீசக் கண்டு
உருண்டோடும் கரைந்தோடும் புவி வாழ்விதே
என்ன கொண்டு வந்தாய்
என்ன கொண்டு செல்வாய்
மன்னாகி மறைந்திடுவாய் - பிடி

3. வாலிபமும் அழகும் - வெறும்
மாயை அழிந்துவிடும் - இந்த
நீர் மேலே குமிழ்போல தோன்றி
நினைக்கும் முன் மறைந்திடும் நொடிப்பொழுதில்
காற்றில் ஏற்றி வைத்து
கையால் மறைக்கும் தீபம்
ஒரு நொடி நிலைத்திடுமோ - இங்கு

4. நிரந்தர வாழ்வெனக்கு - தரும்
நீதியின் சூரியனை
நினைத்தாலும் துதித்தாலும் இன்பம்
நிலைவாழ்வு நிஜமாகும் நம் இயேசுவில்
நானே வழியும் வாய்மை
வாழ்வே என்றவர் வழியில்
நடந்திட நரகமில்லை - இனி

166. கலங்காத உள்ளம் தாரும் இயேசு

எதற்கும் கலங்காத உள்ளம் தாருமே
உமக்குள் களி கூர்ந்து மகிழவேண்டுமே
நினைக்கும் நேரமெல்லாம் துதிக்க வேண்டுமே - நான்
படைக்கும் பலிகளை நீர் ஏற்கவேண்டுமே - எதற்கும்
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

1. பறவை மிருகம் தாவரங்கள் கலங்குவதில்லை
புல்லின் பூவும் அழகுக்காக ஏங்குவதில்லை
படைத்தவரே போஷிப்பதால் பயப்படுவதில்லை
நாளைய தினம் குறித்த கவலை அவைகளுக்கில்லை-அதை
நினைப்பதுமில்லை - எதற்கும்

2. காட்டு மலரை அலங்கரிக்கும் கர்த்தரின் கரங்கள்
கெட்ட மனிதர் எமை அணைக்க தயங்கியதில்லை
நேற்றும் இன்றும் என்றும் இயேசு மாறியதில்லை
ஏற்றுக்கொண்டநாள் முதல் எமை மறந்தது இல்லை-கண்
உறங்கினதில்லை - எதற்கும்

3. சிலுவை பாதை தொடர்ந்து நடக்க அஞ்சுவதில்லை
மயக்கும் மாம்ச சிந்தை என்னை மிஞ்சுவதில்லை
கிறிஸ்துவுக்குள் இருப்பதினால் சாத்தான் தொடுவதில்லை
இனிக்கும் வேத வார்த்தையை நான் மறப்பதுமில்லை-யாரும்
மறுப்பதுமில்லை - எதற்கும்

4. வருகை நாளுக்காயத்தமாய் இருப்பதினாலே - எனை
பரிசுத்தமாய் தூய ஆவி காப்பதினாலே - பிர
தான தூதன் எக்காள தொனி ஒலித்திடும் வேளை
சிங்காசம் அமர்ந்தவரின் அருகினில் இருப்போம் என்றும்
அவருடன் அமர்வோம் - எதற்கும்

167. பாலும் தேனும் கானான்

பாலும் தேனும் ஓடும்
தேசம் நானும்
காண வேண்டும் - என் கண்களினால்

சரணங்கள்

1. அல்பா ஒமேகாவும் ஆனவர் - இயேசு
ஆதியும் அந்தமுமானவர்
ஓராயிரம் ஆண்டு அரசாட்சியில்
ஒன்றான மெய்தேவன் என்னோடு அமர்ந்திருக்க - பாலும்

2. சீயோனே உன் தேவனைத் துதி
உந்தன் எல்லைகளில் சமாதானமே
யாக்கோபின் தேவன் நம் துணையே
கர்த்தர் சதாகாலம் அரசாளும் சீயோன் எனும் - பாலும்

3. என்றும் அசையா சீயோன் பர்வதம் - பல
சிங்காசனங்கள் நியாயாசனங்கள்
தாவீதின் வம்சம் எமக்கங்கு உண்டு
கர்த்தாவே உம் நாமம் தலைமுறையாய் நிலைத்திருக்கும்
- பாலும்

4. சாரோனின் ரோஜா என் இயேசுவே
பள்ளத்தாக்குகளின் லீலி மலர் போலவே
பார்வோனின் இரதம் பூண்ட பரி என்றவர்
கரம் கோர்த்து நதியோரம் அநுதினமும் நடந்திடவே-பாலும்

168. ஜெபம் நேரம்

ஜெபிக்கும் நேரம்
இனிக்கும் பாடலுடன் - உமையே
துதிக்கும் இதயம் எனக்கு தாரும்
துதித்து பாடிடுவேன் - தினமும்
மகிழ்ந்து களித்திடுவேன்
பல்லவி

முழங்காலில் ஜெபிக்கவே
முழு உலகையும் ஜெயிக்கவே
உமதாவி வரம் தாருமே - இருமடங்கு
ஆவியிலே வளரவே இயேசுவையே தொடரவே
புதிதான மனம் தாருமே - மறுரூபமாகும்

1. தனிமையிலே ஜெபிக்க வேணுமே - அலங்கார
வார்த்தைகளை குறைக்க வேணுமே
அந்தரங்கத்திலே ஜெபிக்கிற அடியேனின் விண்ணப்பத்துக்கு
வெளியரங்கமாய் பதில் கொடுக்கனுமே - நீங்க

2. போராடி ஜெபிக்கவேணுமே - யோபைப்போல
அடுத்தவர்க்காய் ஜெபிக்கவேணுமே
தந்தையருகே இயேசு இரட்சகர் வீற்றிருக்கும் இடத்திலுள்ள
மேலானதை கேட்கவேனுமே - அந்த

3. சோர்ந்திடாமல் ஜெபிக்கவேணுமே - எலியாவைப்போல
கருத்தாக ஜெபிக்கவேணுமே
அழிந்து போகும் மாந்தருக்காய் திறப்பின் வாசல் அருகில் நின்று
ஊக்கத்தோடு ஜெபிக்கவேண்டுமே - மிக

169. நிழல் தேடும் நெஞ்சம்

நிழல் தேடும் நெஞ்சமே
இருள் சூழ்ந்த வாழ்விலே
மெய்தீபம் இயேசுவே
என் பாதை எங்குமே

1. மழைகால வானவில்லின்
வண்ணம் போல மின்னுமே
கொஞ்சகாலம் தோன்றி மறையும்
புகைபோன்ற வாழ்விலே
அன்னை காட்டும் அம்புலி இறங்கும்
என்று நம்பும் மழலைப்போல் - நிழல்

2. உமை ஒன்று கேட்கிறேன்
அதையே நான் நாடுவேன்
என் ஜீவ நாட்களெல்லாம்
உந்தன் வீட்டில் தங்குவேன்
தீங்கு நாளில் கூடார மறைவில்
ஒளித்து மறைத்தே காத்திடுவீர் - நிழல்

3. அள்ளித் தூவும் விதை சுமப்பேன்
கண்ணீரோடு விதை விதைப்பேன்
விளை நிலங்கள் தேடி செல்வேன்
விரைவாயும் பணி முடிப்பேன்
அறுத்த அரிகள் சுமந்து கொண்டு
கெம்பீரமாய் நான் திரும்பிடுவன் - நிழல்

170. நான் பாடும் பாட்டுக்கு

நான் பாடும் பாட்டுக்கு
நாணலும் தலையாட்டும்
என் பாட்டை கேட்டால்
வண்ண மயில் கூத்தாடும்
வண்ண பூக்களும் அதை பேசும்

1. இயேசுவை நான் பாடும் போது
தென்றல் கேட்க்கட்டுமே - இந்த
உலகமெல்லாம் எனது துதியை
சுமந்து செல்லட்டுமே - தினம்

2. தாவீதைப்போல் தேவராகம் - என்
நாவில் ஒலிக்கட்டுமே
தம்புரு கிண்ணரம் தீங்குழல் யாழின்
நாதம் தொனிக்கட்டுமே - வேத - இனிய

3. வான வில்லின் வண்ணங்கள் ஏழும்
கண்ணுக்கு விருந்தாகும் - என்
கவிதை சுமக்கும் ஸ்வரங்கள் ஏழும்
நெஞ்சுக்கு இதமாகும் - பலர்

171. புத்தியுள்ள மனைவி

புத்தியுள்ள மனைவி - தன்
வீட்டை கட்டுகிறாள்
புத்தியில்லாத பெண்மணி - அதை
இடித்துப் போடுகிறாள் - கைகளால்
இடித்துப் போடுகிறாள் - முழுவதும்

புகழப்படும் பெண்மணி இவளோ - குலம்
தழைக்க வந்த கண்மணி இவளா - புத்தி

1. அதிகாலை எழுந்து விடுகிறாள் - தன்
வீட்டார்க்கு ஆகாரம் வழங்கி மகிழ்கிறாள்
வீட்டு வேலைக்காரருக்கும் படியளக்கும் பெண்மணி
புருஷன் இதயம் நம்பும் கண்மனி -புகழ

2. எளியவருக்கு கைகள் திறக்கிறாள் - என்றும்
ஏழைகட்கு உதவிடவே கரங்கள் நீட்டுகிறாள்
வயல்வெளிகள் வாங்குவாள் திராட்சை தோட்டம் நாட்டுவாள்- தன்
கைகளை பெலப்படுத்தி கொள்ளுகிறாள் - புகழ

3. ஆடைகள் பலம் அலங்காரமே - வருங்
காலம் குறித்து அவளுக்கென்றும் கவலையில்லையே
ஞானம் விளங்க வாய்திறப்பாள் நாகரீகம் காத்திடுவாள்
இவள் விளக்கு அணைவதில்லையே - புகழ

4. வீட்டோரம் கனிதரும் கொடியே - என்றும்
சீயோனின் ஆசீர்வாதம் தொடரும் உன்னையே
ஒலிவமர கன்றுகளாம் பந்தியை சுற்றியுன் பிள்ளைகளுக்கு
எருசலேமின் வாழ்வு நிச்சயமே - புகழ

172. மழலை செல்வம்

தத்தி தத்தி நடந்து வரும் சிங்கார மழலை - நீ
திக்கி திக்கி பேசும் உந்தன் கொஞ்சுமொழி குரலை
கேட்க கேட்க செவிகளிரண்டும் தேனை குடிக்குது
உன்னைப்போல மாறவே எந்தன் உள்ளம் துடிக்குது
உன்னைக் கட்டி பிடித்தொரு முத்தம் கொடுத்திட
இதழ்கள் துடிக்குது - கண்ணே - தத்தி

1. நீ பேசும் மழலை மொழியில் நூறு கவிதை தெரியுது
சில மனிதர் பேசும் வார்த்தையினால் ஊரே எரியுது - தேவ
கிருபை நிறைந்த வார்த்தையில் மன காயம் ஆறுது-நீ
ஜெபிக்க வேதம் படிக்க ஆசீர்வாதம் பெருகுது கண்ணே

2. சாதி சமய பேதம் உனக்கு தெரிவதில்லையே - இது
ஞானிகட்கும் மேதைகட்கும் புரிவதில்லையே - உந்தன்
கள்ளமில்லாத வெள்ளை சிரிப்புக்கு ஈடு இல்லையே - மன
தெளிவில்லாத தீய மனிதர் நிலைப்பதில்லையே கண்ணே

3. தொலைகாட்சி தொடர்களை நீ விலக்கவேண்டுமே
தேவனை துதிப்பதுபோல் பாடங்களையும் படிக்க வேண்டுமே நம்
இயேசுவைப்போல பெற்றவர்க்கு கீழ்படியவேண்டுமே-மனத்
தெளிவுடன் இந்த உலகை எதிர்த்து நடக்கவேண்டுமே கண்ணே

4. வேஷம் போடும் மனிதர் மாயம் அழியவேண்டுமே - வேத
வசனம் விட்டுவிலகும் மனிதர் அகலவேண்டுமே - வழி
விலகிடாது சிலுவை பாதை நடக்கவேண்டுமே - தூய
ஆவி தேவமைந்தன் உன்னை நடத்தவேண்டுமே கண்ணே

174. எங்கள் நடுவில் தூய ஆவி

எங்கள் நடுவில்
என்றும் இருக்கும்
தூய ஆவியே - உமக்கு
ஸ்தோத்திரம் ஐயா
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
ஆமென் ஆமென் ஆமென் ஆமென் அல்லேலூயா - எங்கள்

1. பாவம் நீதி நியாயதீர்ப்பு யாவும் குறித்து
கண்டித்து உணர்த்துகின்ற நேரத்திலெல்லாம்
பரதேசியாய் நான் தங்கும் வீட்டிலே - உந்தன்
பிரமாண கீதங்கள் பாடவைத்தீரே - எங்க

2. என் ஓட்டம் கிறிஸ்துவுக்குள் ஓடிமுடிக்க
சத்தியத்தின் பாதையிலும் கரம்பிடிக்க
நித்திய கிருபை என்றும் என்னில் விளங்க - தேவ
சித்தங்கொண்டு மன்னித்தென்னை ஆட்கொள்ளவே - எங்

3. வெண்கல தாழ் பாள்களை உடைக்கின்றவர்
இரும்பு தாழ்பாளையும் நொறுக்கிடுவீர்
சிங்கத்தின் வாயையடைத்த சர்வவல்லவர் - உந்தன்
சிங்காசனத்திலும் பங்களித்திடுவீர் - எங்கள்

175. இயேசு இல்லையென்றால் இயேசு

இல்லையென்றால் - இயேசு
இல்லையென்றால்
நானில்லையே - என்னில்
ஒன்றுமில்லையே - இல்லை

1. மாமிசமானதோர் வார்த்தையிவர் - தேவ
ஆவியினால் எமை நிறைக்கின்றவர்
பாவியென் பாதகம் யாவையும் தீர்த்திட
ஆணிகள் பாய்ந்திட சிலுவையில் மாண்டவர்
நினைத்து நினைத்து மனதில் களித்து
துதித்து துதித்து கரங்கள் குவித்து
பாடுவேன் துதி பாடுவேன் - இல்லை

2. மானிடர் பாவம் தீர்த்திடவே - மூன்று
ஆணிகள் பாய்ந்திட குருசினிலே
நானிலத்தோர் உயர் வானிலம் சேர்ந்திட
மானிடனாகி எம் மாபழிதீர்த்ததை - நினைத்து

3. ஒரு முறை உலகினை மீட்கவே வந்தவர்
அதிசயம் அற்புதம் ஆற்றிய ஆண்டவர்
மறுமுறை வருவார் வானத்தின் வழியே
நியாயங்கள் தீர்த்திட தூதருடன் வருவதை - நினைத்து

176. ஈஸி ஈஸி டேக் இட் ஈஸி

ஈஸி ஈஸி டேக் இட் ஈஸி
வாழ்கை நமக்கிப்போ ஈஸி
இயேசு நாதரே சுமந்துவிட்டார் - இனி
சிலுவைகூட நமக்கு ஈஸி

1. நினைத்ததெல்லாம் நிறைவேற - முழங்
காலில் ஜெபம் நமக்கு எதுக்கு
கணத்த உறையில் நிறைய காசுவெச்சா - அட
ஜெபிக்க ஆளு இங்கு இருக்கு
இலட்சியங்களை எட்டி பிடிக்க - இயேசு
இரட்சகர் சாமி இங்கு எதுக்கு
இலட்சம் இலட்சமாய் தொறந்து கொடுக்க
இடுப்பினில் தங்க சாவி இருக்கு இது - ஈஸி

2. தினம் தினம் நாம் படித்திடவே - வேத
புத்தகம் ரொம்ப ரொம்ப பெரிசு - இப்போ
ஸ்தோத்திரபலி புத்தகம் படிக்க - நம்ம
கைக்குள் அடங்கிவிடும் சைசு
தொலைகாட்சியில் திரைபெண்களிங்கு
ஆடும் ஆட்டம் கண்ணுக்கு குளிர்ச்சி - நம்ம
பரிசுத்தவான்களும் குதித்து ஆடிவர
கூடிப்போச்சு இங்கு கவர்ச்சி - ரொம்ப ஈஸி

3. மந்திர தந்திரங்கள் ஏதுமில்லையென
வேதம் சொல்லுகின்ற உண்மை - சிலர்
முன்பே புதைத்து வைத்த மந்திர தகடுகளை
தோண்டியெடுப்பதோ விந்தை
ஆண்டவர் சித்தம் என் வாழ்வினில் திட்டம்
வேதத்தில் இருக்குது மொத்தம் - இன்று
தீர்க்கர் என்று சொல்லிக்கொண்டு
திரியும் சிலர் காட்டும் சொர்க்கமெல்லாம் பொய்யான பித்தம்

ஈஸி ஈஸி டேக் இட் ஈஸி வாழ்வு இப்போ ஈஸி
வசனம் விட்டு இவர் பின்னாலே போனால்
வாழ்க்கை ரொம்ப ரொம்ப ஈஸி
இடுக்கம் இடுக்கம் இடுக்கம் சிலுவை பாதையோ இடுக்கம்
இயேசுவின் பின்னால் சிலுவை சுமந்து
சென்றாலோ பின்நாளில் சொர்க்கம்

178. நீயே - தெய்வம்

நீயே - தெய்வம் நீயே - எனக்குள்
இருப்பதும் நீயே

1. பூவுக்குள் காயாய் மறைந்தாய்
மலருக்குள் காயாய் மறைந்தாய்
காய் கணிந்து பழமாய் இனித்தாய் - பழம்
புசித்தவர் பசியினை தணித்தாய்- உந்தன்
புதமதை பணிந்தேன் இறைவா

2. நிலத்துக்குள் நீராய் ஒளிந்தாய் - கடல்
நீருக்குள் உப்பா (க) ய் கரைந்தாய்
கண்ணுக்குள் மணியாய் ஒளிர்ந்தாய் - உனை
கான அக்கண்கள் திறந்தாய்

3. உடலுக்குள் உயிராய் உறைந்தாய் - உடல்
ஏக்கத்தின் உயிர்வினை உரைத்தாய்
உடலெனும் படகினை வாழ்வில் - பலர்
பயன்பட இயங்கிட வைப்பாய்

4. என்னுள்ளே உன்னையும் வைத்தாய் - இந்த
உண்மையை உணர்ந்திட செய்தாய்
மனம் தளர்ந்தழுதிடும்போது - மன
ஊக்கமெனும் மருந்தாய் ஆனாய்

179. மீண்டும் வரவேண்டும் ஸ்வாமி

ஒருமுறை வருவீரோ ஸ்வாமி - மீண்டும்
கையிலொரு சவுக்கெடுத்து
திருச்சபை சுத்திகரிக்க
மறுமுறை வருவீரோ ஸ்வாமி - மீண்டும்

1. விற்பனையும் கொள்முறையும் வாழ்க்கையின் விதியாச்சே
காசுகாரர் பலகை பொருள் சேர்க்கும் வழியாச்சே
புறாவிற்கும் பரிசுத்தவான்கள் ஆசனத்தில் அமர்ந்தாச்சே
ஐயகோ எம் ஆண்டவர் கண்கள் கண்ணீரால் நிறைந்துபோச்சே
- மீண்டும்

2. நோவாவின் பேழைக்குள்ளே நோய்கிருமி நுழைஞ்சி போச்சே
சோதோம் கொமோரா சிலர் சொர்க்கமாக மாறிப்போச்சே
ஆபிரகாம் அந்தபுரம் இப்போ ஆகாரின் அரசாட்சி
தாவீதின் உப்பரிகையோ அப்சலோமால் நாறிப்போச்சே -
மீண்டும்

3. அற்புதங்கள் அதிசயங்கள் ஊழியர்க்கு அவசியமாச்சு
ஆண்டவர் தந்த வேத வசனம் அற்புதங்களில் அமுங்கி போச்சு
யூதாசின் பணப்பை இப்போ ரொம் ரொம்ப பெரிசாச்சு -இன்று
சிலுவையின் உபதேசம் பயித்தியமாய் மாறிப்போச்சு

180. என்னடா உலகமிது

என்னடா உலகமிது - நில்லடா தலைநிமிர்ந்து
காலமிதை தவறவிட்டால் - வாழ்வேது மனந்திரும்பு

1. நல்லவனை கெட்டவனென்று
நாளேடுகள் சொல்லுது - இந்த
கெட்டவனை நல்லவனென்று
சாட்சி சொல்லுது தொலைக்காட்சி சொல்லுது
விளம்பரத்தால் உயர்ந்தவர்கள்
இல்லையென்றது யாரடா - வெறும்
விளம்பரத்தால் பொய்யைக்கூட
மெய்யாக்குறானடா அது உண்மைதானடா
பொய்யோடு மெய் கலந்து காசு சேர்க்கிறான் - ஸ்விஸ்
பேங்கில் சேர்க்கிறான்

2. காசு பணம் பெருத்தவன்தான்
தலைவனாக முடியுது - தானை
கல்வி கற்று வாங்கின பட்டம்
காற்றில் பறக்குது பண காற்றில் பறக்குது
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
என்று சொன்னது யாரடா - தெரு
கோடியிலே நின்றாலும்
கூட யாரடா உன்கூட வருவதாரடா
காதறுந்த ஊசிகூட வருவதேதடா
உன்கூட வருவதேதடா

.என்னடா உலகமிது
நில்லடா தலைநிமிர்ந்து
காலமிது தவறிடாமல்
இயேசுவிடம் மனந்திரும்பு - 2

181. தென்றலை சுவாசிக்கிறேன்

தென்றலை சுவாசிக்கிறேன் - உந்தன்
வசனம் சுமப்பதால் - குழல்
ஓசையை நேசிக்கிறேன் - வேத
வார்த்தை கலந்ததால் - நீல
வானத்தை ரசிக்கிறேன் - உந்தன்
மகிமை தெரிவதால் - இந்த
இயற்கையை ருசிக்கிறேன் - அதில்
உம்மை காண்பதால் - குளிர்

1. காட்டுமலர்கள் அழகில் உந்தன் படைப்பை காண்கிறேன் - வானம்
பாடி வானில் பறக்கும்போ தும் அன்பை காண்கிறேன்-இடி
மின்னல் மழையின் நடுவில் உந்தன் வல்லமை காண்கிறேன்
குயிலோசையின் இனிமையில் மன நிறைவு காண்கிறேன்-குளிர்

2. உறைந்த பனியின் மென்மையில் உந்தன் கிருபை காண்கிறேன் -கார்
மேகம் வானில் அலையும்போ தும் வருகை நினைக்கிறேன் -மரம்
செடிகொடிகளின் சலசலப்பில் உம் கருணை காண்கிறேன் சிட்டு
குருவிகள் வாழ்க்கையில் முழு நம்பிக்கை காண்கிறேன் -புது

3. வான வில்லின் வண்ணங்களில் உயர் வாழ்வு காண்கிறேன்-விடி
வெள்ளி சுடரின் பயணத்தில் உம் பிறப்பை நினைக்கிறேன்-புயல்
காற்று வெள்ளம் பூமி அதில் அச்சம் காண்கிறேன் - வேத
வசன தியானம் தொடரும் நேரம் அமைதி காண்கிறேன்-குளிர்

4. தூய கரங்கள் உயர்த்தி நானும் ஜெபிக்கும் போதிலே-தூய
ஆவி என்னை ஆற்றி தேற்றும் உண்மை காண்கிறேன் -துதி
பலிகள் செலுத்தி போற்றும்போது மகிழ்ச்சி காண்கிறேன்-அநு
தினம் தினம் உம் தூய பிரசன்னம் நிரம்ப காண்கிறேன் -புது

182. குட்டையில் ஊறிய மட்டைகள்

குட்டையில் ஊறிய மட்டைகள் தானுங்கோ - ஒரு
மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும்
முடிச்சு போட்டு அழகு பார்க்க
குட்டையும் நெட்டையும் சேர்ந்து போச்சுங்கோ

1. சர்ச்சுக்குள்ளே இருக்கும்போது ஆராதனை நடக்கும்போது
தேவதூதர் கூட்டம் தானுங்கோ - நாங்க
ஆசீர்வாதம் (பாஸ்டர் சொல்லி) ஐயா சொல்லி
ஆமென் போட்டு முடிச்ச பின்னே
குட்டி சாத்தான் கும்பல் தானுங்கோ - நாங்க
ஆலயத்தில் வாயில் பாட்டு
வாசலில் வாய்கெட்டு போச்சு
நெதம் இதே பொழைப்பாச்சுங்கோ - அட

2. CSI, CPM, பாப்திஸ்து பெந்தெகோஸ்து
உபதேசம் ஒத்துக்காதுங்கோ - ஒன்னுக்கொன்னு - எங்க.
அம்மா போட்ட சட்டம் ஒன்னு
ஆடிப்போச்சு எங்க கும்பு
முட்டி போட சேர்ந்து போச்சுங்க - கைகோர்த்து
சட்டம் இப்போ நீங்கி போச்சு
குளிர் பயம் விட்டு போச்சு
பழைய குருடி கதையாச்சுங்கோ - மறுபடி

3. மேடையேறி துள்ளி குதிக்குது வாய் தொறந்தா அனல் பறக்குது
குடும்பத்திலோ குழப்பம் தானுங்கோ - சிலர்
பசி தீர வந்து கேட்கும் ஏழை தட்டில் கை வைக்கும்
பிச்சைக்கார கூட்டமாச்சுங்கோ - நாகரீக
கடன் தீர ஜெபிக்க வந்தா
கை வைத்து ஜெபித்து விட்டு
கையேந்தும் நிலைய பாருங்க - இவர்

183. சந்தோஷம் இயேசுவே

சந்தோஷம் இயேசுவே
சமாதானம் இயேசுவே
செல்வமெல்லாம் இயேசுவே
சுகஜீவியம் இயேசுவே

1. கண்ணீர் துடைக்கும் இயேசுவே
செந்நீர் சிந்திய இயேசுவே
பண்ணீர் போன்ற தூய்மையான
அன்பு தந்த இயேசுவே

2. நித்திய ஜீவன் இயேசுவே
சத்திய ஜீவன் இயேசுவே
பத்திரமாக எங்களை காக்கும்
சத்திய தேவன் இயேசுவே

3. ஜீவ தண்ணீர் இயேசுவே
ஜீவபலி இயேசுவே
நிச்சயமாக மோட்சத்திலே
சேர்த்துக்கொள்ளும் இயேசுவே

4. கன்மலையாம் இயேசுவே
புகலிடமும் இயேசுவே
பாவம் போக்கி தூய்மையாக்கி
தாகம் தீர்க்கும் இயேசுவே

5. தாயைப் போல இயேசுவே
நல்ல மீட்பர் இயேசுவே
தந்தைபோல தோளின்மீது
ஏந்தி செல்லும் இயேசுவே

6. தலை மகனாம் இயேசுவே
தளபதியாம் இயேசுவே
களைத்துப் போகும் நேரத்தில் என்
இளைப்பாருதல் இயேசுவே

184. எந்தன் ஆண்டவர் இயேசுவே

எந்தன் ஆண்டவர் இயேசுவே
எனது வாழ்வும் இயேசுவே
எந்தன் ஆவி ஆத்ம சரீரம்
ஏற்றியும்மை போற்றுமே - எந்தன்

1. பிரியமில்லா ஆண்டுகள் - பெரும்
தீங்கு நாட்கள் வருமுன்னே
எந்திர ஒசை தாழ்ந்ததால் - தெரு
வாசல் கதவுகள் அடைக்குமுன்
சந்திர சூரியன் வான சுடர்கள்
வெளிச்சம் இருளாய் போகுமுன்
எனது மனமும் எனது சிந்தையும்
உம்மை நினைத்தே பாடுமே - எந்தன்

2. மழைக்குபின் முகில் திரும்புமுன் - சிலர்
அரைக்கும் எந்திரம் ஓயுமுன்
வீட்டு காவலர்தள்ளாடுமுன் - பெல
சாலிகள் கூனி வளையும் முன்
சன்னல் வழியே பார்க்கும் கண்கள்
இருண்டு குருடாய் போகும்முன்
கீதவாத்திய கன்னியர் பாடல்
அடங்கி போகுமுன் பாடுவேன் - எந்தன்

3. வாதுமை மரம் பூக்கும் முன் - மேட்டு
வழியில் அச்சம் தோன்றுமுன்
வெட்டுக் கிளியும் பாரமாகி - நம்
தட்டில் தீபனம் வற்றிடும் முன்
நித்திய வீட்டுக்கு போவதால் - சிலர்
புலம்பி வீதியில் திரியும் முன்
நித்திய ஜீவன் வாக்குகொடுத்த
சத்திய தேவனை பாடுவேன் - எந்தன்

4. வெள்ளி கயிறு கட்டு விட்டு - தங்க
கிண்ணி உடைந்து நசுங்கு முன்
ஊற்றின் அருகே சால் உடைந்து
துரவின் உருளை நொறுங்குமுன்
இவ்விதமாய் தான் இருந்த பூமிக்கு
மண்ணும் திரும்பி போகுமுன்
ஆவி தன்னை தந்தவர் பாதம்
சேறும் முன் உம்மை பாடுவேன் - எந்தன்

185. வழிவிடு வானமே

வானமே வழிவிடு
வேந்தன் இயேசு வருகிறார்
மேகமே புறப்படு
விரைவில் இயேசு வருகிறார் - வானமே

1. மின்னலைப்போல வருவார் - வான
தூதர்கள் காகளம் முழங்க
வானமும் பூமியும் அதிர்ந்திடவே
கிறிஸ்துவில் மரித்தவர் எழுந்திடவே
நாமும் எதிர் கொள்ளுவோம் - நம் இயேசுவை
நாளும் தொழுதிடுவோம் - வானமே

2. கள்ளனைப் போல வருவார் - நல்ல
பலன் எந்தன் கிரியைக்கு தரவே
மண்ணதின் சாயலை எறிந்திடுவோம்
விண்ணவர் சாயலை அணிந்திடுவோம்
இராச ராசனுடன் சிங்காசனம்
நாமும் அமர்ந்திடுவோம் - வானமே

3. மாப்பிள்ளைப் போல வருவார்
மணமகளாம் திருச்சபை ஏற்க
கறை திறையில்லாத கன்னிகையாய்
கரங்களில் தீபங்கள் ஏந்திடுவோம்
வாசல் திறந்திடுவார் நாம் ஆள - சிங்
காசனம் வழங்கிடுவார் - வானமே

186. மாறலாம் நீ மாறலாம்

மாறலாம் நீ மாறலாம்
முற்றிலுமாய் மாறலாம்
மாறவேண்டும் நீ மாறவேண்டும் - கிறிஸ்
தேசுவைப் போலவே மாறவேண்டும் - மாறலாம்

1. இரதத்துக்கு முன்னே ஓடும் எலியாவே
இரதத்திலும் ஏறலாம் - தங்க இரதத்திலும் ஏறலாம்
நீ பிலிப்புவாய் மாறினால்
கடலை பிளக்க கையில் கோலேந்தும் மோசே
கடல் மீதும் நடக்கலாம் அலைகடல் மீதும் நடக்கலாம்
நீ பேதுருவாய் மாறினால் - மாறலாம்

2. கோலியாத்தைக் கண்டு அஞ்சுகின்ற சவுலே
கூழாங்கல் போதுமே - சிறு கூழாங்கல் போதுமே
நீ தாவீதாய் மாறினால்
சிங்கத்தோடு சண்டையிட்டு சோர்ந்துவிட்ட சிம்சோனே
சிங்கத்தோடும் உலவலாம் கெபி சிங்கத்தோடும் உலவலாம்
நீ தானியேலாய் மாறினால் - மாறலாம்

3. பிள்ளைக்காய் புருஷனிடம் சண்டையிட்ட அன்னாளே
பிள்ளையை நீ ஏந்தலாம் இயேசு பிள்ளையை நீ ஏந்தலாம்
நீ எருசலை அன்னாளாய் மாறினால்
எடுபிடி வேலை செய்து முனுமுனுக்கும் மார்த்தாளே
நல்ல பங்கை அடையலாம் எடுபடா நல்ல பங்கை அடையலாம்
நீ மரியாளாய் மாறினால் - மாறலாம்

மாறுவோம் நாம் மாறுவோம் - நம்
இயேசுவைப் போலவே
நேற்றுமின்றும் என்றும் மாறிடாத - நம்
இயேசுவைப்போல் மாறுவோம்

187. சீயோனின் சிகரங்களில்

சீயோனின் சிகரங்களில்
பொதிகை தென்றல் மோதக் கண்டேன்
சாரோனின் பள்ளங்களில்
மதுரை மல்லி மலரக் கண்டேன்
கீழ்திசையின் ஞானமெல்லாம்
மேற்றிசையில் பரவக் கண்டேன்
இகமெங்கும் இயேசுவின் அன்பில்
இறைமாந்தர் இணையக் கண்டேன்
வந்தே மாதரம் வந்தே மாதரம் வந்தே மாதரம்

1. பாருக்குள் நல்ல நாடு - எங்கள்
பாரதிபாடிய பைந்தமிழ் நாடு
இமயமுதல் குமரி வரை
இயேசுவே தெய்வம் என முழங்க
பாரத நாடு நாம் அதன் புதல்வர்
மறந்திடவேண்டாம் தயங்கிடவேண்டாம் - வந்தே

2. இயேசுவை தொட்டு பார்த்தவனும் - கா
லாற நடந்துசென்ற செந்தமிழ் நாடு
இந்து தேசமென திருமறையும்
தெளிவாய் சொல்லும் சீர்மிகு நாடு
உயிர்கொடுத்தேனும் தாயகம் காப்போம்
இந்தியர் என்றே தலை நிமிர்ந்துரைப்போம் - வந்தே

3. இறைவனைத்தொழும் வழிமுறைகள் - இந்த
இகத்துக்கே தந்த இந்திய நாடு
இலக்கியங்கள் காப்பியங்கள்
இறை நெறிதந்த பெரும்புலவர்
வாழ்ந்த எம் நாடு வளமிகு நாடு
ஓங்கிடவேண்டும் உயர்ந்திடவேண்டும் - வந்தே

188. மகிழ்ச்சியான குடும்பம்

மகிழ்ச்சியான குடும்பம்
கடவுள் வாழும் நந்தவனம்
பொன்னும் பொருளும் வழங்கிடாத
அன்பும் அறனுக்கு உறைவிடம் - மகிழ்

1. கணவன் மனைவி அன்பிலே
புதைந்திருக்குது புது சுகம் - இவள்
கடவுள் கொடுத்த வெகுமதியென
அறிந்து கொண்டால் தனி சுகம்
விட்டுக்கொடுத்தால் இன்பம்
கொட்டி கிடக்குது எங்கும்
ஈருடலும் ஒருயிராய்
இணைவதுதான் இல்லறம் - மகிழ்

2. கணவன் வார்த்தைக்கு கீழ்படி - என்றும்
மகிழ்ச்சிக்கு அது முதற்படி-தன்
மனைவி சொந்த மாம்சமென்று
நேசிப்பதே முதற்பணி
வாழ்வு தாழ்வு எதிலும்
சுகத்திலும் சுகவீனம்
சபையும் கிறிஸ்தும் இணைந்ததுபோல்
உடலும் உள்ளமும் அர்ப்பணி - மகிழ்

3. வேதவசனம் படிப்பதும்
கரங்கள் கோர்த்து ஜெபிப்பதும்
தூய ஆவி பெலத்தினாலே
நிறைந்து சிலுவை சுமப்பதும்
தூயகரங்கள் உயர்த்து
சொந்த குடும்பத்தை நடத்து
தூய தேவன் துணையிருப்பார்
துன்பம் துயரம் விலக்கிடும் - மகிழ்

189. சிந்திக்கும் நேரம் சிந்திக்க மறந்தால்

சிந்திக்கும் நேரம் சிந்திக்க மறந்தால்
சிதறி போகும் வாழ்வு - அவர்
சிந்தை அணிந்திடில் சிதைந்த வாழ்வினில்
நுழைந்திடாது தீது

கட்டுக் கதைகளுக்கு சாய்ந்து போனாலே
சத்தியம் புரியாது கண்ணே - கெட்டுப்
போன மனிதருக்கு சிலுவை உபதேசம்
பயித்தியம் தானடி பெண்ணே

1. ஊசிமுனை காதுக்குள்ளே ஒட்டகத்தை நுழைத்திட
வாசன் 'ஐ' கேர் போனாலும் கூடுமோ
அலங்கோல வாழ்க்கையிதை மாற்றிட தினம் தினம்
கோலங்கள் தொடர் பார்த்தால் ஆகுமோ

நஞ்சுக்குள்ளே குடம் குடமாய்
பாலையூற்றி கலந்தாலும்
நஞ்சு நஞ்சுதானடா மனிதா
ஒரு குடம் பாலுக்குள்ளே
ஒளி துளி நஞ்சு விட்டா
அவ்வளவும் நஞ்சாகும் பாரடா

2. கவலை கண்ணீர் நிறைந்த பரிதாபம் மாற்றிவிட
அத்தி பூக்கள் தொடராலே கூடுமோ
மனது உடலுமன்றி குடும்ப அமைதியதை
கெடுக்கும் மது பழக்கம் ஆகுமோ

கலப்புள்ள சாராயம்
மெதுவாய் இறங்கினாலும்
பாம்பைப்போல கடிக்குமே மனிதா
அழுதாலும் புரண்டாலும்
தொழுதாலும் எழுந்தாலும்
தொலைந்தது மீண்டிடுமோ பாரடா

3. கோயில் குளம் சுற்றி வந்து ஆறு கடல் மூழ்கினாலும்
உன்னை தொட்ட பாவம் விட்டு போகுமோ
கர்ம வினை சாபக்கட்டு விக்கினங்கள் நீங்க - தான
தர்மங்கள் புரிந்தாலும் நீங்குமோ

தொட்டு தாலி தந்தவனும்
கைபிடித்த மனையாளும்
தந்த செல்வம் நிலையில்லை மனிதா
தன்னை தந்து உன்னை மீட்ட
இயேசுவை நீ ஏற்றுக்கொண்டால்
பாவம் சாபம் நீங்கிபோகும் பாரடா

190. குண்டு மல்லி

குண்டு மல்லி பூபூத்து பூமலரும் பாடுது
வண்டு வந்து தேன்குடித்து பூ மலரை பொழியுது
பெத்தலையில் இயேசு பிறந்தார்
பாவிகளை மீட்க பிறந்தார்

1. வானில் ஜோதி ஜொலித்திட வானகீதம் ஒலித்திட
   வேத வாக்கு பலித்திட தேச மாந்தர் களித்திட - பெத்
2. ஆயர்களும் கூடிட ஞானியர்கள் தேடிட
   வானவர்கள் பாடிட வான்மலரை தேடிட - பெத்
3. மாந்தரில் பிரியமாம் மன்னில் சமாதானமாம்
   உன்னதத்தில் தேவனுக்கு என்றும் மகிமை பெருகவே
   -பெத்
4. பாவ வினை போக்கிட சாபந்தனை நீக்கிட - தேவ
   கோபந்தனை மாற்றிட கோமகனும் சீலனாய் - பெத்

- பொன் இலாசரசு

191. உள்ளங்கை ஓவியம்

ஓவியமாய் என்னை
உள்ளங்கைகளில்
வரைந்தவரே உம்மை
போற்றிடுவேன்
குளிர் நிழலாய் உந்தன்
வலக்கர மறைவில்
மறைத்தவரே உம்மை
துதித்திடுவேன்
காத்திருப்பேன் உம் கிருபைகள் தொடர
பாத்திரமாய் என்னை மாற்றிடுமே

1. நீதி நிறைந்த உம் அரசினிலே எனக்கு
ஆசனம் அளிப்பீர் அமர்ந்திடுவேன்
தூதர்களை நியாயம் தீர்த்திடவே உரிமை
தந்தவரின் பதங்கள் பணிந்திடுவேன்
2. நீதியெனும் ஆடையணிந்திடுவேன் - என்
நேசரின் மார்பினில் சாய்ந்திடுவேன்
மாதங்கள் தோரும் புதுக் கனி வழங்கும்
ஜீவ மரங்கள் இடை உலவிடுவேன்
3. நீதியெனும் கனியை விதைத்திடுவேன் - அங்கு
நீதி சமாதானம் நிறைந்திருக்கும்
நீதியின் தேவன் ஜொலித்திடுமாலயம்
நீதியின் விருட்சமாய் நிலைத்திருப்பேன்

192. பாடுபட்டால் பலன்

பாடுபட்டால் பலனிருக்கு
உழைக்கும் போது உயர்விருக்கு
உண்மை என்றும் உறங்காதடா - இந்த
சத்தியத்துக்கு சில நேரம்
சங்கடங்கள் வரலாம் - என்றும்
பொய்மை இங்கு நிலைக்காதடா - உலகில்

1. உழைக்கும் எண்ணம் இல்லாதவன் உண்ணலாகுமா-இதை
மறந்தவனை மனிதன் என்று சொல்லலாகுமா
போதும் என்ற மனமிருந்தால் இழப்பு வந்திடுமா - இறை
பக்தியோடு வாழும்போது தீமை அண்டிடுமா - பாடு
2. வருத்தப்பட்டு பாரம் சுமந்து தவிக்கும் மனிதரே - தம்
சிலுவை சுமக்க மனமில்லாத சீடரானிரோ
கானாவூரின் கல்யாணத்தில் கனிரசமருந்தி
தானாய் முளைத்த மரமாய் கனி தரமறந்தீரோ -இங்கு-பாடு

3. உடுத்தும் உடை படுக்கும் இடம் தேடும் உலகிலே - நீ
கொடுத்திடாமல் கேட்டிடவே நினைப்பது தகுமோ
ஏற்பது இகழ்ச்சி ஆனால் கொடுப்பது புகழ்ச்சி - என
அமுக்கி குலுக்கி மடியில் சரிந்து விழும்படி பெறுவோம்-பாடு

4. ஊரை சுற்றி கடனை வாங்கி தவிக்கும் மனிதரே
உங்க கடனைதீர்க்க இயேசு இரட்சகர் இறங்கவேண்டுமோ
ஊருக்கெல்லாம் கடன் கொடுப்போம் வாங்காதிருப்போம்-ஊர்
ஏழைக்கிரங்கி இயேசவுக்கே கடன் கொடுத்திடுவோம்-பாடு

193. என் மேய்ப்பர்

என் மேய்ப்பராய் இயேசு
இருப்பதினால் நான்
தாழ்ந்து போவதில்லை
பசும் புல் வெளிகள்
அமர் நீர் அருகில்
என்னை மேய்த்திடுவார் - அநுதினம்

1. அவர் திருப்பெயர் காரணத்தால்
என் ஆத்துமம் தேற்றுகிறார் - தம்
நீதியின் பாதைகளில்
பிடித்தென்றும் நடத்துகிறார் - கரம்
பிடித்தென்றும் என்னை நடத்துகிறார் - என்

2. நான்சா நிழல் பள்ளங்களை
தினம் கடந்திட நேர்ந்தாலும் - பெரும்
தீங்கக்கு அஞ்சிடாமல்
தொடர்ந்துந்தன் வழி நடப்பேன் - நான்
தொடந்துந்தன் வழிகளில் நடந்திடுவேன் - என்

3. என் தெய்வம் என்னோடிருக்க
உம் கோலும் தடியும் தேற்ற
பகைஞர் கண்ணெதிரே
விருந்தொன்றை நடத்திடுவீர் - பெரும்
விருந்தொன்றை நடத்தி மகிழச் செய்வீர் - என்

4. மணம் கமழும் தைலம் ஊற்றி - என்
சிரசினில் முடி சூட்டி - என்
ஜீவிய காலமெல்லாம்
கலயங்கள் நிரம்ப செய்தீர் - எனை
நன்மைகள் கிருபைகள் தொடர செய்தீர் - என்

194. கொண்டாட்டமா திண்டாட்டமா

வேண்டாமையா இந்த கொண்டாட்டம்
குடும்ப தலைவனுக்கு டிசம்பர் மாசம்
வந்தாலே திண்டாட்டம்
பொண்டாட்டி புள்ளைகளக்கு
புது துணி எடுக்க - ஐயோ
அக்கம் பக்கம் கடன் வாங்க
கண்விழி பிதுங்கும்
பக்கத்து வீட்டுக்கு பலகாரம்
தட்டுகளில் பறக்கும் -புது
வருஷம் துவங்கும் நேரத்திலே
ஏனிந்த பதட்டம் - வேண்டாமையா

1. புள்ளைகளுக்கு பிறந்த நாளு வந்தா - புது
துணி எடுத்து அழகு பார்க்கும் நண்பா - அன்பு
மனைவியோட பிறந்தநாளு பரிசா - புது
புடவை எடுத்து கொடுக்கவேனும் தெம்பா
இயேசு நாதர் பிறந்த நாளு கோலாகலமா - அட
புது புதுசா துணியெடுத்து போட்டுக்கலாமா
சொல்வதொன்று செய்வதொன்று விளங்கவில்லையே
இந்த கிறிஸ்தவங்க போக்கு எனக்கு புரியவில்லையே

2. சுவருக்கெல்லாம் வெள்ளையடிக்க வேனும் - கதவு
சன்னல் மேசை நாற்காலிக்கு பெயின்ட் பூசவேனும்
சிக்கன் மட்டன் பிரியாணி மணக்கும் - அட
கலர் கலரா கேக் பொட்டலம் சிரிக்கும்
இன்னைக்கு மட்டும் ஆலயத்திலே லவுட் ஸ்பீக்கர் பாட்டும்-அட
இன்னைக்கு பாத்து ஒயின் ஷாப்புல ரொம்ப ரொம்ப கூட்டம்
வெள்ளை பேண்ட் சர்ட் போட்ட நடையிலென்ன வேகம்
வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறைப்போல இருப்பதிலென்ன லாபம்

195. இயேசுவோடு வாழ்வு

இயேசுவே
உம்மோடுதான் வாழ்கிறேன் - நான்
உம்மோடுதான் வாழ்கிறேன்

1. என் விரல் பிடிக்கும்
உம் கரம் எனை அணைக்கும்
உம் சுவாசம்
என் நாசியில் நுழையும்
என் சுவாசம்
உந்தன் வார்த்தைகள்
போதும் போதும்
மனம் நிறையும் - இயேசுவே

2. பலகணி வழியே
மலர் போல் முகம் தெரியும்
வெளிமான் போல்
மரையாட்டு குட்டிகளைப்போல்
என் நேசர்
மலைமேட்டின் மேல்
துள்ளி துள்ளி மான்போல்
வந்திடுவார் - இயேசுவே

3. நேசரைத் தேடி
நகரத்தில் நானலைந்தேன்
காவலர் தாண்டி
கொஞ்ச தூரம் கடந்தபின்னே
நான் கண்டேன்
என் நேசரை
தாயின் இல்லம்வரை
அழைத்து வந்தேன் - இயேசுவே

4. தலை தங்க மயமாம்
கன்னங்கள் வாசமலர்கள்
இதழ்கள் லீலி
வெள்ளை போளமதில் வடியும்
அவர் ரூபம்
லீபனோனைப்போல்
முழுவதும் அழகுள்ள
என் சிநேகிதர் - இயேசுவே

196. வாழ்ந்தது போதும்

வாழ்ந்தது போதும் - நீ
எனக்கு வேண்டும் - என
எடுத்துக்கொண்டீரோ - நீ
உழைத்தது போதும் - இனி
இளைப்பார வேண்டும் - என்று
சேர்த்துக்கொண்டீரோ - நெஞ்சோடு
அணைத்துக்கொண்டீரோ

அனுபல்லவி

கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் பாக்கியவான்கள் - முதற்
வரிசையிலே உயிர்த்தெழுந்து எதிர்கொள்ளுவார்கள்
என்னோடு அமர்ந்து கொள்வார்கள் - வாழ்ந்தது

1. நண்பர் இல்லையே அவர் நட்பும் இல்லையே
எதிரியில்லை எதிர்ப்புமில்லை எதுவுமில்லையே
சூரியன் கீழ் நடப்பதிலொரு பங்குமில்லை - இவர்
பேர் முதலாய் நினைவில் கூட இருப்பதில்லையே - எந்த
பலனுமில்லையே
- வாழ்

2. சூரியன் இல்லை சந்திரன் இல்லை
ஆட்டு குட்டி வெளிச்சம் தர இருள் அங்கு இல்லை
அழுகையில்லையே எந்த கவலையில்லையே-அங்கு
கொள்வனையும் கொடுப்பனையும் ஏதுமில்லையே - அந்த
தொல்லை இல்லையே
- வாழ்

2. முந்தின வானமும் முந்தின பூமியும்
ஒழிந்து போக சமுத்திரமும் இல்லாமற் போகும்
புதிய வானம் பூமி புதிய எருசலை நகரம் பரலோக
தேவன் இடத்தைவிட்டு இகத்தினில் இறங்கும் - அது
நமக்கென இருக்கும்
- வாழ்

3. நகரத்தின் நடுவில் நதிக்கரையோரம்
மாதந்தோரும் ஜீவ மரம் கனிகளை கொடுக்கும்
அதின் இலைகள் ஜனங்களுக்கு சுகம் அளிக்கும் - மிக
தெளிவான பளிங்கு நதி நகரத்தை நனைக்கும் - தூய
நகரத்தை நனைக்கும்
- வாழ்

197. நிரப்பிடுமே உம் ஆவியினால்

நிரப்பிடுமே உம் ஆவியினால்
பாரத தேசத்தை சந்திக்கவே
ஊற்றிடுமே உம் வல்லமையை
எழுப்புதல் தீ எங்கும் பரவிடவே
எரியட்டும் எரியட்டும் எழுப்புதல் தீ
பரவட்டும் பரவட்டும் தேசத்திலே

1. வறண்ட வனாந்திரம் செழித்திடவே
கடுவெளி களிப்புடன் மகிழ்ந்திடவே - இந்த
எதிரியின் சேனை கலங்கிடவே
ஏகமாய் ஜெயமென்று முழங்கிடுவோம் - என்றும்

2. அழிந்திடும் மாந்தரை சந்திக்கவே
ஆர்ப்பரிப்போடே எழுந்து செல்வோம் - இங்கு
திறப்பின் வாசலில் அணியணியாய்
பரிசுத்தர் கூட்டமாய் அணிவகுப்போம் - பெரும்

3. இந்திய தேசத்தின் எழுப்புதலை - எம்
கரங்களில் தந்தீர் நன்றி ஐயா - இனி
புறப்படுவோம் எம் இயேசுவுக்காய்
விளை நிலங்களிலே விதை விதைக்க - இந்த

4. வாழ்வோ சாவோ எது வரினும் - உம்
அன்பை விட்டேயெம்மை பிரிப்பவன் யார் - புவி
நித்திய மகிழ்ச்சி எம் சிரசினிலே
நீதியின் அரசரின் ஆட்சியிலே - எங்கள்

198. கல்வாரியே கல்வாரியே

கல்வாரியே கல்வாரியே - நான்
தங்கும் புகலிடமே
என் பாவம் தோஷம் நீக்கியே
மெய் வாழ்வை அளித்திடுமே - கல்

1. மெய்யாகவே என் மீறுதல் தன்மேலே ஏற்றவரே
பொய் வாழ்வை நம்பி மாய்ந்திடாமல் என்னை மீட்டவரே
என் காயங்கள் என் நோவுகள் முற்றாக நீக்கிடுமே
வீண் சோர்வுகள் அண்டாமலே கை மூடி காத்திடுமே - கல்

2. என் பாரம் நீங்கி போகவே இளைப்பாறலீந்தவரே
தூயாவியால் நிறைந்தும்மை எந்நாளும் பாடவே
ஐயா உன் பாதம் தேடினேன் தள்ளாத தெய்வமே
தூயாதி தூய தேவனே கைகூப்பி போற்றிடுவேன் - கல்

3. பையூரிலே ஈரைந்து மாதம் இருட்டினில் நானிருந்தேன்
பொய்யூரிலே இந்நாள்வரை ஏமாற்றம் நானடைந்தேன்
நெய்யூரும் பாதை காட்டியே கை நீட்டி அனைத்தவரே
மெய்யூரிலே நான் சேரவே மெய் பாதை காட்டிடுமே - கல்

199. தாயும் நீயே தந்தையும் நீயே

தாயும் நீயே தந்தையும் நீயே
நல்ல சிநேகிதனே
தன்னை தந்து என்னை மீட்ட
எனது மணவாளனே

1. உலகம் வெறுக்கும் உறவு கசக்கும்
தனிமை தவிக்க விடும்
உமது வசனம் எனது தியானம்
என்றும் இனிமை தரும்
கலங்கிடாமல் தயங்கிடாமல்
உமது பாதம் பின் தொடர்வேன்
அல்லேலூயா அல்லேலூயா ஆமென் அல்லேலூயா- தாயும்

2. சர்வ வல்லவரே
சந்தோஷத்துடனே
விண்ணப்பம் பொருத்தனை செலுத்திடுவேன்
தம்மை தாமே பலியிட்டதாலே பூரணரானவரே
போகும் வழியை அறிந்தவரென்னை
சோதித்தபின் பொன்னாய் விளங்கிடுவேன்

3. மாசில்லாதவர் குற்றமில்லாதவர்
வானங்களில் உயர்ந்தவர்
உம்மை எங்கே கண்டு சந்திப்பேன்
என்பதறிந்தால் நலமல்லவா
மாறிபோகாதென்றென்றும் நிலைக்கும்
ஆசார்யரானவரே - பிரதான

4. உத்தர மண்டலம் வெட்ட வெளியிலே
விரித்து பூமியை தொங்கவிடுவார்
உன்னத சீயோன் எனக்களித்திடவே
இறங்கி வந்திடுவார்
மண்ணின் சாயல் மண்ணுக்குள் வீசி
விண்ணவரோடு பறந்திடுவேன் - தாயும்

200. நான் பாடிய இலேசான காரியம்

இலேசான காரியம் நான் பாடினேன் - என்
அஸ்திபாரம் இயேசுவென்று நான் பாடினேன்
நடந்து நான் வந்த பாதையெல்லாம் - என்னை
சுமந்த நாதனென்று துதிபாடினேன் - இலேசான

1. என்ன கொடுப்பேன் என் இயேசுவுக்கு - என்னை
நேசித்ததேன் என்று சொல்லி பாடினேன்
நன்மை கிருபை என்னை தொடர செய்யும் - இயேசு
நல்லவர் நல்லவர் என புகழ்பாடினேன் - இலேசான

2. மனிதா மனிதா மானிட வாழ்வென்றும்
நிலைப்பதில்லையென்று அன்று பாடினேன்
கொஞ்சி கொஞ்சி பேசி மயக்கிடும் உலகில்
தஞ்சம் அவர் சிலுவை என்று பாடினேன் - இலேசான

3. ஐயோ ஐயோ நகரம் எரியுமென்றேன் - அன்று
நான் செய்த பாவங்கள் தெரியுதென்றேன் - இன்று
யார் யாரோ என்பாடல் தமதென்று சொல்லி வர
மன்னியும் இயேசையா என பாடினேன் - இலேசான

4. கேட்டதையெல்லாம் தருவார் இயேசு என்றேன் - எந்தன்
இதயம் சுமந்த காயம் குறைவு என்றேன்
மலரிதழ் மேலே பனிதுளிப்போலவர்
கல்வாரி அன்பில் உருகி பாடினேன் - இலேசான

5. நிலவும் வான்சுடரும் பாடுமென்றேன் - வீண்
சலனம் கொண்ட மனம் வாடுமென்றேன்
ஏழை என் மனமெங்கும் நிறைந்திருக்கும் - நம்
இயேசுவே ஆண்டவர் என்று பாடினேன் - இலேசான

201. உப்பு தின்னவன் தண்ணீர் குடிக்கனும்

உப்பு தின்னவன் தண்ணீர் குடிப்பான்
தப்பு செஞ்சவன் கண்ணீர் வடிப்பான்
நினைத்ததை நடத்திட நினைத்தாலும்
விதைத்ததை தானே அறுத்திடுவான்

1. பாவத்தின் சம்பளம் மரணம் வரும்
நீதியில் பசிதாகம் திருப்தி தரும்
இதய சுத்தம் இறைமுகம் காட்டும்
சாந்தகுணம் இகத்தை சுதந்தரிக்கும் - உப்பு

2. ஆவியில் எளிமை உள்ளவர்க்கு
ஆண்டவர் இராச்சியம் உரிமையன்றோ
நீதியின் நிமித்தம் பாடுபட்டால்
பரம தேசம் நமக்கு சொந்தமாகும் - உப்பு

3. அந்தரங்க ஜெபத்துக்கு பலன் மிகுதி
சந்தைவெளி வந்தனங்கள் வெறும் போலி
குன்றின் மீது கட்டப்பட்ட நகராவோம்
என்றென்றும் இகமெங்கும் ஒளிவீசுவோம் - உப்பு

202. உந்தன் பாதங்களில்

உந்தன் பாதங்களில் வீழ்ந்து கதறும் பாவியென்னை
நோக்கி பாரும் ஐயா
எந்தன் பாவம் நீங்க திரு சிலுவையில் வடிந்த
அன்பு போதும் ஐயா

செம்மையான பாதை என்னை நடத்தும்
உண்மை அன்பு வேறெங்கும் கிடைக்கும்

1. உலகத்தார் பாவங்கள் எண்ணாமலே
ஒப்புரவாக்கும் தேவனே
மீண்டும் ஒருமுறை தூக்கியெடுப்பீர்
சேற்றிலிருந்தென்னை உயர்த்திடுவீர் - செம்மை

2. மிகுந்த தாழ்மை சாந்தமும்
நீடிய பொறுமையும் உடையவராய்
ஒருவரையொருவர் அன்பில் தாங்கி
ஆவியில் ஒருமையை காத்துக்கொள்வோம் - செம்மை

3. முந்தின நடக்கை அகற்றிவோம்
பழைய மனிதனை களைந்திடுவோம்
உள்ளத்திலே புது ஆவிபெறுவோம்
புதிய மனிதனை தரித்துக்கொள்வோம் - செம்மை

4. கசப்பும் கோபமும் மூர்க்கமும்
கூக்குரல் தூஷணம் நீக்கிடுவோம்
மீட்பின் நாளுக்காய் முத்திரையாய் பெற்ற
தூயாவியை துக்க படுத்தாதிருப்போம் - செம்மை

203. இயேசு ராஜன் பேரை சொன்னால்

இயேசு ராஜன் பெயரை சொன்னால்
எத்தனை ஆனந்தம் - சொந்த
இரட்சகராக ஏற்றுக்கொண்டால்
எத்தனை பேரின்பம்

அவரை அறிவதே - எனக்கு
நித்திய ஜீவனே
தூய ஆவியே - என்னில்
நிரம்பி வழியுதே - தேவ

1. அழைத்தால் வருவார் அணைத்துக்கொள்வார்
ஆறுதல் தந்திடுவார்
நினைத்ததெல்லாம் செய்து முடிக்கும்
ஆற்றல் வழங்கிடுவார்
அவரைப் போல் ஒரு தெய்வமில்லை
அவனியில் எவரையும் கண்டதில்லை - இந்த இயேசு

2. வானத்திலிருந்து வந்தவர் - எம்
பாவத்தையெல்லாம் தீர்த்தவர் - நீல
வானத்தின்கீழே பூமியின் மேலே
எங்கும் உயர்ந்தவர்
வழுக்கி விழுந்தால் தூக்கிடுவார்
வலக்கரம் நீட்டி தேற்றிடுவார் - இந்த இயேசு

3. நம்பிக்கை தருவார் நடந்து சென்றால்
நிழலாய் இருந்திடுவார்
நான் செல்லும் படகு அசையாதிருக்க
நங்கூரமாகிடுவார்
நித்திய தேவா நின்திருபாதம்
நிதமும் நானும் தொழுதிடுவேன் - இந்த இயேசு

4. கேட்டால் கொடுப்பார்
ஜெபித்தால் தருவார்
தேவாதி தேவனவர்
கேளாததெல்லாம் வேண்டுவதெல்லாம்
ஏராளம் வழங்கிடுவார்
நம்பிக்கையோடே கேட்டிடுவோம்
நல்லவர் சித்தம் செய்திடுவோம் - இந்த இயேசு

5. மகிமையின் தேவன் மகத்துவராஜன்
மதில்கள் தாண்டிட செய்வார்
மாறாத தேவன் மறுரூபமாக்கி
மகிமையில் சேர்த்திடுவார்
முழுமனதுடனே துதித்திடுவோம்
முழங்கால்படியிட்டு முழங்கிடுவோம் - இந்த இயேசு

204. உம்மை ஆராதிப்பேன்

உம்மை ஆராதிப்பேன் துதிப்பேன் - தினம்
ஆர்ப்பரிப்பேன் களிப்பேன்
எந்தன் இயேசுவையே என் நேசரையே
ஆடிபாடி மகிழ்ந்திடுவேன்

சரணம்

1. என் தலைமேல் ஒரு தீபத்தையே
ஏற்றியவரை துதிப்பேன்
கன்மலைமேல் என் அடிகளையே
நிறுத்தினவரை துதிப்பேன்

2. மரண இருள் பள்ளதாக்குகளில்
உடன் இருந்தீர் துதிப்பேன்
காரிருள் பூமியை மூடிடினும்
காப்பவரை துதிப்பேன்

3. நீதியை ஆடையாய் கொடுத்தவர்
தினம் தினம் துதித்திடுவேன்
நியாயத்தை சால்வை பாகையுமாய்
தரித்தவரை துதிப்பேன்

4. வானத்தில் நிலைக்கும் திருவசனம்
உணர்ந்தே துதித்திடுவேன் - என்
பாதைக்கு வெளிச்சம் திருமறையே
பரிசுத்தரே துதிப்பேன்

205. கால்கள் சறுக்கும்போது

எனது கால்கள் சறுக்கும்போது
உமது கிருபை தாங்குதே
உலகம் என்னை வெறுக்கும்போது
உமது அன்பெனில் பெருகுதே
தமது கிருபை தீயன் நானிங்கு
தளரும் போதென்னில் நிறையுதே

சரணம்

1. இருண்ட காலம் உம்மை நோக்கி
அபயம் என்றே கூப்பிட்டேன்
இக்கட்டுகளுக்கு நீங்கலாக்கி
இரட்சிக்க கரங்களை நீட்டினீர்
அந்தகாரம் மரண இருளின்
கட்டுகள் அறுத்து விடுவித்தீர்
அதிசயம் ஆ உமது கிருபை
நிமித்தம் உம்மை துதிக்கிறேன்

2. தவனமுள்ள ஆத்துமாவை திருப்தியாக்கி நடத்துவீர்
பசித்த உள்ளம் நன்மையாலே நிரம்பி வழிந்திட செய்கிறீர்
வெண்கல கதவுகள் உடைந்திடும் இருப்பு தாழ்கள் முறிந்திடும்
வசனம் அனுப்பி அழிவை விலக்கி தேசம் செழிப்பாய் மாற்றுவீர்

3. எளியன் எந்தன் சிறுமை மாற்றி உயர்ந்த அடைக்கலம் அமர்த்தினீர்
நியாயகேடு வாயைமூட உத்தமர் அதை கண்டு மகிழுவார்
நடக்கும் வழியை வெளிச்சமாக்கி செம்மை பாதையில் நடந்திட
எனக்கும் கிருபை தந்த தேவா ஓடி முடித்திட அருளுமே

206. சிந்திப்போம் செயல்படுவோம்

சிந்திப்போம் சிந்திப்போம் செயல்படுவோம்
உழைப்போம் உழைப்போம் உயர்ந்திடுவோம்
இனி காலம் செல்லாது இந்த உலகம் நிலைக்காது

சரணம்

1. துணிவிருந்தால் தேன் கூடுகளும்
மனிதர்க்கு அரண்மனைதான்
மனமிருந்தால் மைனாவின் கூடுகளும்
புள்ளிமானுக்கும் புகலிடம்தான் - நீ
முதலடி எடுத்தால் வலகரம் பிடிப்பார்
வழுவாமல் காத்திடுவார் - பெருங்
கடல் மேல் நடந்து அலைகளை மிதிப்போம்
அவரென்று துணையிருப்பார் - சிந்திப்போம்

2. கடுகளவேனும் விசுவாசமிருந்தால்
மலைகளை புரட்டிடலாம் - மன
கண்களைத் திறந்தால் மாராவின் கசப்பை
மதுரமாய் மாற்றிடலாம் - கொஞ்சம்
தைரியம் இருந்தால் கூழாங்கல் போதும்
எதிரியை வீழ்த்திடலாம் - நம்
சேனையின் தேவன் கூட இருக்கிறார்
ஜெய கொடி ஏற்றிடலாம் - சிந்திப்போம்

3. வானமும் பூமியும் ஒழிந்தே போகும்
ஒழியாதவர் வசனம் - என்றும்
அவரது வசனம் அதிசயம் செய்யும்
அதற்கே அடிபணிவோம் - அவர்

இங்கே இருக்கிறார் அங்கே இருக்கிறார்
என்போரை புறக்கணிப்போம் - மண
வாளனும் கீழ் வானில் தோன்றிடும் நாளும்
நெருங்குது விழித்திருப்போம் - சிந்திப்போம்

207. முன்னனையிலா நடுவானிலா

முன்னனையில் இயேசுவை பாலனாய்
சந்திப்பது மகிழ்ச்சியா - நடு
வானில் அவரை மணவாளனாய்
சந்திப்பது மகிழ்ச்சியா

விழி விழி விழி விழி திருச்சபையே
பழி பழி பழி பழி விலக்கிடவே

சரணம்

1. பண்டிகை கொண்டாடும் பாருலகே - அவர்
பார்வையில் பரிசுத்தம் எங்கே - பெரும்
நிதிவழங்கும் கனவான்களே - அவர்
கேட்கும் நீதி எங்கே
பரிசுத்தம் இல்லாமல் தரிசனமா - தேவ
நீதி இல்லாமல் சுயசித்தமா - விழி விழி

2. காணிக்கை செலுத்தும் கண்மணியே - அவர்
கேட்கும் கனிகள் எங்கே - தினம்
துதித்து ஆர்ப்பரிக்கும் சேனையே - அவர்
விரும்பும் கீழ்படிதல் எங்கே
கனியில்லா கொடிகள் அறுந்திடுமே - கீழ்
படிதல் அவர் சமூகம் விரும்பிடுமே - விழி விழி

3. விருந்து கொண்டாட்டம் வேடிக்கைகள் - தினம்
அருந்தி மகிழும் என் தோழரே - கண்ணை
பறிக்கும் வெளிச்சத்தில் மின்னும் மேடையில்
தாழ்மையும் அமைதியும் உண்டா
தேவ ஆவி இல்லாமல் துதி பலியா
தூய ஆவி இல்லாமல் குதுகலாமா - விழி விழி

208. மாய உலகம்

ஆடையணிந்த சிலை அசைந்திடுமோ
மாலையணிந்த படம் மணம் தருமோ
கிழக்கில் தோன்றுகின்ற காலை சூரியன்
மேற்கில் உதித்து வருமோ - திரும்பவும்
மாய உலகமிது மாயமனிதர்கள்
வாழும் புவனமிதுதான் - பொய்
பேசி பழகி அதில் ஊறி திளைத்துவிட்ட
தீய மனிதர் இவர்தான் - கொடிய

1. நதிகள் சேர்ந்து நீல கடலில் சேர்ந்தாலும்
சமுத்திரம் நிரம்பிடுமோ
வடக்கு நோக்கி தென்றல் சுழன்று அடித்தாலும்
திரும்பாமல் இருந்திடுமா
காற்று சூரியன் கடலின் அலைகளும்
தானாக இயங்கிடுமோ - அவர்
படைத்த படைப்புகளும் படைத்தவர் வாக்கினை
மீறி தவறிவிடுமோ - என்றும்

2. சேவல் கூவி காலை பொழுது விடியுமோ
கதிரவன் எழும்பிடுமோ - பல
கோடி கோடியாய் கரங்கள் மறைத்தாலும்
ஆதவன் இருண்டிடுமோ
கடின பாறைகள் சிறிய விதையொன்றின்
வேரினை தடுத்திடுமோ - ஒரு
சொல்லை அவர் உரைக்க அண்டசராசரம்
அடங்காமல் இருந்திடுமோ - அவர் சொல்

209. ரெண்டு மடங்கு வேண்டும்

ரெண்டு மடங்கு கொடுக்க வேணும் கர்த்தாவே
என் வாழ்கைய - நீங்க
கண்டுகிடாம இருக்கவேனும் கர்த்தாவே
உந்தன் சித்தம் நினைச்சாலே இதயம் நடுங்குது
எந்தன் சித்தம் நடக்கனும்னு மனசு விரும்புது

சரணம்

1. இயேசு நடந்த பாதையிலே சிலுவை தெரியுது
உலகம் காட்டும் பாதையிலே மயக்கம் இருக்குது
பரிசுத்தமாய் வாழனும்னு வேதம் சொல்லுது - இந்த
பாவ உலகம் உடும்புபோல என்ன இழுக்குது
வேண்டாம் வேண்டாம் கர்த்தாவே
ரெண்டு மடங்கோ பத்து மடங்கோ
உலகம் வேண்டாம் கர்த்தாவே

2. மாதந்தோரும் அற்புத கூட்டம் ஊரில் நடக்குது - நாங்க
வேத புத்தகம் படிச்சு ரொம்ப நாளாச்சுது
தெரு தெருவா வீட்டினில் ஜெப கூட்டம் நடக்குது - ஆனால்
தனிமையிலே ஜெபிக்கும் வழக்கம் கொறஞ்சி போச்சுது
வேண்டாம் வேண்டாம் கர்த்தாவே
தனிமை ஜெபம் இல்லாத இந்த
வாழ்க்கை வேண்டாம் கர்த்தாவே

3. அபிஷேக கூட்டத்துக்கு ஆயிரங்கூடுது - இங்கு
உபவாச ஜெபம் வெச்சா கூட்டம் கொறையுது
தங்க சாவி எண்ணெய் குடுவை வாங்கி குவிக்குது - நம்ம
தங்க சாமி சொன்ன வார்த்தை மறந்து போச்சுது
வேண்டாம் வேண்டாம் கர்த்தாவே
சிலுவை இல்லா சுகபோகம்
எனக்கு வேண்டாம் கர்த்தாவே
ரெண்டு மடங்கு எனக்கு வேணும் கர்த்தாவே - ஜெபிக்கும் ஆவி
நூறு மடங்கு கொடுக்க வேணும் கர்த்தாவே - எனக்கு நீங்க

210. தேனும் திணைமாவும் இனிப்பதில்லை

இயேசு என்றாலே
தேனும் திணைமாவும் நாவினில் இனிப்பதில்லை
இகமெங்கும் இயேசுவின்
புகழினை நான் பாட உடலும் உள்ளமும் களைப்பதில்லை
நாசியிலே சுவாசம் தந்தவரைப் பாட
வேதமும் கீதமும் இணைந்த என் பாடலில் நாதம் குறைவதில்லை
சஞ்சலங்கள் தீர்க்கும் தலைவா சரணம்
அஞ்சலென்றருள்வாய் இறைவா சரணம் சரணம்
சரணம்

1. பெருங்கடல் நடுவில் கடும்புயல் நேரம்
படகிலும் இருப்பார் கடலிலும் நடப்பார்
ஒரு விரல் நீட்டி காற்றும் கடலும்
அமரச்செய்வார் - நான்
சாற்றிடும் துதிகள் ஏற்றிடவே - மனம்
இரங்கித் தம் கிருபை ஊற்றிடுவார் - இயேசு

2. வறண்ட வனாந்திரம் வானத்தை திறப்பார்
வானவர் தானியம் காடையும் தருவார்
மரக்கிளை வீசி மாராவின் கசந்த நீர்
மதுரமாய் மாற்றிடுவேன் - நான்
நெடுந்தொலை நடக்க நிழல் தரும்மேகமாய்
நெடும்பகை அனுகாதிடை வந்து தடுப்பார் - இயேசு

3. மிகு கனி கொடுக்கும் கொடியென இலங்க
தகுதியெனில் விளங்க தூய்மையுமளிப்பார்
தமயனாய் மாற்றி தமக்கென யான் பிழைக்க
தருவினிலுயர் கொடுத்தார் - இந்த
இகத்தினிலிவர் புகழ் இனிதாய் பாடிட
எனக்கொரு வரமருள் புரிந்தெனை காப்பார் - இயேசு

211. இயேசு என்னும் இனிதான நாமம்

இயேசு என்னும் நாமம்
இணையில்லா நாமம்
காசினி மீதிலொரு
மாசிலா நாமம்

1. கல்விக் கண்ணை திறந்து கற்றறிய நூலும் தந்து
நன்னிய நாகரீகம் நன்னெறிகள் சொல்லித் தந்து
நானிலம் மீது நம்ம நாடு தலை நிமிர்ந்து
நிற்க செய்தது எங்கள் இயேசுவின் நாமம் - இயேசு

2. அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பதெற்கு என்று சொன்ன
அடிமை தளையுடைத்து பெண்ணுக்கும் உரிமை தந்து
செத்தவன் பிணத்துடனே செந்தீயில் தள்ளி எரித்த
உடன்கட்டை உடைத்ததெங்கள் இயேசுவின் நாமம்-இயேசு

3. தாயத்து மந்திரங்கள் பாம்பாட்டி மாய வித்தை
கண் கட்டி குட்டி சாத்தான் இரத்தம் கக்கிச் சாவாய் என்று
ஏமாற்றி உந்தன் பையில் எஞ்சிய பொருள் பறித்த
கூட்டம் விரட்டியது இயேசுவின் நாமம் - இயேசு

4. பள்ளன் பறையன் என்று பாதகர் வகுத்த விதி
சூத்திரன் சண்டாளன் என்று சாத்திரங்கள் செய்த சதி
தொட்டாலே தீட்டு ஐயோ பட்டாலே பாவம் என்று
பூட்டிய விலங்கொடித்த இயேசுவின் நாமம் - இயேசு

5. வந்தாரை வாழவைக்கும் செந்தமிழ்/இந்திய திருச்சபையே
மந்தாரைப் பூவைப்போல உந்தன் மனம் மாறலையே
நின்றால் நிமிர்ந்தாலும் இயேசு துரை நம் துணையே
உள்ளதை சொல்லிபோட்டேன் வியாசர் எந்தன் பாட்டினிலே
- இயேசு

212. எழும்பு தேவ சேனையே

தேவ சேனையே எழும்பிடு
இயேசு ராஜன் வருகிறார்
அவர் வருகைக்குள்ளே இந்த தேசமதில்
சுவிசேஷம் எங்கும் சொல்லுவோம்
எங்கள் இராஜா இயேசுவே
எங்கள் வேந்தன் இயேசுவே

1. ஜெய கிறிஸ்து நம்முன் செல்ல
ஜெயகொடி ஏந்தி பின் நடப்போம்
ஜெய கீதங்கள் எங்கள் வாய் முழங்க
ஜெயம் ஜெயம் என்றென்றுமே - எங்கள்

2. மரண பரிகாரியாகி
ஜீவன் அழியாமை வெளியாக்கி
இயேசு கிறிஸ்து பிரசன்னரானார்- இந்த
செய்தி எங்கும் சொல்லுவோம் - எங்கள்

3. நித்திய ஜீவன் பற்றிக்கொள்ளவே
பொக்கிஷமாய் நல் ஆதாரம்
ஞானமென பேர்பூண்ட கொள்கை விபரீதம்
வேகமாய் விலக்கி ஓடிடுவோம் - எங்கள்

4. உண்ணவும் உடுக்கவும் போதுமென்போம் - ஏதும்
போதும் என்ற மனம் ஆதாயம் - இந்த
உலகம் வெந்தழிந்தே போனாலும் - புது
வானமும் பூமியும் நமக்கிருக்கும் - எங்கள்

213. ஆட்டு குட்டியானவரின் கலியாணம்

ஆட்டு குட்டியானவரின் கலியாணம்
அதுக்கு இப்போ நீங்க தயாராகனும்
மணவாளன் இயேசுதான்
மணப்பொன்னு நாமதான்
மேளதாளம் மேகத்திலே
வானதூதர் காணத்திலே - ஆட்டு

சரணம்

1. ஏதேனிலே கலியாணம் எப்போ நடந்தது - அது
எப்படி நடந்தது - அந்த
இரகசியத்தை தெரிஞ்சிக்கொள்ள மனசு துடிக்குது - என்
மனசு துடிக்குது
தனிமை தீமையென்ற தத்துவத்தை துவக்கி வெச்சு
துணையுடன் சேர்ந்திருக்க இனிதாய் வாழ்ந்திருக்க
மனைவி கரம் பிடிச்சி வாழ வெச்சாரு - சொந்த

2. கானாவூரு கல்யாணத்திலே என்ன நடந்தது - அற்புதம்
எப்படி நடந்தது - அந்த
ஆறு ஜாடி தண்ணீர் எப்படி இரசமாச்சுது - அது
எப்படி ஆச்சுது
மணம் நிறம் ருசியில்லாத வாழ்க்கையதான் மாற்றிடவே
இதயம் திறந்தாலே இனிமை கூடிடுமே
இயேசுவுடன் இணைந்தே நாம் வாழ்ந்தால் போதுமே - என்றும்

3. சொந்த இரத்தம் பரிசமாக சிந்தி கொடுத்தாரு - குருசில்
சிந்தி கொடுத்தாரு
இரட்சகராம் இயேசுசாமி எனக்காய் வந்தாரு - இங்கு
எனக்காய் வந்தாரு
இருமனம் ஒருமனமாய் வாழ்வதுதான் திருமணமாய்
இறைவன் இதயத்திலே இடமெமக்களித்திடவே
உடன்படிக்கை ஒன்று செஞ்சிவெச்சாரு - புது

அருட்கலைஞர் **வியாசர் S. லாரன்ஸ்**

இவரைப் பற்றி...

அருட்கலைஞர் வியாசர் S. லாரன்ஸ் அவர்கள் ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவ பெற்றோரின் மூத்த மகனாய் பிறந்து சிறுவயது முதல் கிறிஸ்தவ பக்தி நெறியில் வளர்க்கப்பட்டவர் ஆவர். மகாகவி H.A. கிருஷ்ணபிள்ளையின் சிஷ்யைகளில் ஒருவரான ஆமைக்குளம் வேதாகம தாய் என்றழைக்கப்பட்ட மேரி அம்மையார் இவரது தாய்வழிப் பாட்டியாவார். சத்திய திருமறையை கற்றறிந்து முழு திருமறையையும் தன் விரல் நுனியில் வைத்திருப்பவர். இவரது தந்தை போதகர் ஸ்டீபன் ராஜேந்திரன், A.C.A. தலைமை சபையில் வேதாகம தாயாக பணிபுரிந்து மறைந்த திருமதி விக்டோரியா இவரது தாய் ஆவார்.

சிறுவயதிலேயே பாடல் புனையும் வரம் மட்டமின்றி இசையமைத்த இனிய குரல் பாடுவது இறைவன் இவருக்களித்து சிறப்பான வரமாகும். இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இசை வழி நற்செய்தி ஆற்றி வரும் இவரது பாடல்கள் செய்திகளாய் இறைவன்பால் ஈர்க்கப்பட்டு நற்செய்தியாளர்களாக போதகர்களாக மாறியோர் பல்லாயிரவராவர். ஒருமுறை இவரது பாடல்களைக் கேட்ட கத்தோக்க ஆயர் ஒருவர் "ஆலய கூடாரங்களில் அடங்கிவிட்ட கிறிஸ்தவ இசையை வயல் நாற்று நடும் பாமரனுக்கும், கிறிஸ்தவரல்லாதோருக்கும் கொண்டு வந்தவர் இவர்" என்று பாராட்டியது குறிப்பிடத்தக்கதாகும். ஏராளமான பாடல்களைப் புனைந்துள்ள இவர் இயற்றி இசையமைத்து பாடிய **"லேசான காரியம்"** என்ற பாடலை முனுமுனுக்காத கிறிஸ்தவர்களே இல்லை என்றே கூறலாம். இன்றைய நாளளவும் பட்டித்தொட்டி கிராமங்களிலெல்லாம் நுழைந்து பிற சமயத்தவரும் கவனிக்கும் வண்ணம், வில்லுப்பாட்டு, கதாகாலட்சேபம், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் இறைப்பணியாற்றி வரும் இவரை உங்கள் ஜெபங்களாலும், மனமுவந்த நன்கொடைகளினாலும் உற்சாகப்படுத்துவது அவசியமாகும். மேலும் பல பாடல்களை எழுதவும், புத்தகங்கள் வெளியிடவும் வாழ்த்துகிறோம். நீங்களும் ஜெபியுங்கள், உதவி செய்யுங்கள்.

- பதிப்பகத்தார்.

Eva. S. Viyasar Lawrence

Kanmalai

Raagangal



- எமது பணிகள்
- இறையியல் வகுப்புகள்
- இளைஞர்களுக்கு நற்செய்தி பணிகளில் பயிற்சி
- இசை பயிற்சியளித்து, தகுந்த வாய்ப்புகள் வழங்குதல்
- இசை வழி நற்செய்தியை வில்லுப்பாட்டு, கதாகாலட்சேபங்கள், இசை நிகழ்ச்சிகள் வழியே கிரமங்களில் பரப்புதல்
- இசை பேழைகள், இசை குறுந்தகடுகள் வெளியிடுதல்
- இணையதளங்கள், ஊடகங்கள் வழியே நற்செய்தி அறிவித்தல்
- இலக்கிய வெளியீடுகள் மூலம் இறையியலை அறிவித்தல்
- ஆதரவற்ற சிறுவர், முதியோர் பராமரிப்பு பணிகள்

சிநேகிதர்

ஜெப தொடர்புக்கு :

சகோ. வியாசர் லாரன்ஸ்

12, ஸ்டீபன்சன் சாலை,
வியாசர்பாடி, சென்னை – 600 039.
செல் : 07871757171

Produced by
WORD OF THE LORD
HOLY BIBLE CENTRE
NO.119|SEMATHAMMAN NAGAR
III SECTIOR|KOYEMBEDU|CHENNAI-6000 107

வேர்ட் ஆஃப் தி லார்டு
ஹோலி பைபிள் சென்டர்
119|சேமாத்தம்மன் நகர்|3வது செக்டார்
கோயம்பேடு|சென்னை– 600 107

Phone: 044-24799266|Cell: 9380338629|9677087728|E-mail: anburaj75@gmail.com